கல்லடி உப்போடை, நொச்சிமுனை

# ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய

## மகா கும்பாபிஷேக சிறப்பு மலர்

30-01-2020



**ஆலய பரிபாலன சபை**

கல்லடி உப்போடை, நொச்சிமுனை,

மட்டக்களப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லடி உப்போடை, நொச்சிமுனை

# ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய
# மகா கும்பாபிஷேகம்

30 - 01 - 2020



# சிறப்பு மலர்

ஆலய பரிபாலன சபை
கல்லடி உப்போடை, நொச்சிமுனை,
மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**கல்லடி உப்போடை, நொச்சிமுனை**
**ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய மகா கும்பாபிஷேகம்**
**சிறப்பு மலர்**


**வெளியீடு**
ஆலய பரிபாலனசபை
கல்லடி உப்போடை, நொச்சிமுனை, மட்டக்களப்பு

**பதிப்பு**
2020 பங்குனி

**அச்சுருவாக்கம்**
வணசிங்கா அச்சகம், மட்டக்களப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இராமகிருஷ்ண மிஷன் ஆசிரம
சுவாமிகளின்

# ஆசிச்செய்தி

கிழக்கிலங்கையின் புகழ் பெற்ற ஆலயங்களில் ஒன்றான கல்லடி - உப்போடை, நொச்சிமுனை ஸ்ரீ சித்தி விநாயகப் பெருமான் ஆலய மஹா கும்பாபிஷேக நிகழ்வானது கடந்த 30.01.2020 அன்று மிகவும் சிறப்பாக நடைபெற்றது. அந்நிகழ்வை முன்னிட்டு கும்பாபிஷேக சிறப்பு மலரொன்றை வெளியிட உள்ளதை அறிந்து வாழ்த்துரை வழங்குவதில் மகிழ்ச்சி.

"மதம் என்பது மனிதனிடம் ஏற்கனவே இருக்கின்ற தெய்வீகத்தை வெளிப்படுத்துவது" என்கிறார் சுவாமி விவேகானந்தர். மேலும் அவர் "நம் நாடு இன்னும் வாழ்ந்து வருகிறது ஏனெனில் அது கடவுள், மதம், மற்றும் ஆன்மீக கருவூலங்களைக் கைவிடாமல் பிடித்துக் கொண்டிருக்கின்றதால்" என்றார்.

இதற்கேற்ப இவ் ஆலயத்தின் பூர்வீகம், கீர்த்தி, மகிமை என்பவற்றை நமது எதிர்கால சந்ததியினரும் அறிந்து கொள்ளும் வகையில் மலர் தயாரித்து ஆவணப்படுத்த வேண்டுமென ஆலய நிர்வாகத்தினர் தீர்மானித்துள்ளது வரவேற்கத்தக்கதாகும்.

கும்பாபிஷேக மலர் வெளியீட்டுப் பணிகள் செவ்வனே நடைபெற, மலர் வெளியீட்டுடன் தொடர்புள்ள அனைவருக்கும் இறைவன் அருள்புரிய வேண்டுமென தெய்வத் திருமூவரின் நல்லாசிகளை வேண்டிக் கொள்கின்றோம். மேலும் கோயில்கள் வழிபாட்டுத் தலங்களாக மட்டுமல்லாமல் நமது இந்து மதத்தை மக்களிடையே பரவச் செய்யும் செயற்தலங்களாகவும் விளங்கச் செய்தல் வேண்டும். அத்துடன் இந்து மதப் பாடங்களை சிறார்கள் மற்றும் பெரியோருக்கு எடுத்துரைக்க ஆவன செய்ய கேட்டுக் கொள்கின்றோம்.

என்றும் இறைபணியில்,

**சுவாமி தக்ஷஜானந்தர்**

பொது முகாமையாளர்,
இராமகிருஷ்ண மிஷன் ஆசிரமம்,
சிறுவர் இல்லம், மட்டக்களப்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கும்பாபிஷேக
பிரதிஷ்டா சிவாச்சாரியாரின்

# ஆசிச்செய்தி

திருவும் கல்வியும் சீரும் தழைக்கவும்
கருணை பூக்கவும் தீமையைக் காய்க்கவும்
பருவமாய் நமதுள்ளம் பழுக்கவும்
பெருகுமாழத்துப் பிள்ளையைப் பேணுவாம்.

கல்லடி - உப்போடை, நொச்சிமுனை ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயம் நூற்றாண்டு கால பழமையும், பெருமையும் வாய்ந்தது. 1925 - 1927 காலப்பகுதியில் "மாப்பிள்ளைக் குருக்கள்" என்று பொதுமக்களால் அன்போடு அழைக்கப்பட்ட எமது பாட்டனார் சிவஸ்ரீ இரத்தின சபாபதிக் குருக்கள் ஆலயத்தின் பிரதம குருவாக கடமை புரிந்தார்.

அதன் பின் சில கால இடைவேளையில் எமது தகப்பனார் சிவஸ்ரீ கருணாகரேஸ்வரக் குருக்கள் அவர்கள் 1948ம் ஆண்டு முதல் இவ்வாலயத்தின் பிரதம குருவாகக் கடமை புரிந்தார். 1988ம் ஆண்டு ஆலயக் கும்பாபிஷேகத்தைத் தனது தலைமையில் நடத்தி வைத்தார்.

இப்படியான பாரம்பரியத்தைக் கொண்ட ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தின் மஹா கும்பாபிஷேகத்தினைப் பிரதம குருவாக இருந்து நடத்தி வைக்கும் பேறு கிடைத்தது எம்பெருமானின் திருவருளும் பெற்றோரின் ஆசியுமே.

பன்னிரெண்டு வருடங்களுக்கொருமுறை ஆலயத்தைப் புனருத்தாரணம் செய்து கும்பாபிஷேகம் செய்வது வழமையாகும். அந்தச் சமயத்தில் தேவையான முறையில் திருத்தங்கள் செய்து புது மெருகூட்டுவதும் வழக்கமாகும்.

இப்படியாக புதுமெருகூட்டி சிறப்பாக அமைக்கப்பட்ட இந்த ஆலயம் சிறந்த வர்ணப் பூச்சுக்களாலும் சிற்பங்களாலும் மனதைக் கவரும் வண்ணம் அமைந்துள்ளது.

எம்பெருமானது அருளாலும் அருகிலிருந்து அருள் புரியும் பேச்சியம்மன் அருளாலும் கருணை என்னும் கரத்தினையுடைய கருணாகரப் பெருமானதும் அன்னை காமாக்ஷியினதும், எனது மானசீகக் குருவான காஞ்சி மஹா பெரியவரின் பாதம் பணிந்து இந்த ஆலய கும்பாபிஷேக மலருக்கு ஆசியுரை வழங்குவதுடன் அனைத்து மக்களுக்கும் அவர்கள் திருவருள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

'மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்'

**கருணாகர மகேஸ்வரக் குருக்கள்,**
இந்து சமய சிவாச்சாரியார், இந்து சமய தர்மாச்சாரியர்,
ஓய்வு பெற்ற ஆங்கில ஆசிரியர், மட்/ இந்துக் கல்லூரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்தானிக பிரதம குரு

# ஆசிச்செய்தி

ஈழமணி திருநாட்டில் இந்திர திசையில் மீன்பாடும் தேனாடாம் மட்டுமாநகரில் கலையும் கல்வியும் தானமும் தர்மமும் தமிழும் சைவமும் சிறப்புற்றோங்கும் கல்லடி - உப்போடை நொச்சிமுனை பதியால் அன்னையவள் பேச்சியம்மன் அருகில் வேண்டுவர்க்கு வேண்டுவன அருளும் எங்கள் முழுமுதற்கடவுளாம் இஷ்ட சித்தி விநாயகருக்கு இறை அருளும் குரு அருளும் கூடி 30.01.2020 அன்று சிறப்பான முறையில் கும்பாபிஷேகம் நடைபெற்று முடிந்ததையிட்டு பெருமகிழ்வடைகின்றேன்.

நாள் 2011 ஜனவரி 15 அன்று இவ் ஆலயத்தில் நித்திய நைமித்திய கிரியைகள் செவ்வனே நிறைவேற்ற ஆலய பிரதம குருக்களாக பொறுப்பேற்றது முதல் இன்றுவரை கடந்த 09 வருடங்களாக பொது மக்களும் ஆலய உபயகாரர்களும் பொது மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஆலய அறங்காவலர் (நிர்வாக சபை) உறுப்பினர்களும் எனக்கு தந்த பரிபூரண ஒத்துழைப்பால் ஆலய பிரதம குருவாக சிறப்பான பணியை எம்பெருமானுக்கு சேவையாற்றிக் கொண்டிருக்கின்றேன்.

2016ம் ஆண்டு பாலஸ்தாபனம் செய்யப்பட்டு மிகச்சிறப்பான முறையில் ஆலயத்தை புனர்நிர்மாணம் செய்யப்பட்டு இவ்வருடம் தை மாதம் மிகவும் சிறப்பான முறையில் ஆகம பெரியோர்களின் ஆசியுடனும் வேத விற்பன்னர்களின் வேத கோசத்துடனும் அந்தணர் குலதிலக சிவாச்சாரியார்களின் விசேட ஹோமங்கள் தீபாரதனைகள் பூர்ணாகுதிகள் கொடுக்கப்பட்டு எம்பெருமானுக்கு குடமுழுக்கு செய்யப்பட்டு தெய்வ சாந்நித்தியத்துடன் கம்பீரமாக அழகு மிளிரும் குழந்தையாக கருவறையில் வீற்றிருக்கின்றார்.

கடந்த 03 வருடங்களாக இடம்பெற்ற புனர்நிர்மாண பணிகளுக்கு உறுதுணையாய் இரவும் பகலும் நின்று உழைத்த ஆலய திருப்பணி சபையினர் ஆலய இளைஞர் அணியினர், ஆலய மகளிரணி சபையினர், ஆலய உபயகாரர்கள், ஆலய அறங்காவலர் உறுப்பினர்கள், மற்றும் பொதுமக்கள் என அனைவரின் பணியும் பாராட்டிற்கும் நன்றிக்கும் உரியது. “எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு” என்ற வள்ளுவர் வாக்கிற்கு அமைய ஆலய புனர் நிர்மாண பணிகளிலும் கும்பாபிஷேகம் சிறப்பாக நிறைவேற உழைத்த ஆன்றோர் சான்றோர் தோளோடு தோள் நின்ற அத்துணை உள்ளங்களுக்கும் நன்றியும் எம்பெருமானின் அருளும் எனது ஆசிகளும் என்றென்றும் கிடைப்பதாகட்டும்.

எம்பெருமான் பாதம் பணிந்து அவனருள் என்றும் காத்து நிற்க வேண்டி நான் பரிபூரணமாக ஆசீர்வதித்து ஆண்டவன் சேவையில் தொடர்கின்றேன்.

“ஸ்ரீ கணேச உபாசகர்” “ஸ்தானிக பிரதம குரு”

**நா. சோமஸ்காந்த குருக்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிரதம பூசகரின்

# ஆசிச்செய்தி

'மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்'

பசுவின் உடலெங்கும் வியாபித்திருப்பதுபால் ஆனால் அதன் மடியிலிருந்து மட்டுமே பாலைப்பெறலாம். அதுபோல் உலகெங்கும் வியாபித்திருக்கும் இறைவனை, இறை சக்தியை ஆலயத்திலும் ஆலயவழிபாடுகளிலும் மாத்திரமே பெறமுடியும்.

கோயில் இல்லா ஊரில் குடியிருக்கவேண்டாம் என்பது ஒளவையாரின் அருள்வாக்கு அந்தவகையிலே சகலசெல்வங்களும் செழித்து விளங்கும் இயற்கை எழில்கொஞ்சும் மட்டக்களப்பு மாநகரிலே கல்லடி உப்போடை என்கிற புண்ணிய புனித பதியிலே கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் வினைதீர்க்கும் நாயகனாம் கல்லடி உப்போடை ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயமாகும்.

இப்பேராலயத்தில் வீற்றிருக்கும் விநாயகனின் சிறப்பு தனது தாயாகிய பேச்சி அம்மனின் ஓலைக்குடிசையுடன் அமைந்து தாயும், சேயுமாக இணைந்து மக்களுக்கு அருளாட்சி செய்வதே இவ்வாலயத்தின் சிறப்பம்சம் ஆகும்.

தொன்மைக்காலமாக ஓலைக்குடிசையிலே வீற்றிருந்து அருள்பாலித்து வருகின்ற தாயார் தற்காலத்திலும் பழமைவிரும்பியாகவும், ஓலைக்குடிலே எனக்கு உகந்த உறைவிடம் என விரும்புவதும் வியப்பாகவும் தாயின் திருவாக்காகவும் அமைகின்றது.

பேச்சியின் திருவாக்கு யாதெனில் என் ஓலைக்குடிசை அமைந்திருக்கும் இடத்தின் பூமிக்குகீழ் எனக்கு பளிங்குமா மண்டபம் இருக்கையில் பூமிக்குமேல் எனக்கு கல்லால் ஆலயம் அமைக்கக்கூடாது என்பதே தாயின் திருவாக்கு. ஆகவேதான் தாயாரின் நேர்த்திகளையும், காணிக்கைகளையும் கொண்டு அம்மை அப்பன்தான் உலகம் என உலகுக்கு உணர்த்திய மூத்தபுதல்வன் மூஷிகவாகனனுக்கு பல ஆண்டுகளுக்கு முன்னர் ஆலயம் அமைத்து வழிபட்டார் போலும் தற்போது இவ்வாலயம் புனரமைக்கப்பட்டு புதுப்பொலிவுடன் மணிமாளிகையோ என வியப்புறும் வகையில் அமைந்திருப்பது அனைவருக்கும் பெருமையை ஏற்படுத்துகின்றது. இந்தவகையிலே இப்படிப்பட்ட மகிமை பொருந்திய ஆலயத்தின் இச்சிறப்பு செய்தி எழுதும் பாக்கியம் பேச்சி அன்னையின் அருளால்தான் எனக்குக் கிடைத்ததாகக் கருதுகிறேன். ஆகவே இச்சேவையைச் செய்வதற்கு வழிகாட்டியாக இருந்த மூதாதையர்களுக்கும், எனது குரு நா.வை பொன்னையா ஐயா அவர்கட்கும், இச்சந்தர்ப்பத்தை வழங்கிய ஆலய பரிபாலனசபையினருக்கும் மக்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளையும், பாராட்டுக்களையும், நல்வாழ்த்துக்களையும், நல்லாசிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

**கு. கிருஷ்ணகுமார்**

பிரதம பூசகர், கல்லடி உப்போடை, நொச்சிமுனை

ஸ்ரீ சித்திவிநாயகர், ஸ்ரீ பேச்சியம்மன், ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயங்களின் பரிபாலனசபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தலைவரின்

# சிறப்புரை

கல்லடி உப்போடை, நொச்சிமுனை அருள்மிகு ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயம் இறையருளுடன் 02.06.2016 அன்று பாலஸ்தாபனம் செய்யப்பட்டு எம்பெருமான் ஸ்ரீ சித்திவிநாயகர் பேசும் தெய்வம் அன்னை ஸ்ரீ பேச்சித்தாயாரின் அருளாசியுடன் புதிய மூல விக்கிரகத்துடன் 30.01.2020 அன்று நடைபெற்ற மஹா கும்பாபிஷேகத்தினை தலைவராக இருந்து நடாத்தக்கூடிய பெரும்பாக்கியத்தினைப் பெற்றேன்.

ஆலய புனரமைப்பில் முழுமையாக தரிசன மண்டபம், நடராஜர் கோபுரம், மஹா மண்டபம், கொடித்தம்ப மண்டபம், வசந்த மண்டபம் வசந்த மண்டப கோபுரம் யாகசாலை மணித்தூண்கள் இரண்டும் நவக்கிரக கோவில், மடப்பள்ளி, அலுவலகம், களஞ்சிய அறை அனைத்தும் புதுப்பொலிவுடன் முழுமையாக கட்டப்பட்டன.

புதிதாக சிவன் ஆலயம், பார்வதி ஆலயம், பஞ்சமுக விநாயகர் சிலை, பழனி ஆண்டவர் சிலை என புதுப்பரிமாணத்துடன் ஏனைய ஆலயங்கள் கோபுரம் தூபி சுற்றுமண்டபங்கள் வர்ணம்பூசி புனரமைக்கப்பட்டன.

இப்புண்ணிய கைங்கரியத்தில் தனிப்பொறுப்புக்களை எடுத்தும் பொது நிதிகளாக வழங்கிய உள்ளூர் மற்றும் வெளிநாட்டில் வாழும் அன்பர்கள், பொருளாகவும் சரீர உதவிகளாகவும் ஆலோசனைகளையும் வழங்கியோருக்கும் உடன் சேவையாற்றிய முகாமையாளர், செயலாளர், பொருளாளர், உப தலைவர்கள், நிர்வாக சபை உறுப்பினர்கள், ஆலோசகர்கள், புனரமைப்புச் சபையினர், ஊர் மக்கள் அனைவருக்கும் கும்பாபிஷேக கிரியைகளை பக்திபூர்வமாக நடாத்திய பிரதம குரு அத்துடன் அனைத்துக்குருக்களுக்கும் ஆலய பிரதம குருக்களுக்கும் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன்.

இவை அனைத்துக்கும் மேலாக அருள்மிகு ஸ்ரீ சித்திவிநாயகர் ஸ்ரீ பேச்சித்தாயாரின் அருளாசியினால் தங்களது ஆலயங்களை புனரமைக்க எங்களை கருவியாக பயன்படுத்தி கும்பாபிஷேகத்தை நிறைவேற்றிக்கொண்டனர்.

"என் கடன் பணிசெய்து கிடப்பதே"

**சண்முகம் சந்திரகுமார்** JP
(சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்)
தலைவர்,
கல்லடி உப்போடை, நொச்சிமுனை
ஸ்ரீ சித்திவிநாயகர், ஸ்ரீ பேச்சியம்மன், ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயங்களின் பரிபாலனசபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முகாமையாளரின்

# வாழ்த்துச்செய்தி

எமது கல்லடி - உப்போடை, நொச்சிமுனை ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தின் ஐந்தாவது மஹாகும்பாபிஷேகம் மிகவும் கோலாகலமாக எம்பெருமானின் அருளால் இனிதே 30.01.2020ந் திகதி அன்று நடந்தேறியது. அக் கும்பாபிஷேகத்தை முன்னிட்டு வெளியிடப்பட இருக்கும் கும்பாபிஷேக சிறப்புமலருக்கு வாழ்த்துச் செய்தியை வழங்குவதையிட்டு ஆலய முகாமையா ளராகிய நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

இவ் ஆலயத்தை உருவாக்கிய தர்மகர்த்தா பரம்பரையில் ஐந்தாவது முகாமையாளராக இருப்பது எனக்கு எம்பெருமான் ஸ்ரீ சித்திவிநாயகர் அருளிய பெரும் பாக்கியமாகும்

"ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்றும் "கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்றும் ஔவைப் பாட்டியார் அழகாகக் கூறி உள்ளார். மேலும் இம் முதுமொழிகள் மூலம் ஆலயத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்ள முடிகின்றது. ஓர் ஊரில் உள்ள மக்களை நல்வழிப்படுத்துவதில் பெரும்பங்கு வகிப்பனவாக வித்தியாலயமும், ஆலயங்களும் காணப்படுகின்றன. அந்த வகையில் எமது கல்லடி உப்போடை, நொச்சிமுனையில் அமைந்துள்ள ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயமும் இக் கைங்கரியத்தை அன்று முதல் இன்றுவரை செய்து வருகின்றது. இன்று நவீன ஊடகத்துறை வளர்ச்சியானது சமுதாயத்தின் ஒழுக்க விழுமியங்களை வளர்ப்பதில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்திய போதும் ஆலய பரிபாலனசபையினர் பெரும் சவால்களை எதிர்கொண்டு ஆலயத்திருப்பணிகளில் ஈடுபட்டு சமுதாயத்திற்கு வழிகாட்டி பாரிய கடமையை நிறைவேற்றி வருகின்றனர்.

ஒரு ஆலய வளர்ச்சிக்கு அக்காலத்திலிருக்கும் ஆலயபரிபாலன சபையினரின் அர்ப்பணிப்பான சேவையும் பொதுமக்களின் கூட்டு முயற்சியுமே சிறப்பாக அமையும். அந்த வகையில் நான் மூன்று கும்பாபிஷேகங்களைக் கண்டவன் என்ற வகையில் இவ் ஆலயத்தின் படிமுறை வளர்ச்சியைக் கண்டு பெருமிதம் அடைகின்றேன். ஒரு சமூகம், சமய விழுமியங்களை முறையாகக் கடைப்பிடித்து நடந்தால்தான் நல்லொழுக்கம், கல்வி, பொருளாதாரம் என்பவற்றில் முன்னணி வகிக்க முடியும். எனவே எமது பிரதேசத்தில் வாழும் அனைத்து மக்களும் தங்களது எதிர்கால சந்ததியினரை ஆன்மீகத்தில் நாட்டம் கொள்ளத் தூண்டுவோமாக.

ஸ்ரீசித்திவிநாயகப் பெருமானும், ஸ்ரீ பேச்சித் தாயாரும் அருகருகே கோயில் கொண்டருளி அருள்பாலித்து வருவது எமது பிரதேசத்துக்குக் கிடைத்த பெரும்பேறாகும். அவர்களின் அருட்கடாட்சம் அனைவருக்கும் கிடைக்க வேண்டுமென பிரார்த்திக்கின்றேன்.

'மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்'

K.O.V.N **ஹரிதாஸ்**
முகாமையாளர்,
கல்லடி உப்போடை, நொச்சிமுனை
ஸ்ரீ சித்திவிநாயகர், ஸ்ரீ பேச்சியம்மன், ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயங்களின் பரிபாலனசபை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செயலாளரின்

# சிறப்புரை

ஒரு இனம் நிலைத்து நிற்பதற்கு அவ்வினத்தின் கலை, பண்பாடுகள் பாதுகாக்கப்படுவது இன்றியமையாததாகும். இதனைக் காலங்காலமாகப் பேணிக்காத்துவரும் கைங்கரியத்தை இந்துக்கள் செய்து வருகின்றனர். மண்ணாலும் மரத்தாலும் ஆலயங்கள் அமைத்து சமூக நலனைப் பேணிய இந்துக்கள் தனிக்கற்களால் ஆலயம் அமைத்து வணக்க வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

கால நதியின் ஓட்டத்திற்கு ஏற்ப கட்டடக் கலையும் மாற்றமடைந்தது. அவ்வகையில் சீமெந்துப் பயன்பாடு இன்று கட்டட அமைப்பில் பெரும்பங்காற்றுகின்றது. எனினும் இந்து தமிழ் பண்பாடு சிதையாவண்ணம் ஆலயங்களில் சிற்பக்கலை சிறப்பிடம் பெறுகின்றமை கண்கூடு.

இந்த அடிப்படையில் எமது ஆலய புனருத்தாரணப் பணி சிறப்பாக நடந்தேற எமது கல்லடி உப்போடை ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய பரிபாலன சபைத் தலைவரும், ஏனைய உறுப்பினர்களும் அயராது உழைத்துள்ளனர். செயலாளர் என்றவகையில் அவர்கள் என்றென்றும் எனது நன்றிக்குரியவர்கள்.

தெய்வம் உண்டு என்ற கொள்கை நம் எண்ணத்தால் அளவிட முடியாத அளவுக்குப் பழைமையானது. திருவாசகத்தில் மணிவாசகர் "ஒரு நாமம் ஓர் உருவம் ஒன்றுமில்லார்க்கு ஆயிரம் - திருநாமம் பாடி நாம் தெள்ளேணம் கொட்டாமோ" எனப் பாடியுள்ளார். அப்படியான நெறி நின்று ஈழத் திருநாட்டிலும் பல ஆலயங்கள் அமைத்து வழிபாடு நிகழ்ந்துவருகிறது. அவ்வகையில் கல்லடி உப்போடையில் வதிகின்ற சைவத் தமிழ் அன்பர்களும் "ஆலயந்தானும் அரன் எனத் தொழுமே" என்ற சிவஞான போதம் வாசகத்துக்குச் செவிசாய்த்து ஆலயப் புனரமைப்பிற்கு அள்ளிக் கொடுத்ததோடு அமையாது சிறப்பு மலர் ஒன்றையும் வெளிக்கொணரப் பணம் - பொருள் - உழைப்பு எனப் பல வகையிலும் உதவியுள்ளனர். இவர்கள் என்றென்றும் நினைவில் நிறுத்தப்பட வேண்டியவர்கள்.

மலர் ஒன்றை வெளியிடுவது, ஆலயம் அமைப்பதை விடக் கடினமான காரியம். தகைமை உடையோரை அணுகி ஆக்கங்களைப் பெற்று நூலுருவாக்கும் பணி மகத்தானது. அப்பணியில் சளைக்காது உழைத்த மலர்க் குழுவினருக்கு மனமுவந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

"பக்குவப்பட்ட ஆன்மாக்களே பரகதி அடைவர்" என்பது சைவசித்தாந்தம் சாற்றும் உண்மை. அந்த வகையில் இம்மலரின் உள்ளடக்கங்கள் ஆன்மாக்களின் ஈடேற்றத்திற்கு சிறிதேனும் துணை செய்யும் வகையில் மலர்ந்து மணம் பரப்பவேண்டி வாழ்த்துகின்றேன்.

**சி. விஜயகுமார்** BA,LL.B (Hons)
செயலாளர்,
ஸ்ரீ சித்திவிநாயகர், ஸ்ரீ பேச்சியம்மன், ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயங்களின் பரிபாலனசபை,
கல்லடி உப்போடை, நொச்சிமுனை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பொருளாளரின்

# சிறப்புரை

இலங்கைத் திருநாட்டில் மீன்பாடும் தேநாடாம் மட்டக்களப்பு மாவட்டத்தில் பெரியோர்களாலும் சுவாமிகளாலும் ஆசீர்வதிக்கப்பட்ட புண்ணிய பூமியாம் கல்லடி உப்போடையில் அமையப்பெற்ற ஸ்ரீ சித்தி விநாயகப் பெருமானின் பாதங்களையும் ஆச்சி பேச்சித்தாயின் பாதங்களையும் முதலில் வணங்குகின்றேன்.

கல்லடி உப்போடையில் எழுந்தருளி வேண்டுபவர்களுக்கெல்லாம் வேண்டும் வரம் அளிக்கும் எம்பெருமானின் 5வது கும்பாபிஷேக நிகழ்வில் ஆலயத்தில் பொருளாளராக இருந்து சிறு தொண்டு ஆற்ற எனக்கும் ஓர் சந்தர்ப்பம் கிடைத்தமையை என் வாழ்வின் பெரும் பேறாக உணர்கின்றேன்.

1928ல் முதலாவது கும்பாபிஷேகம் கண்டு பின்னர் 1942ல் இரண்டாவது கும்பாபிஷேகமும் அதனைத் தொடர்ந்து 1988ல் மூன்றாவது கும்பாபிஷேகமும், 2003ல் இறுதியாக கும்பாபிஷேகம் கண்ட எம் பெருமான் இவ்வாண்டின் (2020) தை மாதம் 30ம் திகதி ஐந்தாவது தடவையாக இரண்டு மணித்தூண்கள் மறுசீர் அமைக்கப்பட்டும், மண்டபங்கள் பழையவை அகற்றப்பட்டு புதிதாகவும், யாகசாலை, வசந்த மண்டபம், நவக்கிரக கோயில், சுற்று மண்டபத்தில் அரைவாசி வரை கொங்றீட் மூலமும் 32 விநாயகரின் அவதாரங்களையும் அமைக்கப்பெற்று கூடுதலான கட்டுமான வேலைகளைக் கொண்டு புதுப்பொலிவுடன் அமையப்பெற்று கும்பாபிஷேகம் கண்டுள்ளார்.

இவ்வேளையில் ஆலயத்தின் கம்பீரமான தோற்றம் காண பல்வேறு வழிகளிலும் உள்நாட்டில் இருந்தும், வெளிநாடுகளில் இருந்தும் ஒவ்வொரு வேலைகளையும் பொறுப்பெடுத்து செய்து தந்தவர்களதும், வேண்டும் போதெல்லாம் நிதி உதவி தந்தவர்களதும் சேவை பாராட்டத்தக்கதும் அளப்பரிய செயற்பாடுமாகும். இச் சந்தர்ப்பத்தில் உதவி புரிந்த அனைத்து அடியார்களுக்கும் எம்பெருமானின் திருவருள் கிடைத்து வாழ்வு சிறக்க வாழ்த்தி வணங்குகின்றேன்.

**கிருஷ்ணப்பிள்ளை சுகந்தன்** (ஆசிரியர்)
பொருளாளர்
கல்லடி உப்போடை, நொச்சிமுனை
ஸ்ரீ சித்திவிநாயகர், ஸ்ரீ பேச்சியம்மன், ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயங்களின் பரிபாலனசபை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச்செய்தி

கல்லடி உப்போடையில் அப்பிரதேசத்திற்கு பெருமை சேர்க்கும் வகையில் அமைந்துள்ள மிகத் தொன்மை வாய்ந்த கல்லடி உப்போடை அருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தில் வீற்றிருக்கும் விநாயகப் பெருமானுக்கு 30.01.2020 அன்று மகா கும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டும் அதற்காக கும்பாபிஷேக மலர் ஒன்று வெளிவருவதையிட்டு அறிந்து அளவில்லா ஆனந்தமடைகின்றேன்.

கல்லடிப் பிரதேசத்தில் கல்வியை ஏற்படுத்த வேண்டும் என்பதை மூச்சாகக் கொண்டு விபுலானந்த அடிகளாரை இப்பிரதேசத்திற்கு கொண்டு வந்து பராமரித்து அவர் மூலமாக கல்வியை ஏற்படுத்திய பெருமையும், சிறப்பும் வரலாறு ரீதியாக இவ் ஆலயத்திற்கு உள்ளது.

ஓர் ஆலயத்தில் மகா கும்பாபிஷேகம் நடைபெறுகின்ற போது அதனால் அந்தப் பிரதேசம் தூய்மையடைகின்றது. அங்கு வாழ்கின்ற மக்கள் மேன்மையடைகின்றனர். அதேபோன்று இதற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்ட அந்த நிர்வாகம் சார்ந்த தரப்பினர் இறை கீர்த்தி பெறுகின்றனர். இவ்வாறான மகிமைகள் கொண்ட ஓர் மகா கும்பாபிஷேகத்தை கண் கொண்டு காண நாம் முற் பிறவியில் புண்ணியம் செய்தவர்களாகவே இருக்க வேண்டும்.

நாட்டில் அடிக்கடி நிகழ்கின்ற அரசியல் மாற்றங்கள், அதனால் ஏற்படுகின்ற பொருட்களின் விலை ஏற்றம் மற்றும் அதனூடாக மக்கள் அனுபவிக்கும் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு போன்ற நிலைகளின் மத்தியிலும் கூட ஓர் குறுகிய கால இடைவெளியில் இதற்குத் தேவையான நிதி வளத்தையும், துறைசார்ந்த கலைஞர்களையும் தேடிக் கொண்டு இவ் ஆலயத்தின் அபிவிருத்திப் பணியினை அழகுறச் செய்து முடிப்பதென்பது இவ் ஆலய பரிபாலன சபையினது முறையான திட்டமிடலின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட அர்ப்பணிப்புடன் கூடிய உன்னத செயற்பாட்டையே காட்டி நிற்கின்றது.

அந்த வகையில் இறை அம்சம் கொண்டதாக அழகுற நிர்மாணிக்கப்பட்டுள்ள கல்லடி உப்போடை அருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தின் மகா கும்பாபிஷேக நிகழ்வும், அதனையிட்டு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மலர் வெளியீடும் சிறப்பாக நடைபெற எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கௌரவ. தியாகராஜா சரவணபவன்**
மாநகர முதல்வர், மாநகர சபை,
மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச்செய்தி

மட்டக்களப்பு கல்லடி, உப்போடையில் கோயில் கொண்டு இறையருள் பாலித்துக் கொண்டிருக்கின்ற ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய கும்பாபிஷேக மலருக்கான வாழ்த்துரை வழங்குவதையிட்டு மனமகிழ்ச்சி அடைகின்றேன்.

'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்பது ஆன்றோர் வாக்கு. ஆலயங்களும், சமய வழிபாடுகளும் மானிட வாழ்வை நெறிப்படுத்தி ஆன்மீகத்தை மக்கள் மனதில் பதிப்பதற்கு பெரும் துணைபுரிகின்றன. அன்பு, கருணை, இரக்கம், பொறுமை, தியாக சிந்தனை போன்ற பண்புகளை வளர்ப்பதே சமயத்தின் நோக்கமாகும். சமய சடங்குகளும், விழாக்களும் இப் பண்புகளை வளர்ப்பதற்கு துணைபுரிவதோடு ஆன்மீகத்தையும், ஒழுக்க விழுமியங்களையும் மேம்படுத்துவதற்கும் வழி செய்கின்றன. ஆலயங்கள் வழிபாடுகள் மற்றும் உற்சவங்களுக்கு அப்பால் சமயம் சார்ந்த சமூகப்பணிகளையும் முன்னெடுக்க வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

இந்த வகையில் புகழ்மிக்க இவ்வாலயமானது இற்றைக்கு 200 ஆண்டுகளுக்கு முற்பட்டதான பழமை வாய்ந்த ஆலயமாகும். பேச்சியம்மன் ஆலயத்திற்கு அருகில் அன்னையும் மைந்தனுமாக அமர்ந்து நாடி வரும் அடியவர்களுக்கு நல்லருள் பாலித்து சித்திகளைக் கொடுத்துக் கொண்டிருக்கும் புகழ் மிக்க இவ்வாலயத்தின் கும்பாபிஷேகம் நடைபெற இறையடியார்களின் முயற்சியுடன் இறையருள் பாலித்திருப்பது நாம் யாவரும் பெற்ற கொடையே எனின் மிகையாகாது.

எனவே கும்பாபிஷேக நிகழ்வுக்கும், மலர் வெளியீட்டுக்கும் முன்னின்று உழைத்த ஆலய பரிபாலன சபையினருக்கும், நிதியுதவி வழங்கிய நல்லுள்ளங்களுக்கும் மற்றும் மலர் வெளியீட்டுக் குழுவினருக்கும் எனது இதயம் கனிந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

**மா. உதயகுமார்**
ஓய்வுநிலை அரசாங்க அதிபரும் மாவட்ட செயலாளரும்
மட்டக்களப்பு மாவட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச்செய்தி

மண்முனை வடக்கு பிரதேச செயலகப் பிரிவில் எழுந்தருளி மக்களுக்கு அருள்பாலித்துக் கொண்டிருக்கும்

ஸ்ரீ சித்திவிநாயகர், ஆலய கும்பாபிஷேக மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதை இட்டு பெரும் உவகை கொள்கின்றேன்.

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்ற பழமொழிக்கேற்ப ஊரின் அழகை மெருகூட்வது ஆலயமும் அதனுடன் சார்ந்த வழிபாட்டு முறைகளுமாகும். ஆலய கும்பாபிஷேகத்தின்போது ஊர் தூய்மை பெற்று மக்களிடையே ஒற்றுமையை காணமுடிகிறது. மக்களின் ஆன்மீகத்தையும் பண்பாட்டு விழுமியங்களையும் வளரச்செய்யவேண்டும் வாழ்வை இறைபணிக்கு அர்ப்பணிக்க வேண்டும் கோயில்களில் எழுந்தருளியிருக்கும் விக்கிரகங்களுக்கு சக்தி அளிப்பது மனிதனல்லவா? மனிதன் செதுக்காவிட்டால் அது விக்கிரமாவதில்லை. பிரதிஸ்டை செய்யாவிட்டால் அதற்கு பிராணன் இல்லை. பூசை செய்யாவிட்டால் அதற்கு சக்தியுமில்லை இவை அனைத்தும் மனிதனையே சாரும். சத்திய யுகத்தில் ஆலயங்கள் இருக்கவில்லை என்றும் குரு சிஸ்ய பரம்பரை மட்டுமே இருந்ததாக கூறப்படுகின்றது.

ஆனால் இன்றைய புதிய யுகத்தில் மனிதனுக்கு ஆலயம் சென்று இறைவனை வழிபடுவதற்கு நேரம் கிடைப்பதில்லை. கிராமங்களில் ஆலயங்களை புதுப்பித்தல் கும்பாபிஷேக நிகழ்வுகள் நடைபெறுவதன் மூலமாக மக்கள் ஆலயம் செல்வதற்கு ஒரு சந்தர்ப்பம் வழங்கப்படுகின்றது. மக்களின் வாழ்வை சமய,கலாசார விழுமியங்களுடன் முன்னெடுத்துச்செல்ல பூசை, ஆன்மீக உரைகள், பஜனை போன்றவைகளை நடத்தவும் நாம் கவனம் கொள்ள வேண்டும். ஆலயத்தை அமைத்து ஊர் சிறக்க கும்பாபிஷேகப்பணியினை மேற்கொள்ள அனைவருக்கும் எல்லாம் வல்ல இறைவனின் அருள்கிடைக்க வேண்டுமென்று பிராத்திக்கினறேன்.

**V. வாசுதேவன்**
பிரதேசசெயலாளர், பிரதேச செயலகம்,
மண்முனை வடக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச்செய்தி

கல்லடி உப்போடை, நொச்சிமுனை ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தில், 2020.01.30ம் திகதி நடந்தேறிய மகா கும்பாபிஷேக விழாவினை முன்னிட்டு வெளியிடப்படுகின்ற கும்பாபிஷேக மலருக்கான வாழ்த்துச்செய்தி வழங்கக் கிடைத்ததையிட்டு மிகவும் மனமகிழ்வடைகின்றேன்.

கல்லடி உப்போடை, நொச்சிமுனை மற்றும் சுற்றயல் கிராம மக்களது வாழ்வியலுடன் இரண்டறக் கலந்து அவர்தம் மனங்களில் நீக்கமற நிறைந்திருக்கும் தெய்வங்களாகத் திகழ்கின்ற ஸ்ரீ சித்தி விநாயகரும், பேச்சியம்மாளும் குடிகொண்டுள்ள இரு ஆலயங்களும், இப்பிரதேசத்தின் பெருமை மிகு அடையாளமாக விளங்குகின்றன. மட்டுமன்றி மக்களது வேண்டுதல்களை நிறைவேற்றி அவர்களது இடர்களைப் போக்கி அருளுகின்ற அற்புதச் செயல்களால், மேலும் மேலும் இவ்விரு ஆலயங்களது புகழ் பாரெங்கும் ஓங்கி வளர்வதும் கண்கூடாகும். மக்களின் விக்கினங்களைத் தீர்த்து சித்திகளை அருளுகின்ற, ஸ்ரீ சித்தி விநாகப் பெருமானின் ஆலய பாலஸ்தானம் நடைபெற்று மூன்றரை வருடங்களுக்குட்பட்ட காலத்தினுள் ஆலய கட்டட புனருத்தாபன வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டும், புதிய விக்கிரகங்கள் மற்றும் சிற்பங்கள் புதுப் பொலிவுடன் அமையப்பெற்றும், தெய்வீக கடாட்சமும், கலைநயமும் ஒருங்கே சேர்ந்த அற்புதத் தோற்றமாக ஆலயம் திகழ்கின்றமை சித்தி விநாயகர், பேச்சியம்மாள் அருட்கடாட்சத்தினாலேயே ஆகும்.

குறுகிய காலப் பகுதியிலும், வரையறுக்கப்பட்ட வளங்களுடனும், ஆலய புனர்நிர்மாண வேலையினை முன்னெடுத்து, சரியான திட்டமிடலுடனும், அர்ப்பணிப்புடனும், ஸ்ரீ சித்தி விநாயகர், பேச்சியம்மாள் துணை கொண்டு வேலைகளை நிறைவேற்றிய ஆலய நிர்வாக சபையினர், கட்டட புனர்நிர்மாணப் பணிகள் மற்றும் சிற்ப வேலைகளில் பங்காற்றிய சகலரும், அத்துடன் கும்பாபிஷேகப் பணிகளில் கால நேரம் பாராது பங்கெடுத்து உழைத்த அடியவர்களும் போற்றுதலுக்கும், இறையருளுக்கும் உரியவர்கள்.

இத்தெய்வீக நிகழ்வின் நினைவாக மலருகின்ற கும்பாபிஷேக மலரில், எனது கருத்தையும் பகிர்ந்து கொள்ள சந்தர்ப்பம் வழங்கியமைக்கு மனமார்ந்த நன்றிகளை தெரிவித்து ஸ்ரீ சித்தி விநாயகர், பேச்சியம்மாள் தாள் பணிகின்றேன்.

**அ. சுரேஸ்குமார்,**
பிரதம எந்திரி,
மாகாண கட்டடங்கள் திணைக்களம், மட்டக்களப்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச்செய்தி

வங்கக்கடல் அலை தாலாட்ட வாவி மீன்கள் இசைகூட்ட தங்கத்தமிழர் செறிந்து வாழும் கல்லடி உப்போடையில் அருளாட்சி புரியும் எம்பெருமானான விநாயகருக்கு வாடா மலராக வெளிவரும் ஏடு சிறப்புற அமைய மனதார வாழ்த்துகிறேன். இதனை எழுத அருள்பாலித்த இறைவனுக்கும் முன்னை நாள் ஆலயத் தலைவர் என்ற வகையில் என்னை வாழ்த்துரை எழுதித் தருமாறு கேட்ட தற்போதைய ஆலய பரிபாலன சபைக்கும் எனது நன்றியைச் செலுத்திக்கொள்கின்றேன்.

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்றார் ஔவை மூதாட்டி. ஏனெனில் அக்காலத்தில் கோவில்தான் பாடசாலை , மருத்துவமனை , வங்கி என சமூகத்தின் நிலைக்களனாக விளங்கிற்று. இதனால் ஆலயம் இல்லாத ஊரை ஔவை பிராட்டி "அடவிக்காடு" என்கிறார்.

மக்களாட்சி நிலவும் இக்காலத்தில் சமூகப்படுத்தும் நிறுவனமாக ஆலயம் அமைந்துள்ளது. இதனால்தான் தேவாலயம் , வித்தியாலயம் , காரியாலயம் என்ற இடங்களும் அந்தஸ்துடையனவாக அமைந்துள்ளன. ஆதலால் ஆலய வழிபாடும் , அறப்பணி புரிதலும் சமுதாய வளர்ச்சிக்கு இன்றியமையாதனவாகின்றன.

மலர் ஒன்றை வெளியிடுவதென்பது ஒரு மகத்தான பணி. பொருட்செலவு மிக்கது. கடின உழைப்பை வேண்டுவது. இத்தனை சிரமங்களைப்பட்டுக்கொண்டு வரும் ஏடுடைய மலர் பீடுடையதாக, வருங்கால சமூக வரலாற்றை உணர்த்துவதாக, எதிர்காலத்திற்கு வழிகாட்டுவதாக அமைய வேண்டும். அந்தவகையில் ஏறத்தாழ இரு நூற்றாண்டுகள் பழைமை வாய்ந்த எமது கல்லடிஉப்போடை , நொச்சிமுனை ஸ்ரீசித்தி விநாயகர் ஆலய சிறப்பு மலர் நீண்ட நெடுங்காலம் நிலைத்திருந்து பயனுதவவும் , கடந்த காலச்சுவடுகளை இனங்காணவும் உதவும் என நம்புகிறேன்.

இத்தகைய பணியில் மிகுந்த ஈடுபாட்டுடன் இயங்குபவர்களை இறைவன் ஆசீர்வதிக்க வேண்டியும் , பயன் பல நல்கும் பனுவலாக இம்மலர் அமையவும் என் உளம்கனிந்த வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**சின்னத்துரை தேவசிங்கன்**
முன்னாள் தலைவர்,
கல்லடி உப்போடை, நொச்சிமுனை,
ஸ்ரீ சித்திவிநாயகர், ஸ்ரீ பேச்சியம்மன், ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயங்களின் பரிபாலனசபை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச்செய்தி

"ஆனைமுகனே அறவான் திருமுகனே ஞானவதம் பாயும் ஒரு கையோனே
ஞாலமுற வித்தை கற்கும் பிள்ளைகட்கு விக்கினங்கள் வாராமல் நித்தம் நித்தம் துணையாய் நில்"

நமது சித்தி விநாயகர் ஆலய பரிபாலன சபையின் முன்னாள் தலைவர் என்ற ரீதியிலே இந்த மகா கும்பாபிஷேக மலரின் வாழ்த்துச் செய்தி வழங்குவதில் நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன் நமது சித்தி விநாயகர் ஆலயம் தோன்றி இதுவரை காலமும் அடைந்துள்ள முன்னேற்றங்கள் யாவற்றையும் அந்த முன்னேற்றத்திற்கு துணை புரிந்து அளவிலாத அன்பளிப்புக்களைச் செய்தவர்களையும் அயராது உழைத்த மெய்யன்பர்களையும் நாங்கள் யாவரும் நன்கு அறிந்துள்ளோம்

ஆலயம் தோன்றிய காலம் தொட்டு இதுவரை எத்தனையோ இன்னல்களையும் இடையூறுகளையும் சந்தித்தும் இன்று இத்தகைய பொலிவுடனும் சிறப்புடனும் மிளிர்ந்து அடியார்களுக்கு அருள் பாலித்துக் கொண்டிருக்கும் எம் பெருமான் சித்தி விநாயகரின் சிறப்பே ஒரு தனிச் சிறப்புத்தான்

ஆண்டுக்கு ஆண்டு புதிய புதிய நிர்வாக சபையினை பொறுப்பேற்று எத்தனையோ தடைகளையும் எதிர்ப்புக்களையும் தாங்கி நம் கடமைகளை செவ்வனச் செய்து முடித்தமையே மேற்படி சிறப்புக்குக் காரணமாகும். இத்தகைய சேவைகளுக்கு உதவிக்கரங்கள் நீட்டியும் ஒத்துழைப்பைக் காட்டியும் பணிபுரிந்த அன்பர்கள் யாவரையும் மனதார பாராட்டி வாழ்த்துவதுடன் அவர்கள் யாவருக்கும் எம்பெருமான் அருள் என்றென்றும் கிடைக்க வேண்டுமென வேண்டுகின்றேன். வருடா வருடம் எமது ஆலய பரிபாலன சபையினர் எடுக்கும் முயற்சிகள் ஒவ்வொன்றையும் மெய்யன்பர்களாகிய நாங்கள் கவனத்தில் எடுத்து வேண்டிய ஆதரவை நல்கி நல்ல நல்ல திட்டங்கள் வெற்றி பெற உதவுவோமாக.

தற்போது மிளிர்ந்து காட்சி அளிக்கும் துளசி மண்டபம் எமது பரிபாலன சபையில் 2009ம் ஆண்டு பிரேகரிக்கப்பட்ட செயலாக்கம் கண்ட முயற்சியாகும் இது மட்டுமன்றி தீர்த்தக்குளத்தருகில் இறுதிச் சடங்குளை செய்வதற்கு வேண்டிய ஒரு மண்டபம் கட்ட வேண்டும் என்ற கோரிக்கையும் அதே ஆண்டில் பிரேகரிக்கப்பட்டும் அதற்குரிய ஆயத்தங்கள் நடைபெறுவதை அறிந்து மகிழ்ச்சி.

இதே போன்று இன்றும் எத்தனையோ தேவைகள் எமது ஆலயத்திற்கு தேவைப் படுகின்றது. நாங்கள் எல்லோரும் ஒன்றுகூடி நேர்மையாக எங்களால் இயன்ற உதவிகளைச் செய்து எமது ஆலயத்தை மென்மேலும் சிறப்படையச் செய்து எம் பெருமான் அருள் பெற்று இனிதே பல்லாண்டு காலம் வளமுடன் வாழ என் பணிவான வாழ்த்துக்கள்.

**வீ. தட்சணாமூர்த்தி**
முன்னாள் தலைவர், கல்லடி உப்போடை, நொச்சிமுனை
ஸ்ரீ சித்திவிநாயகர், ஸ்ரீ பேச்சியம்மன், ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயங்களின் பரிபாலனசபை


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச்செய்தி

நம் ஈழத்திரு நாட்டின் கிழக்கே பரந்து விரிந்து கிடக்கும் மட்டக்களப்பு மாவட்டத்தில் கிழக்கே வங்கக் கடலும் மேற்கே பாடுமீன் வாவியும் அரவணைத்து விளங்கும் கல்லடி உப்போடைக் கிராமத்தில் வாழ்ந்த செல்வந்தர்களும் கல்விமான்களும் சைவமும் தமிழும் தழைத்தோங்க வேண்டும் என்ற தூரநோக்கோடு இக்கிராமத்தில் கல்விக் கூடங்களையும் வழிபாட்டுத் தலங்களையும் தங்கள் சொந்தச் செலவிலும் சொந்த மண்ணிலும் ஸ்தாபிக்க முன்வந்தபோது இறையருளால் இச் ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயம் அமையப்பெற்றது.

இவ்வாலயம் 1824ல் அமைவதற்கு கல்லடி உப்போடையில் வாழ்ந்தவர்களான சின்னாத்தை, உமையாத்தை என்போர் பெருவுள்ளம் கொண்டு பெருமான் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள நிலத்தினை கந்தப்பெருமாள் என்பவரிடம் கையளித்தனர் அவர் தனது மகனான திரு கதிர்காமத்தம்பி உடையாரிடம் கையளித்ததைத் தொடர்ந்து வளர்ச்சி கண்ட இவ்வலாயம் 1866ல் நிரந்தர வணக்கஸ்தலமாக மடாலய ஒழுங்கின்படி பராமரிக்கப்பட்டு விரதங்கள் மற்றும் விழாக்கள் என்பன சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருந்த காலகட்டத்தில் திரு கதிர்காமத்தம்பி உடையாரின் மகனான திரு. K.O. வேலுப்பிள்ளை அவர்களின் பொறுப்பில் ஆலய நிர்வாகம் இருந்ததாகவும் இக்காலத்தில்தான் அர்த்தமண்டபம், மாகாமண்டபம், ஸ்தம்ப மண்டபம், வசந்த மணடபம், ராஜகோபுரம் என்பனவும் இவ்வாலயத்தில் அமையப் பெற்றதாக அறியக்கிடைக்கின்றது. காலப் போக்கில் இவ் வளாகத்தினுள் நடராஜர் ஆலயம் நவக்கிரக ஆலயம் என்பன அமைக்கப்பட்டு ஆகமமுறைப்படி பூசைகள் நடைபெறுவதற்கு தன்னை முழுமையாக அர்பணித்து ஓயாது அரும்பாடுபட்ட சைவப் பெரியாரும் கொடைவள்ளலாகவும் பிரகாசித்த திரு. க.உ.வேலுப்பிள்ளை அவர்களேயாவார்.

2020ல் நடைபெறும் இக்கும்பாபிஷேகமானது மிகவும் குறுகியகாலத்தில் திருப்பணிவேலைகள் நிறைவுற்று புதுப்பொலிவோடு மிளிர்வதற்கு அயராது உழைத்த நிர்வாக சபையினரைப் பாராட்டி, இறைவனை பிரார்த்தித்து என்றும் மங்கலம் உண்டாக வாழ்த்துகிறேன்.

சுபம்

**கலாபூஷணம் க. கணேசானந்தம்**
முன்னாள் தலைவர்
கல்லடி உப்போடை, நொச்சிமுனை
ஸ்ரீ சித்திவிநாயகர், ஸ்ரீ பேச்சியம்மன், ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயங்களின் பரிபாலனசபை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச்செய்தி

கல்லடி உப்போடை, நொச்சிமுனை அருள் மிகு ஸ்ரீ சித்தி விநாயகப் பெருமானுடைய கும்பாபிஷேக சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன்.

எனது குடும்பமானது பல ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இவ்வாலயத்தில் தொண்டாற்றி வந்துள்ளது. எனது பாட்டனார் திரு. மாசிலாமணி அவர்கள் இவ் ஆலயத்தில் ஒரு வண்ணக்கராக இருந்து பணி புரிந்தார். அக்காலம் முதல் இக்காலம் வரை இவ்வாலயத்தை உயர் திரு கதிர்காமர் கந்தப் பெருமாள், உயர்திரு கந்தப்பெருமாள் கதிர்காமத்தம்பி உடையார், உயர்திரு கதிர்காமத்தம்பி உடையார் வேலுப்பிள்ளை, திரு. K.O. வேலுப்பிள்ளை கதிர்காமத்தம்பி (போஸ்மாஸ்ரர்) தற்பொழுது எனது நண்பன் திரு நமசிவாயம் ஹரிதாஸ் ஆகியோர் முகாமையாளர்களாகவும் ஆலயத்தை அமைப்பதற்கு பெரும் நன்கொடையாளர்களாகவும் திகழ்ந்துள்ளனர்.

இவ் வள்ளல் பெருமக்கள் அமைத்த ஆலயத்தை பராமரிப்பு செய்வதற்காக அக்காலத்திலே அவர்கள் தூரநோக்கு கொண்டவர்களாக விளங்கினர். அதில் எனது பாட்டனார் திரு. மாசிலாமணி அவர்களும் எட்டு ஏக்கர் வயலை நன்கொடையாக ஆலயத்திற்கு வழங்கினார். அது போன்று பிற்காலத்தில் திரு முருகுப்பிள்ளை வண்ணக்கர், திரு. துரைராஜாப் போடியார், திரு. செல்லத்துரை கிளாக்கர் போன்றோரும் ஆலயத்திற்கு நெற்காணிகளை வழங்கி இருந்தார்கள். K.O.V. கதிர்காமத்தம்பி அவர்கள் முகாமையாளராக இருந்து வந்த காலத்தில் எமது பிரதேசத்தில் வாழ்ந்த நவரெட்ணபாக்கியம் அம்மாவும் பேச்சி அம்மன் ஆலயத்திற்கு பக்கத்தில் ஒரு காணியையும் வழங்கினார்கள்.

எமது பிரதேசத்தில் வாழ்ந்த மாணிக்கம்மா அவர்களின் புத்திரியான திருமதி. தனலெட்சுமி கணபதிப்பிள்ளை அவர்கள் தாங்கள் வாழ்ந்த 'மாணிக்கபதி' வீட்டை எமது ஆலயத்திற்கு வழங்கி உள்ளார். அதே போன்று அக்காலத்தில் ஆலயத்தை நிருவகித்து வந்த நிர்வாகிகள் உண்டியல் பணத்தில் கூட ஆலயத்திற்கு வளவுகளைக் கொள்வனவு செய்துள்ளனர். இவையெல்லாம் ஓர் தூரநோக்குடன் ஆலய வளர்ச்சியை மையப்படுத்தி செய்த விடயமாகவே கருதுகின்றேன்.

அக்காலத்தில் வாழ்ந்த உடையார் பெருமக்கள் ஆலயத்தைக் கட்டியதுடன் நின்று விடவில்லை. இப்பிரதேசத்தில் வசிக்கும் கல்வியைப் பற்றியும் சிந்தித்தார்கள். தோ.கு.சபாபதிப்பிள்ளை உடையார், கதிர்காமத்தம்பி உடையார் ஆகியோர் விவேகானந்தா மகளிர் கல்லூரியையும் (தமிழ் பாடசாலை) அமைத்தார்கள். அதேபோல் திரு. K.O வேலுப்பிள்ளை அவர்கள் சிவானந்த வித்தியாலயத்தை அமைக்க தனது 15 ஏக்கர் காணியையும் கூட


Digitized by Noolaham Foundation.

வழங்கினார். இராமகிருஷ்ண மிசன் உருவாகவும் காலாயிருந்தார் சிவானந்த வித்தியாலயத்தை உருவாக்க முன்னர் அதற்கான கால்கோள் கூட்டம் கூட பேச்சியம்மன் ஆலய பின்முன்றலில் தான் நடத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

எமது ஆலயத்தைப் பொறுத்தவரை மிகவும் பழமை வாய்ந்த வரலாறு கொண்ட ஆலயமாகும். 1824இல் தாயுறுதி முடிக்கப்பட்டாலும் 1866 காலப்பகுதியில்தான் ஓர் நிரந்தர கட்டிடத்தை அமைத்து அக்கால மக்கள் வழிபட்டு வந்துள்ளனர். அதற்குச் சான்றாக எமது சித்தி விநாயகப் பெருமானின் பீடத்திற்கு அடியில் அக்காலத்தில் செம்பாலான நாணயங்கள் வைக்கப்பட்டிருந்துள்ளன. முகாமையாளர் கிட்டத்தட்ட 25க்கு மேலான நாணயக்குற்றிகளைக் காண்பித்தார். இந்த நாணயக் குற்றிகள் அனைத்தும் எலிசபெத் மகாராணியாரின் உருவம் பதிக்கப்பட்ட 1870ம் ஆண்டுக்கான காசுகளாகக் காணப்பட்டன. அது மட்டுமல்லாது 100 வருடங்கள் நெருங்கும் காலத்தில் இறக்கிய கொடிமரம் கூட ஒருவரலாறு மிக்கதாகவே காணப்பட்டது. அக்காலத்தில் 1927ம் ஆண்டு காலப்பகுதியில் இந்தியாவிலிருந்து திரு. சாமிநாதன் என்னும் ஆச்சாரியாரை அழைத்து வந்து திரு. K.O வேலுப்பிள்ளை அவர்கள் தனது சொந்த செலவில் ஐம் பொன்னால் அமைக்கப்பட்ட கொடி மரத்தை செய்துள்ளார். இவ்வாறு பல விடயங்களைக் கூறலாம். 200 வருடங்களுக்கு முன்னதாக அமைக்கப்பட்ட கதவு, நிலை என்பவற்றில் தமிழ் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. அத்தகைய பழமை வாய்ந்தவை. அது மட்டுமல்லாது கருங்கற்களால் ஆன நிலைகள் தற்போதும் எமது ஆலயத்தில் காட்சி அளிக்கின்றன. அதேபோல் ஆலயத்தில் சில கட்டிடங்கள் புதிதாக நிர்மாணம் செய்யப் பட்டாலும் எமது ஆலயக் குருக்களின் வேண்டுகோளுக்கு இணங்க ஒலிக்கப்பட்ட மந்திர சக்தி அத்திவாரத்திலும் கற்களிலும் இருக்கும் என்று கூறியதற்கும் ஆகமப்படி அமைக்கப் பட்ட ஆலயமாகக் காணப்படுவதால் அதன் பரிமாணம் மாற்றப் படக்கூடாது என்பதற்கும் இணங்க பழைய அத்திவாரத்தின் மேல் கம்பிகள் பொருத்தப்பட்டு கட்டிடம் அமைக்கப்பட்டதோடு இம் மந்திரசக்தி வாய்ந்த பழைய கற்களைக் கொண்டே மண்டபங்களும் கட்டப்பட்டுள்ளன. இம் மந்திர சக்தி வாய்ந்த கற்களை கொண்டு சுவர்கள் கட்டப்பட்டிருந்தது. இவ்வாலயத்தின் பெருமைக்கும் சிறப்புக்கும் காரணமாக நிச்சயம் இருக்கும். குருக்கள் ஐயாவின் கருத்தை எமது நிர்வாகிகள் ஒருமித்து ஏற்றுக்கொண்டதற்கும் உண்மையில் நன்றி கூறவேண்டும்.

நான் தலைவராக இருந்த காலப்பகுதியில் அன்றிருந்த ஆலயபரிபாலன சபை உடன் சேர்ந்து, தேர், துளசி மண்டபம் போன்றவற்றை அமைத்தோம் அக்காலத்தில் எம்மோடு செயற்பட்ட பொருளாளர் திரு. K.கணேந்திரன் அமரத்துவம் அடைந்துவிட்டார் தற்போது இருக்கும் ஆலய பரிபாலனசபையினர் ஆலயத்தை அழகான முறையில் கட்டியும் புனரமைத்தும் மிகச் சிறப்பாக கும்பாபிஷேகத்தையும் நடத்தி முடித்துள்ளனர் நான் அவர்களை உளப்பூர்வமாக பாராட்டுகின்றேன்.

எமது ஆலயம் மென்மேலும் சிறப்பாக வளரவேண்டும் அத்தோடு சமூகத்தின் தேவைகளையும் கருத்தில் கொள்ள வேண்டும் என எல்லாம் வல்ல சித்திவிநாயகப் பெருமானையும் ஸ்ரீ பேச்சிச் தாயாரையும் வேண்டி நிற்கின்றேன்.

**தி. ஸ்ரீஸ்கந்தராஜா**

முன்னாள் தலைவரும், கல்லடி உப்போடை, நொச்சிமுனை

ஸ்ரீ சித்திவிநாயகர், ஸ்ரீ பேச்சியம்மன், ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயங்களின் பரிபாலனசபை

கௌரவ மாநகர சபை உறுப்பினரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச்செய்தி

மேன்மை கொள் சைவநீதி விளங்குக
உலகமெல்லாம்!

மட்/ கல்லடி உப்போடை நொச்சிமுனை ஸ்ரீ சித்தி விநாயகப் பெருமான் சென்ற 30.01.2020 அன்று இடம்பெற்ற குடமுழுக்கினாற் குளிர்ந்திருக்கின்ற இவ்வினிய வேளையிலே, இவ்வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் அடியேன் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

1990களில் இவ்வாலய பரிபாலன சபையில் இணைந்து தொண்டாற்றிய இனிய சந்தர்ப்பத்தை இப்போது அடியேன் எண்ணிப் பார்க்கின்றேன். சிற்றறிவும் சிறுதொழிலும் உடையேனாகி அடியேன் இவ்வாலயத்தின் பரிபாலன சபை உறுப்பினராக, செயலாளராக, உப-தலைவராகச் சொற்ப காலம் பணிபுரியக் கிடைத்தமை அடியேனின் பூர்வ புண்ணியப் பலனென்றே நம்புகின்றேன்.

இந்த வகையில் ஓராலய நிர்வாக சபையில் பணிசெய்யும் போது, அதில் ஏற்படக்கூடிய பொறுப்புக்களை அடியேன் நன்கறிவேன். அவ்வகையில், இன்று எமது ஸ்ரீ சித்தி விநாயகப் பெருமானின் குடமுழுக்கினைச் செவ்வனே நிறைவேற்றியுள்ள இவ்வாலய பரிபாலன சபையினது மிகச் சிறந்த தெய்வீகப் பணிகளை நாம் எல்லோரும் நன்றியறிதலோடு எண்ணிப்பார்க்க வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

ஓர் ஆலயத்தின் சாதாரண, நித்தியக் கடமைகளைப் பரிபாலனம் செய்வதனை விடவும், அவ்வாலயத்தைப் புனருத்தாரணம் செய்து, அதற்கு முறையே கும்பாபிஷேகம் நடாத்தி வைப்பது என்பது மிகவும் கடினமானதொரு அருட்பணி என்பதை யாவருமறிவர்.

அவ்வகைப்பட்ட மிகப் பொறுப்பானதொரு சிறந்த பணியினை எமது ஆலய பரிபாலன சபையினர் இன்று பூரணமாக நிறைவு செய்திருக்கின்றார்கள் என்பது அவர்களது செயற்றிறனையே காட்டி நிற்கிறது.

அந்த வகையில் இவ்வாலய பரிபாலன சபையின் மகத்தான சாதனையை அடியேன் மனதாரப் பாராட்டுவதோடு, அவர்களது நற்பணிகள் மென்மேலும் தொடர வேண்டும் என்றும், அவர்களது சொந்த வாழ்வும் சிறந்து விளங்க எம் பெருமான் பேரருள் பாலிக்க வேண்டுமென்றும் இறைஞ்சி, சித்தி விநாயகனின் பாதம் பணிந்து மனமுவந்து வாழ்த்துகிறேன்.

சித்தி விநாயகர் துணை நிற்பாராக!

சிவப்பணியில்

**சைவப்புலவர் முரு.சேமகரன்,**

முன்னாள் செயலாளர், கல்லடி உப்போடை, நொச்சிமுனை
ஸ்ரீ சித்திவிநாயகர், ஸ்ரீ பேச்சியம்மன், ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயங்களின் பரிபாலனசபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச்செய்தி

மீன்பாடும் தேன்நாடாம் மட்டு மாநகரின் வித்தகர் விபுலானந்தர் வாழ்ந்த மண்ணில் பழமையும் மரபும் மிக்க ஆலயமாக எமது கல்லடி உப்போடை நொச்சுமுனை ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம் விளங்குகிறது. இவ் ஆலயத்திற்கு பெருமை சேர்க்கும் வகையில் பேசும் தெய்வம் பேச்சியம்மனின் ஆலயமும் அருகில் அமைந்து அருளாட்சி செய்வது தனிச் சிறப்பே.

மேலும் தொன்று தொட்டு எம் பெருமானின் ஆலயத்தில் நித்திய நைமித்திய கிரியைகள் யாவும் முறைப்படியும் பாரம்பரிய மரபின் வழியிலும் நடைபெற்று வருவது சிறப்பாகும். அத்துடன் பன்னெடும் காலம் பழைமை வாய்ந்த கொடித்தம்பம் அமைந்திருப்பதும் தல வரலாற்றைச் சிறப்பிக்கின்றது. பன்னிரண்டு வருடங்களுக்கு ஒருமுறை நடைபெறும் மகா கும்பாபிஷேக விழாவை முன்னிட்டு இம்முறை நடைபெற்ற ஆலய புனருத்தாரண பணிகளில் பங்கெடுக்க எனக்கும் சந்தர்ப்பம் கிடைத்தமைக்கு இறைவனுக்கு நன்றி சொல்வதோடு எனது பணிகளை எதுவித இடையூறுகளும் இன்றி முன்னெடுத்துச் செல்ல பல வழிகளிலும் உதவிய மகாசபை மற்றும் நிருவாக சபை உறுப்பினர்களுக்கு மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றேன். அத்துடன் ஆலய புனருத்தாரண பணிகள் துரிதகதியில் நிறைவுற்றமையை இட்டு மகிழ்ச்சி கொள்வதோடு மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்

இவ் ஆலயத்தின் புகழ் மென்மேலும் தழைத்தோங்க எல்லாம் வல்ல விநாயகப் பெருமானையும் பேச்சியம்மனையும் வணங்கி நிறைவு செய்கின்றேன்.

**த. தவராஜா**
முன்னாள் செயலாளர்,
கல்லடி உப்போடை, நொச்சிமுனை
ஸ்ரீ சித்திவிநாயகர், ஸ்ரீ பேச்சியம்மன், ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயங்களின் பரிபாலனசபை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச்செய்தி

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தி னிளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

அருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய மகா கும்பாபிஷேக நிகழ்வில் தொடர்ச்சியாக மூன்றாவது தடவையாகவும் திருப்பணி செய்யக்கிடைத்தமையை பெரும்பேறாகக் கருதுகிறேன். கல்லடி உப்போடை, நொச்சிமுனை திருப்பதியில் கிழக்கே கதிரவன் ஒளியில் வங்கக் கடல் ஓசையுடனும் மேற்கே வாவிக்கரையையும் புடைசூடி வீற்றிருக்கும் வினைகள் தீர்க்கும் விநாயகப் பெருமானும் இவற்றுக்கெல்லாம் உறுதுணையாக இருக்கும் எம் பெருமாட்டி ஸ்ரீ பேச்சியம்மன் அருகில் இருந்து அருள் பாலித்துக் கொண்டிருக்கின்றமை எமக்கு கிடைத்ததற்குரிய பெருங்கொடையாகும்.

எம் பெருமானின் குடமுழுக்கு குறைவின்றி சிறப்புற விரைவாக நடந்தேற வேண்டும் என்று பகுதியில் வாழும் மக்களாலும். கடல் கடந்து அன்னிய தேசங்களில் வாழும் எம்பெருமானின், பெருமாட்டியின் பக்தர்களாலும் வழங்கப்பட்ட பெருநிதிகளைக் கொண்டு திருப்பணி சேவைகளைத் திறம்பட நடாத்தி மெய் வருத்தம் பாராது பசி நோக்காது இரவு, பகல் பாராது சேவையாற்றிய அறங்காவலர்களை கண்டு பெருமிதம் கொள்கின்றேன்.

குடமுழுக்கை எதிர்பார்த்து நிற்கும் எம்பெருமானின் அடியவர்களுக்கு எவ்விதமான விக்கினங்களும் வராமல் எம்பெருமானின் குடமுழுக்கை இனிது கண்டு எம்பெருமானின் அருள் கடாட்சத்தையும் பெற்றுக் கொள்வதுடன் எம்பெருமானின் வளர்ச்சிக்கு மேலும் மேலும் வாரி வழங்கி எம்பெருமானின், பெருமாட்டியின் அடியவர்களுக்கு அருள்பாலித்து விக்கினங்கள் வராமல் இன்னும் என்ன வேண்டுமோ அவற்றை எல்லாம் வழங்கி எம்பகுதி வாழ் மக்கள் வாழ்வு மென்மேலும் ஓங்கும் ஓங்கிடும் என்பதில் ஐயமில்லை.

அப்பன் வினை தீர்க்கும் விநாயகரதும், அன்னை பேச்சியம்மையினதும் அருள் எல்லோருக்கும் கிடைப்பதாக. ஓம் சாந்தி! சாந்தி, சாந்தி

**பாலசுப்பிரமணியம் சுபாகரன்**
முன்னாள் செயலாளர்
கல்லடி உப்போடை, நொச்சிமுனை
ஸ்ரீ சித்திவிநாயகர், ஸ்ரீ பேச்சியம்மன், ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயங்களின் பரிபாலனசபை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துரை

திருவுரு வளர் தீவகம் தன்னில்
மருவுறு செந்நெற் களணிகள் சூழ்ந்து
வாழையும் கமுகும் வன்பலா மாவும்
தாழையும் சேர்ந்து தங்கனியுதவ
தாவின் வளர்த்தாள் தனிப்புகழ் பெற்ற
மட்டில்லா மட்டுமாநகர் தன்னில்
கிழக்கே வங்கக் கடலும்
மேற்கே பாடுமீன் வாவியும்
மத்தியில் எழில்பெறு கல்லடி உப்போடை கிராமத்தில்
அன்னையும் மகனுமாய் அருகமர்ந்த, சிந்தை நிறைந்த
சித்தி விநாயகரும் ஆயிரம் கண்ணுடைய அழகு சொரூபி
பேச்சியம்மனும், அருள் பாலிக்கின்ற
சிவானந்தா வித்தியாலயம் கல்வியிலும், விளையாட்டிலும்
மாணவர்கள் அணிசேர ஒன்றுகூடி அமைந்த கழகம்
சிவானந்தா விளையாட்டுக் கழகமது
ஆல்போல் வளர்ந்து அறுகுபோல் வேருன்றி
சர்வதேசமதில் தன்புகழ் வளர
இறையருள் வேண்டி நிற்கும்
சிவானந்தா விளையாட்டுக் கழகம்

தொந்தி வயிறும் துதிக்கையும் சேர்ந்து
தண்டச்சிலம்பும் தங்கக் கொலுசும்
நாதமும் விந்தும் தர்த்தனம் புரிய
தலைவன் இல்லா தலைவன் நீ
ஆடிய பரதத்தை அனைவரும் கனவில் கண்டு
வியந்து கைகூப்பி நின்றது போல்
நானும் உன் நடனத்தைக் காண
நல்லருள் புரிவாய் நர்த்தன வினாயகனே.

**க. முரளீதரன் JP**
தலைவர், சிவானந்த விளையாட்டுக்கழகம்
(அகில இலங்கை சமாதான நீதவான்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச்செய்தி

மட்டக்களப்பு நகரை அண்மித்ததாக கல்லடிப் பாலத்திற்கு அப்பால் உள்ள கல்லடி உப்போடை பிரதேசத்தில் குடியிருக்கும் அருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயகப் பெருமானிற்கு இன்று குடமுழுக்கு நடைபெறுவதையிட்டு இவ்வாலயத்தில் ஓர் நீண்ட கால முன்னாள் நிர்வாக உறுப்பினர் என்ற வகையிலும், தற்போதும் இவ் ஆலயத்தின் செயற்பாடுகளுடன் இணைந்திருப்பவன் என்ற வகையிலும் அளவில்லா ஆனந்தமடைகின்றேன்.

இவ் ஆலயத்திற்கு மிக நீண்ட வரலாறும், ஆகம விதி முறைக்கமைவான நித்திய நைமித்த பூசைகளும், விசேட விரத அனுஸ்டானங்களும், மற்றும் தேரோட்டம், தீர்த்தக் கேணியில் தீர்த்தோற்சவம் என்பவற்றை உள்ளடக்கிய வருடாந்த மஹோற்சவமும் அமையப் பெற்றிருப்பது ஓர் சிறப்பம்சமாகக் காணப்படுகின்றது.

அதேபோன்று இவ் ஆலயத்தை சூழ்ந்து பரம்பரை பரம்பரையாக வாழ்கின்ற இந்துப் பெருமக்களும், ஆலயத்தை நாடி வரும் வெளிப் பிரதேச அடியார்களும் ஆலயத்தில் வீற்றிருக்கும் ஸ்ரீ சித்தி விநாயகப் பெருமானின் அருட் கருணையினால் ஈர்க்கப்பட்டதன் காரணமாக அவர்கள் இவ் ஆலயத்துடன் பின்னிப் பிணைந்து செயற்பட்டு வருகின்றமையையும் நேரில் காணலாம்.

இவ்வாறான சிறப்பம்சங்களைக் கொண்டுள்ள இவ் ஆலயம் புதுப் பொலிவுடன் புனரமைக்கப்பட்டு அங்கு ஸ்ரீ சித்தி விநாயகப் பெருமான் குடியமர்த்தப்பட்டு இன்று மகா கும்பாபிஷேகம் நடைபெறுவதன் காரணமாக, இப் பிரதேசம் முழுவதும் விநாயகரின் அருளால் மேலும் புதுப் பொலிவு பெறுவதுடன், அங்கு வாழ்கின்ற மக்களும் பல்வேறு வழிகளிலும் நல்நிலை அடைவர் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

இவ் ஆலயத்தில் வீற்றிருக்கும் விநாயகரின் அருட் கருணையால் ஈர்க்கப்பட்ட நிலையில் வாழ்ந்த எமது மூதாதையர்கள் பலர் தமது பூர்வீகச் சொத்துக்களை கூட இவ் ஆலயத்திற்கு எழுதிக் கொடுத்துள்ளமை விநாயகரின் கீர்த்தி, புகழ் என்பவற்றிற்குச் சான்றாகும்.

அந்த வகையில் சர்வ வல்லமைமிக்க ஸ்ரீ சித்தி விநாயகப் பெருமானின் ஆலய மகா கும்பாபிசேகமும் அதனையொட்டிய மலர் வெளியீடும் சிறப்புடன் நடைபெற ஸ்ரீ சித்தி விநாயகரை மனதார வேண்டி வாழ்த்துகின்றேன்.

**இ. தனபாலன்,**
முன்னாள் நிர்வாக உறுப்பினர்
கல்லடி உப்போடை, நொச்சிமுனை
ஸ்ரீ சித்திவிநாயகர், ஸ்ரீ பேச்சியம்மன், ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயங்களின் பரிபாலனசபை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஸ்ரீ சித்தி விநாயகப் பெருமானின் சிறப்பு



வாக்குண்டாம் நல்லமனம் உண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது - பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கையான் பாதந்
தப்பாமல் சார்வார் தமக்கு

இயற்கை எழில் நிறைந்து விளங்கும் ஈழத்திருநாட்டில் மீன்பாடும் தேனாடாம் மட்டு மாநகரில் கல்லடி உப்போடை என்கிற திவ்யப்பகுதியிலே பன்னெடுங்காலமாக கோயில்கொண்டு வீற்றிருந்து வேண்டுவோருக்கு வேண்டுவதை வாரிவழங்கும் தெய்வமாம் கல்லடி உப்போடை ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம்.

இவ் ஆலயத்தின் சிறப்பம்சம் என்னவென்றால் இடப்பக்கமாக மிகப்பழமைவாய்ந்த அருட்பெருஞ்சக்தியாக ஆலயம் கொண்டமர்ந்து அருளாட்சி செய்துவரும் ஆதிபராசக்தி அன்னை பேச்சி அம்மன் வேண்டுவோருக்கு வேண்டும் வரத்தை அள்ளிவழங்கி அருள்மழை பொழிந்து கொண்டிருக்கின்றார்.

ஆலயம் என்பது இறைவன் திருவடியில் மனமாகிய ஆன்மா லயித்து இருக்கும் இடமாகும். எந்தச் சக்தியிருந்து பிரணவம் பிறந்ததோ, யாரிடம் இருந்து வேதங்கள் பிறந்தனவோ அவரே இந்த ஜகமெங்கும் நிறைந்தவர். எந்தப்பிரபஞ்சம் நித்தியமானதோ, ஆதிஅந்தம் இல்லாததோ அந்த சக்தியே கணபதி ஆவார்.

எம்பெருமான் ஸ்ரீ சித்தி விநாயகர் தீர்த்த உற்சவம் ஆனி உத்தரத்தன்று இடம்பெறும். ஸ்ரீ சித்திவிநாயகப் பெருமான் தீர்த்தம் ஆடுவதற்கு 'புஷ்பகரணி' என்று அழைக்கப்படும் தீர்த்தக்குளம் உள்ளது. இத்தீர்த்தக்குளத்தின் சிறப்பு யாதெனில் இந்திய நாட்டின் புனித திருத்தலங் களில் இருந்து கொண்டுவரப்பட்ட புனித தீர்த்தம் சேர்க்கப்பட்டிருப்பது மேலும் இக்குளத்துக்குப் பக்கத்தில் நாகதம்பிரான் ஆலயம் ஒன்று அமைந்திருப்பது மிகவும் சிறப்பு வாய்ந்ததாய் உள்ளது.

பிரபஞ்சம் எங்கும் பரந்து விரிந்துநிற்கும் பரம்பொருளைச் சிவாச்சாரியார் மந்திரம், பாவனை கிரியைகளின் மூலமாக அக்கினியிலும், கும்பத்திலும் ஆவாகனம் செய்து வழிபட்டு அங்கு ஸ்தாபிக்கப்பட்ட திருவுருவத்திலே சேர்த்து நிலைபெற்றிருந்து ஆன்மகோடிகளுக்கு அருள்புரியுமாறு செய்தலே மகா கும்பாபிஷேகத்தின் நோக்கமாகும்.

கல்லடி உப்போடை ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய புனராவர்த்தன பிரதிஷ்டா குடமுழுக்குப் பெருவிழா 30.01.2020 அன்று வெகு சிறப்பாக நடைபெற்றது. அதைத் தொடர்ந்து ஆலய அறங்காவலர்கள் மலர் ஒன்றினை வெளியிடுவதையிட்டு மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்தவகையில் மட்டக்களப்பு கல்லடி உப்போடை ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய கும்பாபிஷேகத்தை சிறப்புற நடாத்திய ஆச்சாரியப் பெருமக்களுக்கும், கும்பாபிஷே கத்துக்குரிய ஒழுங்குகளை சிறப்புற மேற்கொண்ட ஆலய பரிபாலனசபையினருக்கும், அனைத்து பக்த அடியார்கட்கும் எனது மனமார்ந்த பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

உலகில் யாவரும் இன்பமாக வாழ எல்லாம்வல்ல ஸ்ரீ சித்திவிநாயகப் பெருமான் அருள்பாலிப்பாராக!

**செ. சுதர்மசீலன்**
உறுப்பினர்,
கல்லடி உப்போடை, நொச்சிமுனை
ஸ்ரீ சித்திவிநாயகர், பேச்சியம்மன், நாகதம்பிரான் ஆலய பரிபாலனசபை அங்கத்தவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லடி உப்போடை நொச்சிமுனை

# ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தின் மஹா கும்பாபிஷேகங்கள்

**கும்பாபிஷேகங்கள் : (குடமுழுக்கு)**

கும்பம், அபிஷேகம் என்ற இரு வட சொற்களும் புணர்ந்து, கும்பாபிஷேகம் என்ற ஒரு சொல்லாயிற்று. இச் சொல்லினைத் தமிழ் விதிமுறைகளுக்கேற்பத் தமிழுக்கு மாற்றம் செய்கின்ற போது, கும்ப அபிஷேகம் என்பது கும்பாபிஷேகம் எனப் புணர்ந்து தற்பவமாக வரும். இச் சொல்லுக்கு ஒத்த கருத்துள்ள தமிழ்ச் சொல் குடமுழுக்கு என்பதாகும். ஆக கும்பாபிஷேகம், குடமுழுக்கு, பிரதிஷ்டை என்ற பிரதிட்டை என்பன ஒத்த பொருளுணர்த்தும் சொற்களாகும்.

கும்பாபிஷேகம் என்பது ஓராலயத்தின் மூலமூர்த்தியையும், பரிவார தெய்வங்களையும் சைவாகம விதிகளுக்கமைய முறைப்படி அவ்வத் தானங்களில் நிலைநிறுத்தி, மந்திரிக்கப்பட்ட கும்ப நீரினால் முறைப்படி அபிஷேகம் செய்து தெய்வங்களின் சக்தி வீச்சினையும் தெய்வ சாந்நித்யத்தையும் அவ்வாலயத்தின்கண் ஏற்படுத்துதல் ஆகும்.

தாபனம் செய்தல் அல்லது தாபித்தல் என்பது நன்கு நிலைநிறுத்துதல் என்பதைக் குறிக்கிறது. கும்பாபிஷேகம் செய்யும் போது, கும்ப தீர்த்தத்தில் இறைவனை ஆவாஹனம் பண்ணி, யாகத்தின் மூலம் மந்திர உச்சாடனம் செய்து இறைசக்தியை உருவேற்றி, அந்தக் கும்ப தீர்த்தத்தை இறை பிம்பத்திலும், கோபுர கலசங்களிலும் அபிஷேகம் செய்வர். கும்பத்தை உடலாகவும், மேலே சுற்றப்பட்ட நூலானது நாடி நரம்புகளாகவும், கும்பத்துள்ளே இருக்கும் நீரானது இரத்தமாகவும், உள்ளிடப்பட்ட தங்கம் சீவனாகவும், தேங்காய் தலையாகவும், கும்பத்தின் கீழே பரப்பப்பட்ட தானியமேடை ஆசனமாகவும்






Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



பாவனை செய்யப்படும். மந்திர சக்தியினால் சாதாரண கும்பம் சத்தி வாய்ந்த கலசமாகவும், ஆலயமும் அதன் சுற்றுப்புறங்களும் மந்திர வலைகளினாற் பின்னப்பட்ட சத்தி வலைகளா கவும் மாற்றமடைகின்றன.

இக் கும்பாபிஷேகமானது ஒரு கும்பாபிஷேகம் நடைபெற்றுப் பன்னிரெண்டு ஆண்டுகள் பூரணமானதும் சைவாகமங்களில் குறித்தபடி செய்யப்படல் வேண்டுமென்பது விதியாகும். இது பல்வேறு கிரியைகளையும் உள்ளடக்கி விரிவான முறையிலும், பெரும் பொருட்செலவிலும் செய்யப்படுவதனாலே மஹா கும்பாபிஷேகம் எனவழைக்கப்படுகிறது. நாம் காணும் இந்தப் பிரபஞ்சம் முழுவதும் பரம்பொருளானது அந்தர்யாமியாக வியாபகம் கொண்டுள்ளது. இப் பரம்பொருளைச் சிவாச்சாரி யர்கள் மந்திரங்கள், பாவனைகள், கிரியைகள் என்பனவற்றினூடாக அக்கினியிலும் கும்பம்,





தம்பம், விம்பம் ஆகியவற்றிலும் ஆவாஹனம் என்ற எழுந்தருளல் செய்து, அப்பரம் பொருளை வழிபட்டு, தாபனஞ் செய்யப்பட்ட திருவுருவத்திலே சேர்த்து விடுவதன் மூலமாக இவ்வுலக மக்களுக்கு இன்னருள் புரியச் செய்தலும், எண்குணத்தனான இறைவன் நிலம், நீர், தீ, வளி, வெளி, சூரியன், சந்திரன், ஆன்மா என்ற எட்டு நிலைகளிலும் நிலைத்து நின்று அருள் பாலிக்கிறான் என்பதும், இவ்வாறே நிலைத்து நிற்கும் இறைவன் கும்பத் தினுள்ளே நீராகவும், மந்திர உச்சாடனத்தில் வளியாகவும், ஆகாயப்பரப்பில் வெளியாகவும், ஓம குண்டத்திலே தீயாகவும், யாகமண்ட பத்திலே நிலமாகவும், தண்மையிலே சந்திரனா கவும், வெம்மையிலே சூரியனாகவும், பசுக்களி டையே ஆன்மாவாகவும் எழுந்தருளி, மூல விக்கிரகத்தின் மீது திருவருளாகச் சொரிகின் றான் என்பதுமே கும்பாபிஷேகத்தின் பண்பும், பொருளும், பயனுமாகும்.

ஆலயமொன்றில் அமையவிருக்கும் விக்கிரகத்தை பிரதிஷ்டை செய்வதன் காரண மாக இவ்வகைக் கும்பாபிஷேகம் பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் எனச் சிறப்பித்துக் கூறப்படும். இக் கும்பாபிஷேக மானது நான்கு வகைப்படுமெனச் சிவாகமங்கள் கூறுகின்றன. அவையாவன:-

**அநாவர்த்தனம்**

ஆலயம் எதுவும் இல்லாத ஓரிடத்தில் புதிதாக ஓராலயம் அமைத்து, அவ்வாலயத்தில் புதிதாக ஒரு மூர்த்தியைப் பிரதிஷ்டை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செய்வது அநாவர்த்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் ஆகும்.

**ஆவர்த்தனம்**

முன்பு வழிபடப்பட்டு வந்த ஓராலயம் முற்றாக அழிந்து போனால், அவ் விடத்தில் மீண்டும் ஓர் ஆலயம் அமைத்து, அதன் மூல மூர்த்தியைப் பிரதிஷ்ட்டை செய்வது ஆவர்த்தன பிரதிஷ்டா கும்பாபிஷேகம் ஆகும்.

**புனராவர்த்தனம்**

வழிபாடுகள் பூசைகள் முதலியன நிகழ்ந்துவந்த ஆலயம் ஒன்று திருத்த வேலை களின் நிமித்தம் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு, திருத்த வேலைகள் நிறைவடைந்ததும், மீண்டும் மூர்த்தியைப் பிரதிஷ்ட்டை செய்வது புனராவர்த்தனப் பிரதிஷ்ட்டா கும்பாபிஷே கம் ஆகும்.

**அந்தரிதம்**

ஓராலயத்தினுள் மரணம், திருட்டு, ஆசாரங்குறைந்தவர் போன்றவர்கள் உள் நுழைதல் போன்ற சம்பவங்கள் நிகழ்ந்ததன் காரணமாகச் செய்யப்படும் பிரதிஷ்ட்டை அந்தரியப் பிரதிஷ்ட்டா கும்பாபிஷேகம் ஆகும். இவற்றுள் அந்தரியப் பிரதிஷ்ட்டா கும்பாபிஷேகத்திற்கு சுபமுகூர்த்த நிர்ணயம் செய்யப்படுவதில்லை. ஏனைய வகைப் பிரதிட்டா கும்பாபிஷேகங்களுக்கு முறையே ஆகம விதிகளுக்கமைய சுபமுகூர்த்தம் குறிக்கப்பட்டு, உரிய கும்பாபிஷேகங்கள் நிகழ்த்தப்படும்.

கும்பாபிஷேகக் கிரியைகளின் போது, பல்வேறுபட்ட விரிவான யாகம் முதலிய கிரியைகள் செய்யப்படுவதனால், இவற்றைத் தரிசனம் செய்தல் பெரும் பேறாகக் கருதப் படுகின்றது. யாகங்கள் இயற்றப்படும் ஓம குண்டங்களைத் தரிசித்தல், அவற்றி லிருந்து வெளியேறும் ஓமப் புகையைச் சுவாசித்தல், சிவாச்சாரியர்களின் மந்திர ஒலிகளைச் செவி மடுத்தல் போன்ற செயல்களினால் உடல் நலமும், பாவ நிவர்த்தியும், புண்ணியப் பேறும் நம்மை வந்தடைகின்றன என சிவாகமங்கள் எடுத்துரைக்கின்றன.

பூரணமான ஒரு மஹா கும்பாபிஷே கமானது 64 வகையான அங்கக் கிரியைகளைக் கொண்டன எனவும், அதனைச் சுருக்கி 55 வகைக் கிரியைகளைக் கொண்டன எனவும் ஆகமங்கள் விதிக்கின்றன என்று சைவாலயக் கிரியைகள் என்ற நூல் குறிப்பிடுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மஹா கும்பாபிஷேகமொன்றின் போது இடம் பெறும் கிரியைகள் பலவற்றையும் சைவமக்கள் அடிப்படையிலாவது அறிந்து வைத்திருத்தல் அவசியமாகின்றது. அவையாவன:

முகூர்த்த நிர்ணயம்
திரவியபாகம்
அநுஜ்ஞை
ரஷோக்னஹோமம்
வாஸ்துசாந்தி
அங்குரார்ப்பணம்
தான்யாதிவாசம்
சயனாரோபணம்
பிம்பசுத்தி
பதவிந்நியாசம்
பிம்பஸ்தாபனம்
சாங்கோபாங்கப் பிரத்தியங்க
யாத்ரா தானம்
ஆவாகனம்
ரக்ஷாவிசர்ஜனம்
ஆசார்யவரணம்
கர்ப்பநியாசம்
கிராமசாந்தி
சாந்திஹோமம்
நவக்கிரகமகம்
ரகஷாபந்தனம்
நயனோன்மீலனம்
அக்கினிகாரியம்
பிம்பப்பிரதக்ஷணம்
ரத்நநியாசம்
அஷ்டபந்தனம்
நியாசம்
கும்பத்தாபனம்
கும்பாபிஷேகம்
அவபிருதஸ்நானம்
சல்ய உத்தாரணம்
கணேசபூசை
பிரவேசபலி
மூர்த்திஹோமம்
மிருத்சங்கிரகணம்
ஜலாதிவாசம்
கிராமப்பிரதக்ஷணம்
நாமகரணம்
கர்ப்பக்கிருகம்
யந்திரஸ்தாபனம்
ஷடத்துவநியாசம்
ஸ்பர்ஸாகுதி
சகளீகரணம்
ஆசீர்வாதம்
ஆச்சார்யோற்சவம்

என்பன மிக முக்கிய கிரியைகளாகும். ஆயினும் கும்பாபிஷேகமொன்றின் போது இவையனைத்தும் செய்யப்படுவதில்லை என்பதும், அந்தந்த ஆலயத்தின் தேவைகளுக் கேற்ப சிவாச்சாரியர்களால் தீர்மானிக்கப்படும் முறையில் இவை முன்னெடுக்கப்படும் என்பதும் குறிப்பிடத்தக்கனவாம்.

**முக்கிய சில கிரியைகளின் விளக்கம் :**

**ஆச்சார்யவரணம் :**

பிரதிஷ்ட்டா மகாகும்பாபிஷேகப் பெரு விழாவை நடாத்தி வைக்கும் சிவாச்சாரியாரை நோக்கி, அதனைச் செவ்வனே நடாத்தி வைக் குமாறு வேண்டுவதே ஆச்சார்யவரணமாகும்.

**திரவிய விபாகம் / திரவிய சுத்தி:**

முறைப்படி உரிய மந்திரங்கள் கொண்டு, கும்பாபிஷேகத்திற்குத் தேவையான பொருட்களைத் தேவைகளுக்கேற்பப் பிரித்து வைப்பதே திரவிய விபாகம் எனப்படும். பின்பு அப் பொருட்களைச் சுத்தி செய்தல் திரவிய சுத்தியாகும். இவற்றைத் தொடர்ந்து பல்வேறு கிரியைகள் ஆகம விதிகளுக்கமையச் சிவாச்சாரியரால் நிகழ்த்தப்படும்.

**கும்ப உத்தாபனம் :**

உரிய சுபநேரத்தில் எல்லாவிதமான தோஷங்களும் நீங்கிப்போகும் பொருட்டு, ஆலய பரிசாரகரை வாகனமாகப் பாவனை செய்து, அவரது சிரசின் மேலே பிரதான கும்பத்தை வைத்து, மங்கல வாத்தியங்கள் ஒலிக்க வீதிவலம் வருதலே கும்ப உத்தாபனம் என்பதாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கும்பாபிடேகம்**

நாதஸ்வரம் மேளம் ஆதியன ஒலி செய்ய, சிவாச்சாரியர்களின் வேத சிவாகம மந்திரங்களின் ஓசை பரவ, பிரதான கும்பமும் ஏனைய கும்பங்களும் மூல மூர்த்தியின் முன்பாக வைத்து உரிய கிரியைகள் நிகழ்த்தப் பட்டு அபிஷேகம் நிகழ்த்தப்படுதலாகும்.

**மஹாபிடேகம் :**

மூல மூர்த்திக்கு உரிய அபிஷேகப் பொருள் கொண்டு அபிஷேகம் செய்து, ஸ்நபனாபிடேகம் செய்யப்படுவதே மஹாபி டேகமாகும். இதன் பின்னர் ஆச்சார்ய பூஜை என்ற சிவாச்சாரியார்கள் உபசாரம் இடம் பெறுவதோடு பிரதிஷ்ட்டா மஹா கும்பாபிஷே கம் நிறைவுறும். அன்றிரவு திருக்கல்யாணமும், திருவூஞ்சலும் நடைபெறும்.

**மண்டலாபிடேகம் :**

கும்பாபிஷேகம் நிறைவடைந்த நாளிலிருந்து நாற்பத்தைந்து நாட்கள் கொண்ட ஒரு காலப்பகுதியே ஒரு மண்டலமாகும். இந்த 45 நாட்களும் விசேட அபிஷே கங்களும், ஆராதனைகளும் நடைபெறும்.

ஒரு மண்டல காலத்தைத் 'திரிபட்சம்' எனவழைப்பர். திரி என்றால் மூன்று, பட்சம் அல்லது பக்கம் என்பது பதினைந்து நாட்கள் கொண்ட ஒரு காலப்பகுதி ஆகவே 3x15=45 நாட்கள் ஒரு மண்டலமாகும்.

**சங்காபிடேகம்**

மண்டலத்தின் இறுதித் தினமாகிய 45ம் நாள் சங்காபிடேகம் இடம்பெறும். கும்பாபிஷேகம் நடைபெறும் ஆலயங்களின் வசதிக்கேற்ப நூற்றெட்டுச் சங்குகளினாலும், ஆயிரத்தெட்டுச் சங்குகளினாலும் சங்காபிஷே கம் நிகழ்த்தப்படும். அஷ்டோத்தரச் சதசங்கம் என்பது நூற்றெட்டுச் சங்குகளையும், அஷ்டோத் தரச் சஹஸ்ரசங்கம் என்பது ஆயிரத்தெட்டுச் சங்குகளையும் குறிப்பனவாம்.

இவ்வகைச் சிறப்புக்களுடன் சிவாக மங்களில் விரித்துரைக்கப்பட்டுள்ள பிரதிஷ்ட்டா கும்பாபிஷேகங்களில், புனரா வர்த்தன பிரதிஷ்ட்டா மஹா கும்பாபிஷே கமே தற்போது கல்லடி உப்போடை நொச்சி முனை ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தில் மிகச் சிறப்பான முறையில் நடைபெற்றுக் கொண்டி ருக்கிறது. இப் புண்ணிய கைங்கரியம் நிகழ்வ தற்குக் காரணம் எல்லாம் வல்ல ஸ்ரீ சித்தி விநாயகப் பெருமானின் திருவருளேயன்றி வேறென்னவென்று சொல்வது?

**ஐந்தாவது மஹா கும்பாபிஷேகம் : (30.01.2020)**

கல்லடி உப்போடை நொச்சிமுனை ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம் இதுவரை நான்கு மஹா கும்பாபிஷேகங்களைக் கண்டுள்ளது.

1. 1928ம் ஆண்டில் முதலாவது கும்பாபிஷேகம்
2. 1942ம் ஆண்டில் சம்ரோஷண கும்பாபிஷேகம்
3. 1988ம் ஆண்டில் (06.07.1988) புனராவர்த்தன மஹா கும்பாபிஷேகம்
4. 2003ம் ஆண்டில் (27.01.2003) புனராவர்த்தன மஹா கும்பாபிஷேகம்.

இவ்வாறு 1824ல் கால்கோள் இடப் பட்டுப் படிப்படியாக வளர்ந்து, அளப்பரிய ஆன்மிகத் தேவைகளைச் செவ்வனே நிறைவேற்றி, நான்கு கும்பாபிஷேகங்களைக் கண்டுள்ள இவ்வாலயமானது, இன்று தனது 195 ஆவது அகவையைப் பூர்த்தி செய்து தலை நிமிர்ந்து நிற்கும் இவ்வரிய சந்தர்ப் பத்தில், தனது ஐந்தாவது கும்பாபிஷே கத்தையும் காண்கிறது என்ற மகத்தான செய்தி பெரு மகிழ்வை அளிக்கிறது.

ஸ்ரீ சித்தி விநாயகப் பெருமானின் திருவருட்பேறு சித்தித்துள்ளதன் காரணமாக, மிகச் சிறப்பு வாய்ந்த மஹா கும்பாபிஷேகம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைகூடியுள்ள இவ்வினிய சந்தர்ப்பத்தில், இவ்வரிய திருப்பணியினை எம் பெருமான் துணைகொண்டு நிறைவேற்றித் தந்துள்ள ஆலய பரிபாலன சபையினரையும், ஆலய முகாமையாளரையும், இவ்வூர் மக்களையும் நாம் தவறாமல் நினைவுகூர வேண்டிய கடப்பாடு உடையவர்களாக இருக்கின்றோம்.

இம் மஹா கும்பாபிஷேகத்தினைச் செவ்வனே நடாத்திக் கொண்டிருக்கின்ற இவ்வாலய பரிபாலன சபையானது, இறுதியாக 2003ம் ஆண்டு நடைபெற்ற புனராவர்த்தன மஹா கும்பாபிஷேகத்தினைத் தொடர்ந்து பதினாறு ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில், ஆலயத்தின் பழுதடைந்த கட்டிட நிலைமைகளையும் கருத்திற் கொண்டு, புனராவர்த்தன மஹா கும்பாபிஷேகம் ஒன்று நடத்தப்பட வேண்டியதன் அவசியத்தினை நன்குணர்ந்து கொண்டது. அதனடிப்படையில் முறையே பாலஸ்தாபனம் செய்யப்பட்டு, அன்று முதல் எம்பெருமான் புதிதாக வடிவமைக்கப் பட்ட பாலாலயம் என்ற இளங் கோவிலிலே ஆவாஹிக்கப்பட்டுக் குடிய மர்த்தப்பட்டார்.

அன்று முதல் ஆலயத்தின் திருத்த வேலைகள் முன்னெடுக்கப்பட்டன. அர்த்த மண்டபம், மகா மண்டபம், பலி பீடம், கொடித்தம்பம், வசந்த மண்டபம், இரு மணித்தூண் கோபுரங்கள் என்பனவும், பலவும் புதிதாக அமைக்கப்பட்டும், வேண்டிய திருத்தங்கள் செய்யப்பட்டும் நேர்த்தியான முறையில் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளன.

இவ்வாலய பரிபாலன சபையின் அயராத பணிகளும், இப் புண்ணியமான கைங்கரியத்தைச் செவ்வனே செய்து முடித்த திறமையும் நிட்சயமாகப் பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும்.

தத்தமது சொந்த அலுவல்களுக்கு மத்தியிலும், ஆலயத் திருப்பணிகளுக்கென நேரமொதுக்கி, வேண்டிய பணிகளையெல்லாம் நிறைவு செய்துள்ள இப் பரிபாலன சபையின் தலைவர், செயலாளர், பொருளாளர், ஏனைய உறுப்பினர்கள் அனைவரும் நிட்சயம் பாராட்டுக்குரியவர்களே. அவர்களோடிணைந்து தோளோடு தோள் நின்றுழைத்த ஆலய முகாமையாளரும், சம்பந்தப்பட்ட அனைத்துப் பொது மக்களும், தொண்டர்களும், உபயகாரர்களும் அயராதாற்றிய அரும்பெரும் பணிகளை விரித்துரைக்க வார்த்தைகளே போதாது என்பதே என் நிலைப்பாடாகும்.

“செயற்கரிய செய்வர் பெரியர்” என்ற வள்ளுவன் வாக்கிற்கிணங்க செயற்கரியன செய்து உயர்ந்து நிற்கும் இவர்கள் அனைவரையும் எவ்வளவு பாராட்டினாலும் தகும் என்பதை இச்சந்தர்ப்பத்தில் சொல்லி வைக்க ஆசைப்படுகின்றேன். எல்லாம் வல்ல ஸ்ரீ சித்தி விநாயகப் பெருமானின் பேரருள் மழை இவர்கள் அனைவர் மீதும் பொழிவதாக!

## கும்பாபிஷேகத்தாற் குளிர்ந்தனையோ!

(எண்சீர்க்கழிநெடிலடி - அந்தாதித் தொடை)

எத்திக்கும் புகழோங்கும் ஏற்றமிகும் ஆலயமாம்
ஐங்கரனாம் விநாயகன் அமர்ந்தவெழி லோவியமாம்
தித்திக்கும் தமிழ்தந்த திருமுருகன் சோதரனாம்
திக்கெட்டும் திகழுமவன் திருவருளோ ராயிரமாம்
முத்திக்கும் மேன்மைக்கும் மார்க்கமென் றானவனாம்
முத்தீயி லெழுந்தருளி மோகங்கள் தீய்ப்பவனாம்
சித்திக்கும் வெற்றிக்கும் சத்தியமாய்க் காரணனாம்!
சித்தி விநாயகனே குடமுழுக்கிற் குளிர்பவனாம்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவனவனின் அண்ணனெனப் பார்விளங்கத் தோற்றுவான்
பார்வதியாள் பாலகனாய்ப் பாசத்தைப் போற்றுவான்
தவமுனிவன் கமண்டலத்துள் தண்ணீரைக் கங்கையாய்
தட்டிவிட் டாறாக ஓடவைத்து மாற்றுவான்
சிவமகனாய் ஒருகணத்தில் சுற்றிவந்து மாங்கனியைச்
சொந்தமாய்த் தான்பெற்றுச் சினக்குகனைத் தேற்றுவான்
முகமைந்து விநாயகனாய் மேன்மைகளைக் காட்டுவான்
மூலவனாய் முழுக்காடி முறையோடர சோச்சுவான்!

வான்சிறக்கும் மழைமேகம் வழியெங்கும் நீரிறைக்கும்
வானவரும் வந்திறங்கி வழிபாடு தானியற்றும்
தேன்பினிற்றும் மலர்மாலை தொடுத்தடியார் துதிபாடும்
தானினைந்து இன்னருளைத் தந்தருளத் தானிருக்கும்
நோன்பிருக்கும் மெய்யடியார் நெகிழ்ந்திருக்க அருள்புரியும்
நானிலத்தே நல்லறங்கள் நிலைக்குமா றொளிபெருக்கும்
நான்மறைக்கும் எட்டாத நற்பொருளாய் வீற்றிருக்கும்
நாயகனாம் விநாயகனின் நல்லருளால் நனிசிறக்கும்!

சிறக்குமுந்தன் பேரருளாற் செழிக்கும்மென் றெம்வாழ்வும்
சிரத்தைமிக வுளங்கொண்டு சீர்மிகு பணிசெய்தோம்
கறக்குமா தன்கன்றைக் கனிந்தவன் போடணைத்துக்
களிப்புடனே பாலூட்டுமப் பரிசே நீகொண்டெங்கள்
கிறக்கமெலா மிக்கணமே களைந்திடவே வாருமையா
கணங்களைப் பண்டுநாட் காத்தபடி காருமையாபே
ருறக்கநிலை உயிர்ப்படங்கல் என்றவத்தை யுறுங்காலை
உயிர்க்காலா யுடனிருந்து உனதரு ளௌமைக்காக்கும்!

கும்பா பிஷேகத்தாற் குளிர்ந்தனையோ கணநாதா
குளிர்கின்ற பூசனையாற் கனிந்தனையோ குணசீலா
அம்பா ளருகிருக்க அமர்ந்தனையோ பொங்கிவரும்
அன்பா லவள்பாதம் பணிந்தனையோ சிவபாலா
எம்பா லருள்கூர்ந்து இரங்கினையோ புதுமனையில்
எழிலாய்க் குடியமர்ந்து மகிழ்ந்தனையோ உமைபாலா
உம்பா லுளங்கசிந்து ஊனுருகித் தெண்டனிட்டோம்
உம்பரும் வணங்குமுந்தன் புகழ்பரவும் எத்திக்கும்!

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்!!

சைவப்பணியில்,
சைவப்புலவர்
**முரு. சேமகரன்**
(கவிஞர் கல்லோடைக்கரன்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஸ்ரீ சித்தி விநாயகர்
## ஆலய வரலாறு

மீன்பாடும் தேனாடெனக் கவிஞர் பெருமக்களாலும், தமிழ்ப் பண்பாட்டின் விளை நிலமென ஆன்றோராலும் போற்றப் பெறும் மட்டுமாநகரில், கலைமகள் திருமகள் இருவரதும் கடாட்சம் குறைவறப் பெற்று விளங்கும் பெரும்பதியாம் கல்லடி - உப்போடை நொச்சிமுனைக் கிராமத்திலே, சுமார் நூற்றுத் தொண்ணூற்றாறு (196) வருடங்களுக்கு முன், அதாவது 1824ம் ஆண்டில், இப்பகுதி யில் வாழும் குருகுல மக்களின் வழிபாட்டுக் கென ஸ்தாபிக்கப்பெற்ற தனது பூர்வீகத்தைக் கொண்டுள்ள பிரபல்யம் வாய்ந்த ஸ்ரீசித்திவிநாயகர் ஆலயம்.

இன்று பூரணபொலிவு பெற்று விளங்கும் இவ்வாலயம், 'சீவபூசையே சிவபூசை' எனும் உயர்ந்த குறிக்கோளை இலட்சியமாகக் கொண்டு பரந்த அளவில் சமய - சமூக சேவையாற்றும் ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் தேசிய மட்டத்தில் கல்விப்பணி புரிந்து உயர்ந்து விளங்கும் அறிவாலயமாகிய சிவானந்த வித்தியாலயம், இராமக்கிருஷ்ண மிஷன் தண்ணிழலிலே பிரகாசிக்கும் பெண்குழந்தைகளின் சரணாலயம், முத்தமிழ் வித்தகன் விபுலானந்த அடிகளாரின் பெயரிலே இயங்கும் இசை-நடனக் கல்லூரி என்பவற்றை உள்ளடக்கிய உயரிய சூழலில் பிரகாசித்தாலும், இதன் எளிமையான ஆரம்பத்தைப் பின்னோக்கிப் பார்ப்பது சுவையான ஒரு விடயமாகும்.

அன்று இப்பிரதேசம் இத்தகைய முன்னேற்றத்தைக் கொண்டதாயிருக்கவில்லை. கல்வி - பொருளாதார நிலை மிகவும் பின் தங்கியதாயிருந்தது. விவசாயம் வியாபாரம் முதலிய சுயமுயற்சிகளில் தங்கியிருந்த சமூகம், தங்கள் ஆத்மீக ஈடேற்றத்துக்குக்கென ஒரு சிறு விநாயகராலயத்தை அமைத்து, அங்கு வாராவாரம் பொங்கலிட்டு வழிபாடு நடாத்தி வரலாயினர். அதற்குச் சிறு காலத்துக்கு முன்னே, ஒரு அம்மன் ஆலயத்தையும் அமைத்துக் கொண்டிருந்தனர். அப்போது 'பேசும் அம்மன்' என அவர்கள் அழைத்த அத்தேவி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலக்கிரமத்தில், 'பேச்சியம்மன்' என வழங்கப் பெறலாயினள்.

கல்லடி - உப்போடையில் வாழ்ந்த சின்னாத்தை உமையாத்தை எனும் சகோதரி யரிருவர், இவ்வாலயத்துக்கான பூமியைத் தங்கள் சகோதரன் கதிராமனிடம் ஒப்படைக்க, அவர் பின்பு அதைத் தன் மகன் கந்தப்பெருமாள் என்பவரிடம் பொறுப்புக் கொடுத்தார். கந்தப்பெருமாள் முகாமையாளராக கடமை புரிந்த காலத்தில் தான் விநாயகர் கற்சிலை வைக்கப்பட்டது. ஆலய உறுதி எழுதப்பட்டது. இவர் காலத்தில் என்பது குறிப் பிடத்தக்கதாகும். அவருடைய மகனே புகழ் பூத்த கதிர்காமத்தம்பி உடையாராவார். 1824ல் தொடங்கப்பெற்ற ஆலயத்துக்கு 1866ல் உறுதி முடிக்கப்பட்டுள்ளது. அன்றி லிருந்து மடாலய முறையில் பரிபாலிக்கப்பெற்ற ஆலயத்தில் விநாயக்கர் காப்புக்கட்டு விரதம், கந்தசஷ்டி விரதம், மார்கழித்திருவாதிரை விழா என்பன சிறப்பாக அனுஷ்டிக்கப் பெறலாயின.

1918 - 26 வரையிலான காலப்பகுதி இவ்வாலய வளர்ச்சியின் பொற்காலம் எனலாம். அப்போது ஆலய நிருவாகம் கதிர்காமத்தம்பி உடையாரின் மகன் K.O. வேலுப்பிள்ளை அவர்களின் வசமிருந்தது. இன்று நாம் காணும் கட்டிடங்கள் இக்கால கட்டத்திலேயே எழுந்தன. பிரதான கோவி லுடன் அர்த்த மண்டபம், ஸ்தம்ப மண்டபம், ராஜ கோபுரம், சண்டேசுரர் ஆலயம், யாக மண்டபம், வசந்த மண்டபம், வடபுறத்து மணித்தூண் என்பவற்றை அவர் தம் சொந்த நிதியில் நிறுவினார். நடராஜர் ஆலயத்தை திரு. T. K. S. கணபதிப்பிள்ளை அவர்களும், நவக்கிரக கோயிலை திரு. தோ. கு. சபாபதிப் பிள்ளை உடையார் அவர்களும், வயிரவர் ஆலயத்தை திரு. எஸ். சீ. செல்லத்துரை அவர்களும், தென்புறமாயுள்ள மணித்தூணை திரு. நொ. க. நல்லதம்பி அவர்களும் நிறுவி உபகரித்தனர். வருடாந்த உற்சவத்தின் பின் சுவாமி தீர்த்தமாடுவதற்கான தீர்த்தக் குளத்தை திரு. K.O. வேலுப்பிள்ளை அவர்களும், திரு. சின்னத்தம்பி அம்பிகாபதிராய் அவர்களும் 1928ல் நிறுவினார்கள். "புஷ்பகரணி" எனும் பெயரினைக் கொண்ட இத்தீர்த்தக் குளத்திலே பாரதநாட்டின் திருத்தலங்களிலிருந்து கொண்டு வரப்பட்ட புனித தீர்த்தம் பெய்யப் பெற்றது. அதன் மருங்கிலே நாகதம்பிரான் ஆலயத்தை திரு. K.O. வேலுப்பிள்ளை தமது பூமியில் அமைத்தார்.

இந்தியாவிலிருந்து, இராமகிருஷ்ண மிஷனின் புகழ்பெற்ற துறவிகளான சுவாமி யதீஸ்வரானந்தா, சுவாமி அவிஷானந்தா, சுவாமி விபுலானந்தர், சுவாமி ஆனந்தானந்தா எனும் நால்வரும் 1925ல் மட்டக்களப்புக்கு வருகை தந்த போது, எமது ஸ்ரீ சித்திவிநாயகரை யும் தரிசித்துத் திருவருள் பெற்றனர். இவர் களின் இவ்வருகை, 1925ல் சிவானந்த வித்தியா லத்தை ஆரம்பிப்பதற்கும் வழிவகுத்தன.

1926ல் கொடிஸ்தம்ப வேலை ஆரம்பிக்கப்பட்டது. ஸ்தம்பத்துக்குப் பொருத்தப்பட்டிருக்கும் செப்புக் கவசத்தைத் தயாரித்த ஆச்சாரிமாரை தமிழ்நாட்டிலிருந்து முகாமையாளர் வரவழைத்தார். எவ்வால யத்திலும் காணமுடியாத அத்தனை பொருத்தமான அளவுப்பரிமாணமும் ஓவியச் சிறப்பும் கொண்ட ஸ்தம்பம் இவ்வால யத்துக்கு இறை திருவருளினால் வாய்த்த பல சிறப்புக்களில் ஒன்றாகும். இச் சிறப்பு மிகு கொடித்தம்பத்தை திரு. K.O. வேலுப்பிள்ளை அவர்கள் அமைத்தார்கள் ஆலயத்துக்குத் தேவையான சிவவிக்கிரங்கள், பஞ்சலோக விக்கிரகங்கள் யாவும் பெறப்பட்டன. தமிழ்நாட் டிலிருந்து காலத்துக்குக்காலம் இவ்வாலயத் தைத் தரிசித்த துறவிகள், பேரறிஞர்கள், இங்குள்ள பஞ்சலோக விக்கிரகங்கள் பலவற்றின் உயர்வினையும் கவர்ச்சியையும் போற்றிப் புகழ்ந்துள்ளனர். மேலும் மகோற் சவத்துக்கு வேண்டப்படும் வாகனங்கள்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவாசிகள், என்பனவும் பெறப்பட்டன.

1928ல் முதலாவது வருடாந்த உற்சவம் செய்யப்படலாயிற்று. இரண்டாம் உலக மாகாயுத்தம் நடைபெற்றுக்கொண்டிருக்கையில், 1942ல் சம்ரோஷண மகாகும்பாபிஷேகம் செய்யப்பட்டது. 1947ல் ஊர்மக்களின் பிரதி நிதித்துவம் கொண்ட பரிபாலன சபையினரால் இடம்பெறலாயிற்று. திரு. K.O. வேலுப்பிள்ளை அவர்கள் ஆலய முகாமையாளராயிருந்து நடவடிக்கைகளை ஒரு வழிப்படுத்தி வந்தார். அவர் காலமானதன்பின், அவரது மகன் திரு. K. O. V. கதிர்காமத்தம்பி அவர்கள் முகாமை யாளராக இருந்து நடாத்தி வந்தார்.

ஆலய புனருத்தாரணம் மேற்கொள் வதற்கான தீர்மானத்தை 1975ல் மகாசபை எடுத்தது. திரு. காசுபதிப்பிள்ளை கந்தசாமி அவர்களைத் தலைவராகக் கொண்ட பரிபாலன சபையே புனருத்தாரண சபையாகவிருந்து திட்டங்களைத் தயாரித்து நெறிப்படுத்தியது

1978ல் மட்டக்களப்பில் வீசிய கொடிய சூறாவளி மக்களின் பொருளாதார வாழ்வைச் சீர்குலைத்தன. பக்கவிளைவாக, ஆலய புனருத்தாரணப் பணிகளையும் பல வருடங்களால் பின்தள்ளி விட்டது. மேலும், நாட்டிலேற்றப்பட்ட எதிர்பாராத சமூக - அரசியல் பின்னணியும் சுழிபோட்டு ஆரம்பித்த இத்திருப்பணி, 1988ல் ஜீவணோத்தாரண மகாகும்பாபிஷேகம் கண்டது.

1988ம் ஆண்டு கும்பாபிஷேகம் நடைபெற்ற பின்னர் திரு.S. சண்முகநாதன் தலைமையிலான ஆலய நிருவாக சபை பொறுப்பேற்றனர் 2001ம் ஆண்டு ஜூலை மாதம் 2ம் திகதி பாலஸ்தானம் நடைபெற்று அக்காலகட்டத்தில் ஆலயத்தின் சுற்று மண்டபம் கட்டப்பட்டதுடன் திரு.ப.கந்தசாமி மாஸ்டர் அவர்கள் இலட்சுமி கோயிலையும் டாக்டர் கனகராஜா அவர்கள் சுப்பிரமணியர் கோயிலையும் ஆலய பரிபாலன சபை சந்தான கோபாலர் கோயிலையும் அமைத்தார்கள் அத்தோடு திருதுரைராஜா போடியார் அவர்கள் புதிதாக காரியாலய அறை, முகாமையாளர் அறை, மணப்பெண் அறை, போன்றவற்றை அமைத்துக் கொடுத்தார் இக் கால கட்டத்தில் அவர்கள் பதவியை ராஜினாமாச் செய்ததுடன் முகாமையாளரே செயலாளர், பொருளாளர், செயற்குழு உறுப்பினர்களுடன் இணைந்து 2003ம் ஆண்டு ஜனவரி மாதம் 27ந் திகதி மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து முகாமை யாளராக தொண்டாற்றிய அமரர் திரு.K.O.V. கதிர்காமதம்பி அவர்கள் நோயுற்றதன் பின்னர் திரு.நமசிவாயம் ஹரிதாஸ் அவர்கள் 2007ம் ஆண்டு தொடக்கம் முகாமையாளராக தொண்டாற்றி வருகின்றார் 2003 பிற்பட்ட காலப்பகுதியில் திரு.S.தேவசிங்கன் தலை வராக சிறிது காலம் இருந்துள்ளார். தொடர்ந்து திரு.G.பாஸ்கரன் அவர்கள் சிறிது காலம் தலைவராகவும் இருந்துள்ளார்.


இவற்றில் திரு.வை.கணேசானந்தம் அவர்களின் காலப் பகுதியில் ஆலயத்திற்கான தேர் கட்டமைக்கப்பட்டது.அதனை தொடர்ந்து திரு.தி.ஸ்ரீஸ்கந்தராஜா அவர்கள் தலைவராக இருந்த காலப்பகுதியில் எமது ஆலயத்தின் துளசி மண்டபம் புதுப்பொலிவுடன் கட்டப் பட்டது. இவ் துளசி மண்டபமானது. இன்று ஆலயத்தின் வருமானம் தரும் இடத்தில் முதன்மையானவைகளில் ஒன்றாக காணப் படுகின்றது. திரு.ஸ்ரீஸ்கந்தராஜா அவர்கள் தலைவராக இருந்த காலப்பகுதியிலே 2012, 2015 மே மாதம் 23 வரையிலான காலப் பகுதியில் தான் எமது ஸ்ரீ பேச்சியம்பாளின் பொங்கல் செய்யும் இடம் மாற்றப்பட்டு புதுப் பொலிவுடன்காணப்படுகின்றது. அத்தோடு ஆலயத்திற்கு புதிதாக ஒரு தேரும் செய்யப் பட்டது.

அதனைத் தொடர்ந்து வம்மியடிப் பிள்ளையார் ஆலயம் புதிதாக புனரமைக்கப் பட்டது, மற்றும் நாகதம்பிரான் ஆலயம் புதிதாக புனரமைக்கப்பட்டது. இக்காலப்பகுதி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூறு வருடங்களுக்கு மேற்பட்ட ஐம்பொன்னாலாக்கப்பட்ட கொடித்தம்ப கலசம்





செயலாளராக திரு.சி.விஜயகுமார் மற்றும் பொருளாராக பா.சந்திரசேகரம் உபதலைவராக இரா. விக்கினேஸ் திரு.பொ. குணசீலன் ஆகியோர் மிகவும் சிறப்பாக பரிபாலன சபையினை வழிநடத்தியதன் காரணமாக பல முன்னேற்றகரமான செயற்பாடுகளை செய்து முடிக்கக்கூடியதாக அமையப் பெற்றது

அதனைத் தொடர்ந்து 2015 மே மாதம் 23 க்கு பின்னர் திரு.ச.சந்திரகுமார் தலைமையில் பரிபாலன சபையினர் எம்பெருமானின் பாலஸ்தானத்தினை தொடங்கி வைக்க இவருடன் செயலாளராக திரு.பா.சுபாகரன், பொருளாளர் K.சுகந்தன், உபதலைவராக திரு. M.வசந்தகுமார், திரு.பொ.குணசீலன் ஆகியோர் இணைந்து ஆலயத்தின் பாலஸ்த்தான பணியினை திறம்பட செய்து வந்தனர். அதனைத் தொடர்ந்து பரிபாலன சபையின் செயலாளராக புதிதாக சி. விஜயகுமார் தெரிவு செய்யப்பட்டு பரிபாலன சபையானது திறம்பட இயங்கியது. எம் பெருமானின் கும்பாபிஷேகம் மற்றும் கட்டிட நிர்மாணப் பணிகள் என்பன எம் பெருமானின் கருணையுடன் இனிதே நிறைவு பெற்றது.

200 ஆண்டுகளுக்கு மேல் பழமையான எம்பெருமான் ஸ்ரீ சித்தி விநாயக பெருமான் ஆலயமானது அன்றிலிருந்து இன்று வரை புது சக்திப் பொலிவுடன் திகழ்ந்து கொண்டிருக்கின்றது

இம்முறை கும்பாபிஷேகத்தினை முன்னிட்டு, 200 வருடங்கள் பழமையான விக்கிரகம், இக் கும்பாபிஷேகத்துடன் புதிய மூல விக்கிரகம் எம் பெருமானின் துணையுடன் கருவறையில் அமையப் பெற்றுள்ளது.

ஏற்கனவே இருந்த மூலக விக்கிரகம் ஆதி விநாயகர் எனப்படும். இவ் ஆதி விநாயகர் விக்கிரகமானது எம் பெருமானின் கருவறை மண்டபத்திற்கு முன் மண்டபத்தில் வலது பக்கத்தில் அமையப்பெற்றுள்ளது.

அத்துடன் புதிய விக்கிரகங்களின் வருகையாக பஞ்சமுக விநாயகர் மற்றும் சிவலிங்கம், பார்வதி அம்மன் ஆகிய விக்கிரகங்கள் வருகை தந்துள்ளன.

புனரமைப்பு வேலைகளாக கருவறையினைத் தவிர முன்மண்டபம், வசந்த மண்டபம் மற்றும் சிவன் ஆலயம் (வடக்கு வாசல்) வசந்த மண்டபம், கொடித்தம்ப மண்டபம் மற்றும் கொடிமரம் என்பனவும் புதிதாக புனரமைக்கப்பட்டுள்ளது.


100 வருடங்கள் பழமையான நவக்கிரக ஆலயம் இம்முறை புதிதாக புனரமைக்கப்பட்டுள்ளது. இவ் ஆலயமானது 100 வருடங்களுக்கு முன்னால் அமரர். தோ.கு. சபாபதிப்பிள்ளை உடையார் அவர்களால் புனரமைத்து கொடுக்கப்பட்டிருந்தது. இதனை இவ்வருடம் 2020ல் நடைபெற்ற கும்பாபிஷேகத்துடன் உடைக்கப்பட்டு அமரர் சபாபதிப்பிள்ளை உடையார் குடும்பம் சார்பாக புனரமைக்கப்பட்டுள்ளது. அத்தோடு நவக்கிரக விக்கிரகங்கள் அமையப்பெற்றுள்ள பீடம் மாற்றம் ஏதும் செய்யப்படவில்லை என்பதுடன் இவ் ஆலயத்திற்கு முன்னர் பயன்படுத்திய கருங்கல் மற்றும் செங்கற்கள் மீண்டும் பயன்படுத்தப்பட்டுள்ளமை விசேட அம்சம் ஆகும்.

அதே போன்று மகா மண்டபம், மற்றும் அர்த்த மண்டபங்களின் அத்திவாரம் அதன் அளவுகள் எந்தவிதமான அளவுப்பிரமாணங்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலையத்தில் காணப்படும் தொல் பொருட்கள்





களிலும் மாற்றம் செய்யப்படவில்லை மற்றும் இங்கு பயன்படுத்தப்பட்ட கருங்கல் தூண்கள் அவ்வாறே பயன்படுத்தப்பட்டுள்ளன. அத்துடன் அலுவலக அறைகள் மற்றும் காண்டாமணியில் வலது பக்க மணி புதிதாக இம்முறை செய்யப்பட்டுள்ளது. அத்துடன் நிலத்திற்கான கிறினேற் கல் என்பனவும் பதிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

அத்துடன் மகாமண்டபத்திற்கு முன்பாக சிவன், பார்வதி கோயில்கள் புதிதாக அமைக்கப்பட்டுள்ளன. சிவன் கோயிலை திரு.S. சந்திரகுமார் அவர்களும் பார்வதி கோயிலை திரு.M. அரசரெட்ணம் குடும்பத்தினர் அமைத்துக் கொடுத்துள்ளனர். மற்றும் விநாயகப் பெருமானின் 32 அவதாரங் களும் இக் கும்பாபிஷேகத்துடன் அமைக்கப்பட்டுள்ளது. அத்தோடு வசந்த மண்டப யாழி மற்றும் சிவன், பார்வதி, முருகன், விநாயகர் பெருமான் ஆகியோரின் விக்கிரகங்களும் புதிதாக வந்தது என்பது விஷேட அம்சமாகும்.

அதேபோன்று பக்த அடியார்கள் நிதிப்பங்களிப்பினாலும் எமது ஆலயத்தின் புனரமைப்பு பணி மிகவும் காத்திரமான முறையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.


நூற்றாண்டுகளுக்கு மேலாக நடப்பட்ட கொடித்தம்ப மரம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து ஆலய அமைப்பும் கிரியை முறையும்




**இளையதம்பி தேவதாஸ்,**
இல 29, மலைமகள் வீதி,
கல்லடி - உப்போடை, மட்டக்களப்பு.



**ஆ**லயத்திற்கு கோயில், தேவ திருகம், தேவாரம், தேவஸ்தானம், தேவகுலம், தேவபவனம், தேவாலயம், பிரசாகம், நகர் எனப் பல்வேறுபட்ட பெயர்கள் உண்டு. ஆ + லயம் = ஆலயம் (ஆன்மாக்கள் வயப்படுமிடம்), கோ + இல் = கோயில் கோயில் (கோ என்பது அரசன், தலைவன், நாயகன், பதி, இறைவன்) அதாவது இறைவன் வாழும் வீடு என்றும் பொருள்படும். இறைவன் இருக்கும் தெய்வத்தன்மை பொருந்திய உயர்ந்த இடமே கோயிலாகும். வழிபாடு என்னும் போது இறைவன் வழியே ஆன்மாவை வழிப்படுத்தல்; இதற்கு ஏற்ற இடம் ஆலயமாகும். எவ்வாறெனில், பசுவின் உடலெங்கும் பாலின் சத்தானது இரத்தமாக ஓடிக் கொண்டிருப்பினும் அதன் மடியிலி ருந்தே பால் சுரப்பது போல, இறைவன் திருவருள் சுரக்குமிடம் ஆலயமாகும். "திருக்கோயில் இல்லாத் திருவில் ஊரும்", என்று அப்பரின் திருவாக்கும்; "கோயில் இல்லாத ஊர் அடவி காடே", "ஆலயம் தொழுவது சாலவும் நன்று", என்ற பழமொழிகளும் கோயிலின் முக்கியத்துவத் தினைத் தெளிவாக எடுத்துக்காட்டி நிற்கின்றன. சிவஞான போதத்தின் இறுதிச் சூத்திரமும் 'ஆலயத்தின் முக்கியத்துவத்தினை உறுதிப் படுத்துகின்றது.

இத்தகைய ஆலயத்தின் அமைப்பு எமது உடலமைப்போடு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தொடர்புபட்டு தெய்வீக உணர்வைக் காட்டி நிற்கின்றது. தலை, முகம், மார்பு, வயிறு, தொடை, முழங்கால் ஆகிய ஆறு உறுப்புக் களும் மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாதகம், விசுத்தி, ஆக்ஞை ஆகிய ஆறு ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டே முறையே கர்ப்பக்கிருகம், அர்த்தமண்டபம், சபாமண்டபம், ஸ்தான மண்டபம், அலங்கார மண்டபம், சபா மண்டபம் என்ற ஆறு மண்டபங்கள் அமைந்துள்ளன. கோயிலைச் சுற்றி மதிலும் ஒரு புறத்தில் பெரிய வாயிலும் அமைந்திருக்கும். இவ்வாயிலில் கோபுரம் அமைந்திருக்கும். "கோபுர தரிசனம் பாவ விமோசனம்" என்பது ஆன்றோர் வாக்காகும். கோயிலில் மிக உயர்ந்த அமைப்புடன் விளங் குவது ராசகோபுரமாகும். இதற்கு தூலலிங்கம், அரசகோபுரம் எனவும் பெயர்களுண்டு. தூரத்தில் வரும் பொழுதே கோபுரம் தெரிவத னால் யாவருக்கும் தெய்வீக உணர்வு ஏற்படு கின்றது. இதில் பலவகை உருவங்கள், இறைவனின் திரு விளையாடல்கள், வீரதீரச்செயல்களைக் காட்டும் வகையில் அமைந்திருக்கும். கோபுரத்தின் சிகரத்தை எவ்வளவு தூரத்தில் இருந்து பார்க்கத் தெரியுமோ அவ்வளவு தூர இடமும் பூலோகக் கைலாசம் என்று அழைக் கப்படும். கோபுரத்தின் அடுக்குகள் (வாயில்கள்) ஒன்றன்மேல் ஒன்றாக அமைந்திருக்கும். மூன்று வாயில்கள் அமைவது கனவு, நனவு, சுழுத்தி என்ற மூன்று அவஸ்தைகளையும், ஐந்து வாயில்களாயின் (மெய், வாய், கண், மூக்கு, செவி) எனும் ஐம்பொறிகளுடன் மனம், புத்தி இரண்டையும் குறிக்கும். ஒன்பது வாயில்களாயின் ஐம்பொறிகளுடன், மனம், புத்தி, சித்தம், அகங்காரம் இவற்றைக் குறிக்கும். எத்தனை வாயில்கள் இருந்தாலும் நில மட்டத்திலுள்ள வாயிலின் ஊடாகவே உள்ளே செல்ல முடியும்.

கோபுரத்தைக் கடந்து உள்ளே சென்றதும் கொடி மரம் தென்படும். இது சூக்குமலிங்கம் எனப்படும். கொடி மரம் பதியையும், அதில் சுற்றியுள்ள கொடிச் சீலைபசுவையும், தர்ப்பக்கயிறு பாசத்தையும் குறிக்கும். இதன்மூலம் முத்தி நிலையில் ஆன்மா சிவத்துடன் இரண்டறக் கலந்து அத்து விதமாய் நிற்கும் என்பதனை புலனாக்கு கின்றது. கொடி மரத்தையடுத்து பலிபீடம் காணப்படும். இது பத்திரலிங்கத்தை உணர்த்துகின்றது. இதனை வழிபடுவதனால் எமது மனத்திலுள்ள காமம், வெகுளி, மயக்கம் என்பன அழிக்கப்படுகின்றன. அடுத்து நந்தி எப்பொழுதும் இறைவனை நோக்கிய வண்ண மிருப்பது. அதாவது பலிபீடத்திற்கு முன்பாக மூலஸ்தானத்தை நோக்கியவாறு எந்தெந்த மூலவர் உண்டோ அந்த அந்த மூலவனின் வாகனங்கள் காணப்படும் சிவனுக்கு நந்தி (இடபம்), விநாயகருக்கு மூஷிகம், உமைக்கு சிங்கம், முருகனுக்கு மயில், வைரவருக்கு நாய் என்றபடி அமையும். இது கடவுளின் திருவடி நிழலை அடைய விரும்புபவர்களின் மனமெப் பொழுதும் கடவுள் நாட்டத்திலே இருக்க வேண்டுமென்பதையிது உணர்த்துகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயிலின் கற்பக்கிருகம் மனிதனது தலைபோன்று அமைந்துள்ளது. ஆன்மாவின் மனமே கற்பக்கிருகமென்றும் கூறப்படுகின்றது. கர்ப்பக்கிருகத்தையும் மகா மண்டபத்தையும் இணைக்கும் வகையில் மனிதனது கழுத்துப் போன்று அமைந்திருப்பது அர்த்த மண்டபமாகும். இது மனிதனது இதயமாகும். இதன் இடது பக்கத்தில் தெற்கு நோக்கிய வண்ணம் தேவியின் ஆலயம் அமைந்திருக்கும். பிரதான கோயிலின் வலப்புறத்தே விநாயகர் ஆலயமும் இடப்புறத்தே கந்தன் ஆலயமும் இவற்றைவிட் விஸ்ணு, நடராசர், சந்திரசேகரர், வைரவர், நவக்கிரகங்கள் ஆகியவற்றிற்கும் தனித்தனிக் கோயில்கள் உரிய இடங்களில் அமைக்கப்பட்டிருக்கும். தெற்குப் புறத்தில் களஞ்சிய அறை, வாகன சாலையும்; வடக்குப் புறத்தில் நடராசர் ஆலயம், பள்ளியறையும், வடகிழக்கேயாக சாலையும் அமைக்கப்படும். கோபுரத்தின் உட்புறத்தே வைரவர் ஆலயமும் காணப்படும்.

இந்து ஆலயங்களில் செய்யப்படும் கிரியைகள் நித்தியம், நைமித்தியம், காமிகம் என மூன்று வகைப்படும். இத்தகைய ஆலய பூசைகள் பரார்த்த பூசைகளாகும். தினந்தோறும் நடைபெறும் உசங்காலம், காலசந்தி, உச்சிக்காலம், சாயரட்ஷை, இரண்டாங்காலம், அர்த்த சாமம் ஆகிய ஆறு காலப் பூசைகள், மூன்று காலப்பூசைகள், ஒருகாலப்பூசை நித்திய பூசைகளாகும். வாரமொருமுறை, மாதமொருமுறை, வருடமொருமுறை, பலவருடங்களுக்கொருமுறை நடைபெறும் பூசைகள் நைமித்தியம் எனப்படும். பிரதோஷம், திருத்திகை, சதுர்த்தி, சஷ்ட்டி, கந்தசஷ்ட்டி, தைசங்கராந்தி, ஆனி உத்தரம், ஆடிப்பூரம், ஆவணிமூலம், நவராத்திரி, கார்த்திகை, சோமவாரம், தைப்பூசம், மாசிமகம், பங்குனி உத்தரம், விசாகம், மகாமகம், கும்பாபிடகம் போன்ற விசேட தினங்களில் செய்யப்படும். கிரியைகள் நைமித்திய கிரியையின் பாற்படும். நித்திய நைமித்திய கிரியைகளும் பலன் கருதியச் செய்யப்படும் போது அவை காமியக் கிரியைகள் ஆகின்றன.

பூசைகளின் போது முக்கியமாக பதினாறு உபசாரங்கள் ஆண்டவனுக்குச் செய்யப்படுகின்றன. காலையில் நடைபெறும் முதற்பூசை அல்லது காலசந்தியாகும். ஆலயத்தை திறந்து முதல் நாள் இரவு பள்ளியறையில் எழுந்தருளச் செய்யப்பட்ட சுவாமியையும் அம்பாளையும் அங்கிருந்து துயில் எழுப்பிப் பூசை நடத்தி மங்கள வாத்தியங்களோடு கொணர்வதே முதற்பூசையாகும். பின் மூலஸ்தானத்திலே எழுந்தருளியுள்ள மூர்த்திக்கு அபிடேகம், தீபாராதனை, அருச்சனையாகியன நிகழும். அடுத்து நடைபெறும் பூசை காலைப் பூசையாகும். அடுத்து மதியப்பூசை, மாலைப் பூசை, அர்த்தசாமப் பூசை, பள்ளியறைக்குச் சுவாமியை எழுந்தருழுவித்தல் ஆகியனவும் நடைபெறும். ஆறுசாமப் பூசைகளும் நடைபெற்றான பின்னர், இறுதியாக நடைபெறுவதாகிய அர்த்த சாமப்பூசையின் முடிவிலே சுவாமி தமது சக்தியுடன் பள்ளியறைக்கு எழுந்தருளிச் செல்வதாகிய கிரியை இடம்பெறும். அதனோடு ஒரு நாட்பூசை முடிவுபெறுகிறது. ஈற்றில் வைரவருக்குப் பூசை செய்து பாயசான்னம் அளித்து வழிபட்ட பின்னர் தாள் சாற்றப்படும். காலையிலும் வைரவருக்குப் பூசை நடத்தி அவரிடம் முத்திரைத் தாண்டவம் பெற்றே மீண்டும் பூசைகளும் கிரியைகளும் ஆரம்பிக்கப்படுகின்றது.

ஆலய கிரியைகள் நடத்துவதன் நோக்கம் எல்லா ஆன்மாக்களும் நன்மை பெறும் பொருட்டே. பூசையிறுதியில் "எல்லா மக்களும் சுகம் பெறுக", "யாவரும் மங்களமாய் வாழ்க" என சிவாச்சாரியார் ஆசீர்வாதம் செய்வார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் பெருமை





**"மதம்" என்பது** ஆறறிவு கொண்ட மனிதனுக்கு, அவனது ஆறாவது அறிவின் மகத்துவத்தை உணர்த்தி, அவனைத் தெளிவான தீர்க்கமான சிந்தனைக்கு உட்படுத்தி அழிவில்லா ஆனந்த நல்வாழ்விற்கு இட்டுச் செல்லும் நல்வழிப்பாதையே ஆகும்.

**விநாயகர் சதுர்த்தி**

ஆவணி மாதம் சுக்ல பட்சத்தில் வரும் சதுர்த்தி திதியில் விநாயகப் பெருமானுக்கு விழா எடுத்து வணங்குகிறோம். முழுமுதற் கடவுளாம் பிள்ளையாரின் பண்டிகை தினம் சதுர்த்தி திதியன்று கொண்டா டப்படுகிறது. ஆவணி மாத பௌர்ணமியிலிருந்து நான்காம் நாள் சதுர்த்தி திதி துங்கக் கரிமுகத்துத் தூமணி, கஜமுகன், யானை முகத்தோன், வேழமுகத்தோன் என்றெல்லாம் துதிக்கப் பெறும் கணபதி, ஓம்காரஸ்வரூபி ஆவார். எங்கும் வியாபித்து நிற்கும் பரமாத்மாவான சொரூபம் உள்ளவர். இவருக்கு மூத்தவரான கடவுளரே இல்லை என்பதால் இவர் விநாயகர் என அழைக்கப்பட்டார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்வதி பரமேஸ்வரரின் மூத்த குமாரனாக அவதரித்து தேவர்களை கஜமுகன் என்ற அரக்கனின் கொடுமையிலிருந்து காத்ததால் கஜானன கணபதி என்று சிறப்பாக வணங்கப்படுகின்றார். தேவர்களின் துயர் துடைத்த கணபதிக்கு பிரதிபலனாக தேவர்கள் சித்தி, புத்தி என்ற தேவகன்னியரைத் திருமணம் செய்து கொடுத்து வணங்கினார்கள். நினைத்த காரியம் கைகூடுவதே சித்தி, புத்தி என்றால் அறிவு. பிள்ளையாரை வழிபடுவோருக்கு நினைத்த காரியம் கைகூடும். அறிவு எனும் ஞானமும் பெருகும்.

## விநாயகர் சதுர்த்தி விரதம்



ஆவணி மாதம் வளர் பிறை சதுர்த்தியில் விரதம் மேற்கொள்ள வேண்டும். ஆவணி மாதம் வளர் பிறை சதுர்த்தியில் தொடங்கி புரட்டாதி மாதத்து வளர்பிறை சதுர்த்தி வரையில் செய்தல் வேண்டும் என்று விநாயக புராணம் தெரிவிக்கின்றது.

அதிகாலை எழுந்து நீராடி விட்டு கோயில் அல்லது வீட்டில் பூஜை செய்தல் வேண்டும். பகலில் முழுவதும் உண்ணாமல் இருந்து மாலையில் நீராடி வழிபாடு செய்த பின்னர் பாலும் பழமும் அருந்த வேண்டும். விரதம் முடியும் வரை முப்பது நாட்களும் தொடர்ந்து செய்து முடித்த பின் இறுதியில் மற்றவர்களுடன் ஒன்றாக அமர்ந்து உண்ண வேண்டும். மேற்கூறியபடி கடும் விரதம் மேற்கொள்ள இயலாதவர்கள் விரதகாலத்தில் சில நாட்கள் விரதம் மேற்கொண்ட பின், மற்ற நாட்களில் உப்பு இல்லாத பொங்கல், பால், பழம் ஆகியவற்றை உட்கொண்டு வருவது சிறப்பு. முப்பது நாட்களும் விரதம் அனுஷ்டிக்க இயலாதவர்கள் விநாயகர் சதுர்த்தி நாளிலாவது அவசியம் விரதம் மேற்கொள்ள வேண்டும்.

இந்த விரதத்தை கடைப்பிடித்துத்தான் எவ்வித இடர்பாடுகளும் இல்லாது முருகப் பெருமான் சூரபத்மனை போரில் வென்றார். உமாதேவியும் இந்த விரதத்தை மேற்கொண்டார். நளச்சக்கரவர்த்தி சதுர்த்தி விரதம் மேற்கொண்டு சிவஞானப்பேறு பெற்றான். மன்மதனும், ஆதிசேஷனும் இந்த விரதத்தை மேற்கொண்டு மேன்மையடைந்தார்கள்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தோப்புக் கரணம் ஏன்?



விநாயகரின் ஒவ்வொரு சின்ன விஷயத்தையும் நன்றாக கவனித்தால் அதில் நிறைய தத்துவங்கள் அடங்கியிருக்கும்.

கணபதியைக் காட்டிலும் சரீரத்தில் பருமனான கடவுள் வேறு இல்லை. சிரசு யானையின் தலை, பெரிய வயிறு, பெரிய உடம்பு, அவருக்கு 'ஸ்தூலகாயர்' என்கிற பெயரும் உண்டு. மலைபோல் இருக்கிறார். ஆனால் அவர் சின்னக்குழந்தைக்குச் சரி, குழந்தைக்கு எது அழகு? குழந்தை என்றால் அந்த பருவத்தில் நிறைய சாப்பிட வேண்டும். உடம்பு கொஞ்சமும் இளைக்கக் கூடாது. புஷ்டியாக இருக்க வேண்டும் என்பதற்காக இந்தக் குழந்தை சாமி காட்டுகிறார்.

விநாயகப் பெருமானுக்கு எதிரே நின்று கொண்டு எதற்காக தோப்புக்கரணம் போடுகிறோம்? இதை மகா விஷ்ணுதான் சொல்லிக்கொடுத்தார் என்று சொல்லுவதுண்டு. ஒரு சமயம் மகாவிஷ்ணுவின் சக்கரத்தை அவரது மருமகனான பிள்ளையார் விளையாட்டாகப் பிடுங்கி, தன் வாயில் போட்டுக் கொண்டு விட்டாராம். விநாயகரிடமிருந்து எப்படி சக்கரத்தை வாங்குவது? அவரைச் சிரிக்க வைத்து சந்தோசப்படுத்தினால் அவர் வாயிலிருந்து சக்கரம் கீழே விழுந்து விடும் எடுத்துக் கொள்ளலாம் என்று தோன்றியதாம். மகா விஷ்ணுவுக்கு உடனே தம் நான்கு கரங்களாலும் தன்னுடைய காதைப் பிடித்துக்கொண்டு ஆடினாராம். மாமன் ஆடுவதைக்கண்டு மருமகன் விநாயகர் விழுந்து விழுந்து சிரித்தார். அவர் சிரித்ததால் வாயிலிருந்து சக்கரம் கீழே விழ மகா விஷ்ணு எடுத்துக் கொண்டார் **'தோர்பி'** என்றால் கைகளால் 'கர்ணம்' என்றால் காது. தோர்பிகர்ணம் என்றால் கைகளால் காதைப்பிடித்துக் கொள்வது இந்த தோர்பி கர்ணம் தான் தோப்புக்கரணம் என்று மாறியது.

சாமஸ்ரீ தேசமானி – சாண்டோ
**இ. இராஜரெட்ணம்**
நிருவாகர், 03ம் குறிச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எமது ஆலயத்தின்

## அமைப்பும் ஆகம தத்துவங்களும்



எமது கல்லடி உப்போடை நொச்சுமுனை ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயமானது 1824ம் ஆண்டு உருவாக்கப்பட்ட மிகப் பழைமை வாய்ந்த ஆலயமாகும். சின்னாத்தை, உமையாத்தை சகோதரிகள் வழங்கிய நிலத்தில் சின்னவர் என்னும் அவரின் சகோதரர் வில்வமரத்தின் கீழ் அமைத்த ஆலயமானது அவரின் மகன் கதிர்காமர், அவரின் மகன் கந்தப்பெருமாள், அவரின்மகன் கதிர்காமத்தம்பி உடையார், அவரின் பின் K.O.வேலுப்பிள்ளை ஆகியோர்கள் முகாமையாளர்களாக இருந்து உருவாக்கப்பட்ட ஆலயமாகும். இவர்கள் இவ் ஆலயத்தை ஆகம விதிப்படியே அமைத்துள்ளார்கள். முறையான அளவுப் பிரமாணங்களுடன் ஆகமங்களில் விதிக்கப்பட்ட மண்டபங்களுடன் கட்டப்பட்டு இன்று இலங்கையில் காணப்படும் பிரபல்யமான விநாயகர் ஆலயங்களுள் ஒன்றாக இவ் ஆலயம் காணப்படுகின்றது.

'அண்டத்தில் உள்ளது பிண்டத்தில் உண்டு' என்பார்கள். அண்டம் என்றால் பிரபஞ்சம், பிண்டம் என்றால் உடல். அதாவது அண்டங்கள் யாவற்றிலும் வியாபித்திருக்கும் இறைவன் எமது உடலுள் இருக்கின்றான் என்பதைக் குறிக்கிறது. இதனைத்தான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருஞானசம்பந்தரும் 'காயமே கோயிலாக' என்று கூறி உள்ளார். ஆலயமானது மனித உடலின் அமைப்பிலேயே அமைக்கப்படல் வேண்டும் என ஆகமங்கள் கூறுகின்றது. ஒரு மனிதன் நீட்டி நிமிர்ந்து எழுந்திருக்கும் தோற்றத்திலேதான் ஆலயம் அமைக்கப் படுகின்றது. அவ்வாறுதான் எமது விநாயகர் ஆலயமும் அமைக்கப்பட்டுள்ளது என்றால் மிகையாகாது. மூலஸ்தானம் அதாவது கருவறை சிரசினைக் குறிக்கும், அதற்கு அடுத்ததாக அமைந்துள்ள அர்த்த மண்டபம் கழுத்தினைக் குறிக்கும் அதனை அடுத்து அமைந்துள்ள மகாமண்டபம் மார்பினைக் குறிக்கும் அதனை அடுத்து அமைந்துள்ள ஸ்நபன மண்டபம் வயிற்றைக் குறிக்கும். அதனை அடுத்து அமைக்கப்பட்டுள்ள தரிசன மண்டபம் அல்லது தம்ப மண்டபம் கால்களையும் ராஜகோபுரம் பாதங்களையும் குறிக்கும். மனிதன் அப்படியே இருந்தபடி முதுகை நிமிர்த்தி உட்கார்ந்தால் இருக்கும் முள்ளந்தண்டு போல் கொடித்தம்பம் காணப் படுகின்றது. கொடித்தம்பத்தின் அடியில் இருக்கும் சிறிய விநாயகர் மூலாதார கணபதி என்றும் அழைக்கப்படுகின்றார். ஆலயத்தில் உள்ள தூண்கள் நரம்புகளாகவும், கட்டப்பட்ட கற்கள் எலும்புகளாகவும், பலகணிகள் காதுகளாகவும், தட்சணாமூர்த்தி வலக்காதா கவும், துர்க்கை (அம்பிகை) இடக்காதாகவும் கருவறையின் முன்னுள்ள இருநிலைத் தூண்களில் மேலுள்ளகல் மூக்காகவும், கருவறையின் முன்னுள்ள இரு நிலைத் தூண்கள் கண்களாகவும், கருவறையின் வாசல் வாயாகவும், உள் பிரகாரங்கள் தோள்களாகவும், வெளிப்பிரகாரங்கள் கைகளாகவும் ஆகமம் சித்தரித்துக் காட்டுகின்றது.

**ராஜகோபுரம்**

எமது ஆலயம் ஆகமமுறைப்படி அமைக்கப்பட்ட ஆலயமாகக் காணப்படு



கின்றது. அதில் நாம் முதலில் ராஜகோபுரத்தை அவதானிப்போம் "கோபுர தரிசனம் கோடி புண்ணியம்" என்பார்கள் 'தூரஸ்ய சிகரே தருஷ்ட்வா யாவத் கைலாச பூதலம்' என்று சுப்பிரபேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது கோபுரத்தின் சிகரத்தை எவ்வளவு தூரத்தில் இருந்து பார்க்கத் தெரியுமோ அவ்வளவு தூர இடமும் "பூலோக கைலாசம்" என்று அழைக்கப்படும். கோபுரத்தை "தூல லிங்கம்" எனவும் அழைப்பார்கள். மூலமூர்த்தி யின் வெளிப்படையான குறியீடாக தூலலிங்கம் காணப்படுகின்றது. வெகுதூரத்தில் உள்ளவர் களுக்கு கூட ஆலயத்தின் இருப்பிடத்திற்கு வழிகாட்டுவதாகவும், காணுந்தோறும் இறையுணர்வை ஏற்படுத்தும் வகையிலும் உயரமாக அமைக்கப்பட்டுள்ள எமது ஆலயத்தின் ராஜகோபுரம் ஐந்து அடுக்குகளை கொண்டதாக அமைந்துள்ளது. பிரபஞ்ச இயக் கத்தை இது விளக்குகிறது. அடுக்கடுக்காய் அமைந்த தளங்கள் பல்வேறுப்பட்ட உலகங் களையும், உலக வாழ்க்கையின் பலவித அநுபவங்களையும் குறிப்பன. இறைவனின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலவிதமான திருவிளையாடல்கள் மற்றும் சாதாரண உலகியல் நடைமுறைகள் சிற்பங்களால் கோபுரத்தில் குறிக்கப்படும். கீழே அகன்றிருக்கும் கோபுரம் மேலே ஒடுங்கிச் சென்று கலசத்திலே நிறைவுறும்.


மனஒருமைப்பாடும், பரம்பொருள் ஒன்றையே பற்றிநிற்கும் மனத்திண்மையும் மேலான இறை சிந்தையில் ஆழ்ந்து நிற்றலும் ஆன்ம ஈடேற்றத்திற்கு அவசியம் என்பதனைக் கோபுரம் விளக்குகின்றது.

**காண்டாமணி பொருந்திய மணித்தூண்கள்**



ஆலயத்தில் காண்டாமணிகள் இரண்டு இரண்டு மணித்தூண்களில் கட்டப்பட்டுள்ளன. மணித்தூண்கள் ஆலயத்தின் முன்வாயிலின் வடபுறம், தென்புறம் இரண்டிலும் இருத்தல் அவசியம். எமது ஆலயத்திலும் அவ்வாறே இரண்டு மணித்தூண்கள் உள்ளன. இம் மணி அடிக்கப்படும் போது தொலைவில் இருப்பவர்களுக்கும் இறை உணர்வு தூண்டப்படல் வேண்டும் என்பதற்காகவே உயர்ந்த தூண்களில் பொருத்தப்பட்டிருக்கும் "ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே" என்பதற்கு இறைவன் ஓசை, ஒலி வடிவிலும் உள்ளான் என்பதையே கூறிநிற்கிறது. ஆலயத்தில் பூசை நடைபெறும் வேளையில் காண்டாமணியை அடிக்கச் செய்வது சிறந்த சரியைத்தொண்டு ஆகும். இதனால் கிடைக்கும் புண்ணியமும் அதிகமாகும். மணி ஓசைக்கு தேவர்களை அழைக்கும் சக்தியும் தீயசக்திகளை அகற்றும் சக்தியும் அதிகம் என சாத்திரங்கள் கூறுகின்றன.

**கொடிமரம்**



எமது ஆலயத்தில் உள்ள கொடிமரம் ஆலய தர்மகர்த்தா K.O.வேலுப்பிள்ளை அவர்கள் இந்தியா கும்பகோணத்தில் இருந்து ஆச்சாரிமாரை வரவழைத்து திரு.சாமிநாதன் ஆச்சாரி அவர்கள் ஐம்பொன்னால் செய்தார். இது எமது ஆலயத்திற்குரிய தனிச்சிறப்பாகும். இலங்கையில் உள்ள எந்தவொரு ஆலயத்திலும் இல்லாத உயரமான அழகான ஆகமவிதிப்படி அமைக்கப்பட்ட ஐம்பொன்னாலான கொடித்தம்பம் ஆகும். ஆலய தாமகர்த்தாவின் இச் செயற்பாட்டின் நன்றிக்கடனாகவே காலாதிகாலமாக கொடி யேற்றத் திருவிழா ஆலயதர்மகர்த்தா K.O. வேலுப்பிள்ளை


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அவர்களின் குடும்பத்தினரால் நடத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும். கொடி மரத்திற்கான மரம் தற்போது புதிதாக நடப்பட் டுள்ளது. அந்த கொடி மரத்தையும் தர்மஹர்த்தா குடும்பத்தைச் சேர்ந்த அரசாங்க அதிபர் K.O.V.K விமலநாதன் அவர்கள் வழங்கினார்.

### நந்தி பலிபீடம்



ஸ்தம்ப மண்டபத்திலே பத்திரலிங்கம் எனப்படும் பலிபீடமும் அதனை அடுத்து நந்தியும் அமைந்து இருக்கின்றது. நந்தி பலிபீடத்தைப் பாராது மூலமூர்த்தியை நோக்கியவாறு அமைந்திருக்கின்றது. பலிபீடம் ஆன்மாக்களின் ஆணவ மலங்களை அழித்து பக்குவப்படுத்திப் புனிதப்படுத்துகிறது. பத்திரப் படுத்துவதனால்தான் அதற்கு பத்திரலிங்கம் என்று பெயருண்டானது. பலிபீடம் ஆலய பிரதான மூர்த்தியின் பாதங்களைத் தாங்கி யதால் தாமரை வடிவில் இருக்கும். எம்மிடம் உள்ள தீய குணங்களை ஆலயத்தில் களைந்த பின்பு அதில் பலியிட வேண்டும். அதன் பின்னர் மூலமூர்த்தியை தரிசிக்க நந்தியிடம் அனுமதி பெற வேண்டும். பலிபீடம் பாசத்தை உணர்த்தி நிற்கின்றது. நந்தியாக ஒவ்வொரு ஆலயத்தில் இருக்கும் மூலமூர்த்தியின் வாகனமே அமைக்கப்படும். அந்த ஆகம விதிப்படி எமது ஆலயத்தில் நந்திதேவராக விநாயகருக்கு உரிய வாகனமாக மூஷிகம் அமைக்கப்பட்டுள்ளது. 'நந்தி' என்றால் எப்போதும் ஆனந்த நிலையில் இருப்பவர் என்று பொருள். நந்தியின் திருவுருவம் சமம், விசாரம், ஸந்தோஷம், ஸாதுஸங்கம் ஆகிய நான்கு ஆத்ம குணங்களை உணர்த்தும். நந்தியை சைவசித்தாந்திகள் முப்பொருள்களில் பசு என விளக்குவார்கள். ஈசனையும் நந்தி தேவரையும் பிரதோஷகாலத்தில் தரிசித்து துதிப்பது ஆயிரம் அஸ்வமேதயாகம் செய்த பலனை அளிக்கின்றது. ஆலயத்தில் பூசை நடைபெறும் வேளையில் ஸ்நபமண்டபத் திற்கும் நந்திக்கும் நடுவிலே குறுக்காகச் செல்லக்கூடாது. அவ்வாறு செல்வது ஆலயத் தில் செய்யப்படும் குற்றங்களுள் ஒன்றாகும்.

### தெற்குவாசலும் நடராஜரும்




நடராஜ வழிபாட்டிற்குரிய வாசல் தெற்குவாசல் ஆகும். அதனால்தான் நடராஜருக்கு 'தென்முகப்பெருமான்' என்றும் 'தெட்சணா மூர்த்தி' என்றும் பெயர்கள் உருவாகின. மகாமண்டபத்தின் உள்ளே ஐம்பொன்னால் ஆன நடராஜ விக்கிரகம் உள்ளது. எமது ஆலயத்தைத் தரிசித்த வசந்தா வைத்தியநாதன் அம்மையார் அவர்கள் எந்தவொரு ஆலயத்திலும் காணாத நடராஜர் சிலையைத் தான் கண்டதாக கூறினார். "தத்ரூபமாக இருக்கிறது என்றும் பேசுகிறது" என்றும் கூறினார். இதனையும் கூட எமது ஆலய தர்மகர்த்தா இந்தியாவில் இருந்து


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கொண்டு வந்தார். தெற்குவாசலில் நடைபெறும் பிரதான உற்சவமாக எமது ஆலயத்தில் திருவெம்பாவை காணப்படுகின்றது. தெற்கு வாசல் திறக்கப்பட்டு திருவெம்பாவை உற்சவம் மிகச் சிறப்பாக எமது ஆலயத்தில் நடை பெறுவது வழமை ஆகும்.

**நவக்கிரகம்**



எமது ஆலயத்தில் ஆகமவிதிப்படி கொடித்தம்பத்திற்கு அருகில் நவக்கிரக கோயில் அமைந்துள்ளது. இக்கோயிலை ஆரம்பத்தில், தோ.கு. சபாபதிப்பிள்ளை உடையார் அவர்கள் கட்டிக் கொடுத்தார்கள். நவக்கிரக கோயிலில் மத்தியில் கிழக்கு நோக்கிச் சூரியனும் தென்கிழக்கில் மேற்கு நோக்கி சந்திரனும் தெற்கிலே தெற்கு நோக்கி செவ்வாயும் வடகிழக்கில் கிழக்கு நோக்கி புதனும், வடக்கிலே வடக்கு நோக்கி குருவும், கிழக்கிலே கிழக்கு நோக்கிச் சுக்கிரனும் மேற்கிலே மேற்கு நோக்கிச் சனீஸ்வரனும் தென்மேற்கில் தெற்கு நோக்கி ராகுவும் வடமேற்கில் தெற்கு நோக்கி கேதுவும் காட்சி அளிப்பார்கள். இது ஆகம விதிமுறை அவ்வாறே எமது ஆலயத்தில் அமைக்கப்பட்டு ஒவ்வொரு கிரகத்திற்கும் ஆன நவக்கிரக தோத்திரம் கூட எழுத்துருவில் பதிக்கப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. தற்போது இக்கோயில் இடிக்கப்பட்டு தோ.கு.சபாபதிப் பிள்ளை உடையாரின் சந்ததியினரால் புதிதாகக் கட்டப்பட்டது.

**ஸ்தூபி**



மூலஸ்தானத்தின் மேல் பண்டிகை அல்லது ஸ்தூபி எனப்படும் பகுதி உண்டு. ஸ்தூபி இல்லாத கோயில்கள் மடாலயங்கள் என்று கூறப்படும். ஸ்தூபியின் உச்சியில் கலசம் பொருத்தப்பட்டுக் காணப்படும். கலசத்தினுள் நவதானியம் இடப்பட்டு வைக்கப்படும். குறிப் பாக தினையை அதனுள் நிறைத்து வைப்பது வழக்கம். ஊழிக்காலம் போல் ஒரு காலம் வந்து பஞ்சம் ஏற்பட்டால் உணவு இல்லாத நிலை தோன்றினால் அக்கலசத்தில் இருக்கும் தினையை எடுத்து கஞ்சி காய்ச்சி பஞ்சம் போக்கியதாக வரலாறு உண்டு. ஸ்தூபியில் விக்கிரகங்கள் எனப்படும் இறைவன் திரு வுருவங்கள் சிற்பங்களாக செதுக்கப்பட்டி ருக்கும். அத்தோடு அவை இந்து மதத்தின் பக்திநெறியோடு கலை கலாசார பண்பாட்டு பாரம்பரியங்களையும் எடுத்துக் காட்டுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### லக்ஷ்மி கோயில் :-




மூலமூர்த்திக்கு தென்மேற்கில் தேவிக்குரிய கோயில் அமைக்கப்பட வேண்டும் என ஆகமம் கூறி உள்ளது. அந்த அடிப்படையில் லக்ஷ்மி ஆலயம் கட்டப்பட்டுள்ளது. இது ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் தான் Dr. கனகராஜா அவர்களால் அமைத்துக் கொடுக்கப்பட்டது. இதன் பின்னர் திரு விளக்குப் பூசை, நவராத்திரி விரதம் போன்ற விழாக்கள் இலக்குமி கோயிலில் விசேடமாக நடைபெற்று வருவது தனிச்சிறப்பாகும்.

### சுப்பிரமணியர் கோயில் :-



மூலமூர்த்திக்கு வடமேற்கு மூலையில் சுப்பிரமணியர் ஆலயம் அமைக்கப்பட வேண்டும் என ஆகமம் கூறுகின்றது. அந்த நியதிக்கு இணங்க சுப்பிரமணியர் வள்ளி தெய்வானை சகிதம் வீற்றிருக்கின்றார். இதனை அமரர் கந்தசாமி மாஸ்டர் அவர்கள் கட்டிக் கொடுத்துள்ளார்கள். கந்தசட்டிவிரதம் இக் கோயிலின் முன்பாக சிறப்பாக எமது ஆலயத்தில் அனுஷ்டிக்கப்படுகின்றது.

### பைரவர் கோயில் :-



யாகசாலைக்கு அருகில் மேற்கு நோக்கி பைரவர் கோயில் அமைக்கப்படும், அவ்வாறே எமது ஆலயத்திலும் அமைந்துள்ளது. நாய்வாகனத்துடன் நிர்வாண கோலத்திலும் பயங்கரமாகக் காட்சி தருபவர் வைரவர் ஆவார். இவரை கேஷத்திர பாலகர் எனவும் அழைப்பர். இக் கோயிலை திரு. S.L. செல்லத்துரை அவர்கள் கட்டிக் கொடுத்தார் இன்று அது புனர்நிர்மாணம் செய்யப்பட்டுள்ளது.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**யாகசாலை :-**

வசந்த மண்டபத்திற்கு அருகில் மேற்கு நோக்கி யாகசாலை அமைக்கப்படல் வேண்டும். அவ்வாறே எமது ஆலய யாக சாலையும் அமைந்து உள்ளது. மகோற்சவம் நடைபெறும் வேளைகளில் இங்கு யாகம், ஓமம் என்பன இடம் பெறும்.

**வசந்தமண்டபம் :-**



ஈசானத்தில் தெற்கு நோக்கி வசந்த மண்டபம் அமைக்கப்படல் வேண்டுமெனக் கூறப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் எமது ஆலயத்திலும் வசந்த மண்டபம் உள்ளது. மகோற்சவம் நடைபெறும் வேளையில் எமது ஆலயத்தில் பத்துநாட்கள் திருவிழா மிகச் சிறப்பாக நடைபெறும் அவ்வேளையில் உற்சவமூர்த்தி பிள்ளையாரும், சிவன்பார்வதியும், முருகன், வள்ளி, தெய்வானை வீதி வலம் வருவது வழமை ஆகும். எமது ஆலயத்திற்கே உரித்தான மூஷிகம், எருது, மயில் ஆகிய வாகனங்களில் இறைவன் வீதி உலா வருவது கண்கொள்ளாக் காட்சியாகக் காணப்படும்.

**பார்வதி கோயில் :-**



தற்போது எமது ஆலயத்தில் புதிதாக தனியாக ஸ்நபன மண்டபத்தில் வடக்குப் பக்கமாக பார்வதிக்கென ஒரு சிறிய கோயில் அமைக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் கேதார கௌரி விரதம் இங்கு தான் அனுஷ்டிக்கப்படும். இக் கோயிலை திரு. மாமாங்கம் அரசரெத்தினம் குடும்பத்தினர் கட்டிக் கொடுத்துள்ளனர்.

**சிவன் கோயில் :-**



அருவுருவத்திருமேனியான சிவலிங்கத்தை வைத்து ஒரு சிவன் கோயிலும் கட்டப் பட்டுள்ளது. இதனை திரு. சண்முகம் சந்திரகுமார் அவர்கள் கட்டிக் கொடுத்தார்

**சண்டேஸ்வரர் கோயில் :-**

சண்டேஸ்வரர் கூப்பிய கரத்துடன் காணப்படுவார். விநாயகர் கோயிலில் அமைக் கப்பட வேண்டிய சண்டேஸ்வரர் கும்போதர சண்டேஸ்வரர் ஆவார். எமது ஆலயத்திலும் கும்போதர சண்டேஸ்வரரே உள்ளார். சண்டேஸ்வரர் ஆலயத்தையும் அதன் சிலையையும் ஆலயதர்மகர்த்தா அவர்களே அமைத்து பிரதிஷ்டை செய்துள்ளார். ஆலய வழிபாட்டின் பூரண பலனைத் தருபவர் சண்டேஸ்வரர் ஆவர். முதற் பூஜை விநாயகருக்கு அமைவது போல இறுதிப்பூஜை இவருக்கு உரியது ஆகும். சண்டேஸ்வரர் ஆலயத்தை சுற்றி வளைத்துக் கும்பிடுவது குற்றமாகும்.

இவ்வாறாக எமது ஆலயம் சிறப்பு மிகு ஆலயமாகக் காணப்படுகின்றது. ஆகம முறைப்படி அமைந்த இவ் ஆலயம் பிராமண சிவாச்சாரியாரால் பூசைசெய்யப்படும் ஆலயமாகவும் சமூக சேவையிலும் ஈடுபடும் ஆலயமாகவும் எமது ஆலயம் காணப்படுகின்றது என்றால் மிகையாகாது.

**திருமதி. திலகவதி ஹரிதாஸ் SLPS,**
ஓய்வுநிலை அதிபரும்,
சைவமங்கையர் கழகத் தலைவியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழமையும் புதுமையும் சேர்ந்து உருவாகிய
# ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயம்



அண்மையில் 30.01.2020ல் நடைபெற்ற கல்லடி உப்போடை நொச்சிமுனை ஸ்ரீ சித்தி விநாயகராலய கும்பாபிஷேக நிகழ்வினை யொட்டி இந் நிருவாகம் மலர் ஒன்றை வெளியீடு செய்வதை இட்டு பெரும் மகிழ்வு அடைகின் றேன். எனது கருத்தினை கூறுவதற்கு சந்தர்ப்பம் அளித்த எல்லாம் வல்ல விநாயகரை வணங்கியும், பிரசுரிக்க அனுமதியளித்த மலர் குழுவினருக்கும் நன்றியினை தெரிவித்து விடையத்திற்கு வருகின்றேன்.

ஏறக்குறைய இருநூறு ஆண்டுகளுக்கு முன்னதாக இவ் ஆலயம் இங்கு வாழ்ந்த தனவந்தர்களினாலும், ஊர்மக்களின் ஆதரவுடனும் உருவாக்கப்பட்டது. இதன் வரலாற்றினை இம்மலரில் சிலர் எடுத்துக் கூறினாலும் அடியேன் தெரிந்தவகையில் சுருக்கமாக கூற விரும்புகின்றேன். அக்காலத் தில் வாழ்ந்த கந்தப்பெருமாள், அவரது மகன் கதிர்காமத்தம்பி உடையார் அவர்மகன் வேலுப்பிள்ளை முதலாளியார் ஆகியோரது அயராத முயற்சியாலும் நிதி உதவியாலும் கல்லடி, கல்லடி உப்போடை, நொச்சிமுனை ஊர்மக்களாலும் உருவாக்கப்பட்ட இச் சித்தி விநாயகராலயம் இன்று மஹா கும்பாபிஷே கத்தை நடாத்தி புது பொலிவுடன் காட்சி அளித்து அருள் பாவித்துக் கொண்டிருக்கின்றது.

இவ்வாலயம் புனரமைக்கப்பட்ட போது சில பக்தர்கள் எக்காரணம் கொண்டும் ஆலய அமைப்பை மாற்றக்கூடாது அளவுப் பிரமாணங்கள் யாவும் சாஸ்திரப்படி அமைக்கப் பட்டிருக்கின்றது என கருத்து தெரிவிக்கப் பட்டபோது மூலஸ்தானத்தில், ராஜ கோபுரத்தில் எவ்விதமாற்றமும் செய்யப்படவில்லை. என்பதும் சில பகுதிகள் பழுதடைந்த நிலையில் உள்ள பகுதிகளை மாற்றி அமைத்தாலும் அங்கு ஆரம்பகாலத்தில் கட்டப்பட்ட செங்கல், கருங்கற்களால் செதுக்கப்பட்ட நிலைகளும் இன்றும் அங்கு பொருத்தப்பட்டது சிறப்பு அம்சமாகும். காலா காலமாக ஓதிய மந்திர சக்திகள் அதில் உள்ளது என்பதை யாவரும் உணர்ந்து செயல்பட்டிருக்கின்றார்கள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் இவ்வாலயத்தினுள் இருக்கும் தூய வெண்கலச்சிலைகள் யாவும் இந்தியாவில் இருந்து வத்தையில் (படகு) திரு.K.O. வேலுப் பிள்ளை அவர்களால் தனது நிதியில் கொண்டு வரப்பட்டது. அதுபோன்று கொடிமரமும் அதை மூடி ஐம்பொன்னாலான கவசமும் அவரால் தான் உருவாக்கப்பட்டது. தற்போது கொடி மரம் மாத்திரம் மாற்றம் செய்யப்பட்டு உள்ளது. அம்மரமும் வேலுப்பிள்ளையின் வாரிசான அதாவது K.O.V.K. விமலநாதனால் பெற்றுத்தரப்பட்டது. மேலும் நிருவாகத்தினரின் முயற்சியால் ஊர் மக்களின் நிதியில் இருந்தும் பேச்சித்தாயாரின் நிதியில் இருந்தும் சில கட்டிட நிர்மாணங்கள் அமையப் பெற்று சிறந்த இடவசதிகளுடன் தோற்றம் பெற்று இருக்கின்றது.

மேலும் இவ்வாலயத்தின் சிறப்பு என்ன வென்றால் நாவலடி, கல்லடி, கல்லடி உப்போடை நொச்சிமுனை, நாவற்குடா, மஞ்சந்தொடுவாய் ஆகிய கிராமங்களில் ஆலயங்கள் இருந்தாலும் 200 ஆண்டு களுக்கு முன்னதாக இச்சித்தி விநாயகர் ஆலயத்தில் மாத்திரமே, ராஜ கோபுரம், கொடித் தம்பம், யாகசாலை, வசந்த மண்டபம், நவக்கிரக ஆலயம் ஆகியவை அமையப்பெற்று இருந்தது ஒரு சிறப்பம்சமாகும்.

மேலும் மேற்குறிப்பிட்ட தனவந்தர் களிடம் பரந்த நல்ல மனம் இருந்தமையால் இவ்வாலயத்திற்கு விஸ்தீரமான வீதியையும் தமது காணியில் அமைத்துக் கொடுத்து உள்ளார்கள். இவ்வீதியில் பேச்சியம்மன் சடங்கில் கலந்து கொள்ளும் பக்தர்களுக்கு பெரும் உதவியாக இருக்கின்றது. அத்துடன் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தில் கந்த சஷ்டி விரதத்தின் இறுதி நாள் சூரசம்ஹாரம் இடம் பெறுவதற்கு, திருவிழா காலங்களில் பண்டி வேட்டை திருவிழாவை நடாத்துவதற்கு ஆலய உற்சவ காலத்தில் ஆன்மீக நிகழ்வை நடாத்துவதற்கும் பெரியகாணி பயன் பெறுகின்றது. மொத்தத்தில் பொருத்தமான இடத்தில் இவ் ஆலயம் அமையப் பெற்று இருக் கின்றது. பக்தர்கள் ஆற அமர்ந்து செல்ல ஆலய நிருவாகத்தினரும், பெண்கள் தொண்டர் அணியும் வீதியை அடிக்கடி சுத்தம் செய்து கொள்வதில் கவனம் செலுத்தி வருகின்றார்கள்.

இறுதியாக தற்போது மேற்குறிப்பிட்ட வாரிசுகளின் வரிசையில் திரு.K.O வேலுப்பிள்ளை அவர்களின் மகன் கதிர்காமத்தம்பி அவர்கள் முகாமையாளராக ஏறக்குறைய ஐம்பது வருடங்களுக்கு மேல் முகாமையாளராக சேவையாற்றி இருக்கின்றார். ஊர் மக்களின் விருப்பத்திற்கு இணங்க சிறந்த நிருவாகத்தை அமைத்து அவர்களுடன் நல்ல பணி செய்து உள்ளார். இறுதியாக அவர் தொண்ணூறாவது வயதில் சுகையீனமுற்றதும் வேலுப்பிள்ளை அவர்களின் மூத்த மகன் நமசிவாயம் அவர் களின் புதல்வனுக்கு சகல விடயங்களையும் அறிவுரை கூறியும், பயிற்சிகள் கொடுத்தும் முகாமையாளராக அவரது காலத்தில் நியமிக் கப்பட்டார். அவர்தான் ஊர்மக்களின் மத்தியில் ஆதரவையும், அன்பையும் பெற்ற நமசிவாயம் ஹரிதாஸ் ஆவார்.

இவர் தற்போது தன்னை அர்ப்பணித்து சேவைகள் ஆற்றிவருகிறார். இவருக்கு பக்கபலமாக நல்லதோர் நிருவாகம் அமையப் பெற்று இருக்கின்றது. ஊர் மக்களும் நல்ல ஆதரவு கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். நிதியைப் பொறுத்த அளவில் பேச்சித்தாயார் கூடிய நிதியை கொடுத்து உள்ளார். மிகுதி நிதியை விநாயகரின் பக்தர்கள் கொடுத்து சிறந்த குருமாரைக் கொண்டு இவ் ஆலயம் நல்லதோர் கும்பாபிஷேகத்தை நடாத்தி இருக்கின்றது. எல்லோருடைய முயற்சியும் இறைவனின் அருளும் இருந்தமையால் கும்பாபிஷேகம் நிறைவு பெற்றது. நன்றியுடன் பக்தியும், சேவையும் ஓங்க வேண்டும்.

K.O.V.N. **கணேசானந்தம்**

தலைவர், K.O.V நம்பிக்கை நிதியம்




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பிள்ளையாரின் பெருமை

கவிதை





பேச்சிக்கு துணை நின்று பேரருள் காட்டும்
பெருச்சாளி வாகனனே பிள்ளையாரே...
நம்பி வரும் மானிடர் தன்னை
தும்பிக்கை கொண்டு துணை கொடுக்கும் பிள்ளையாரே...

சூரியன் சந்திரன் அக்கினி மூன்றும் உன் பார்வை விழி
சுழலும் மானிடப்பிறவியில் சுகம்தருவாய் பிள்ளையாரே...
சுற்றி வந்து வணங்குகின்றேன் சூழ் கடல் தீவில்
சுற்றமும் சூழ சுதந்திரம் தருவாய் பிள்ளையாரே...

தவமிருந்து பெற்ற தாய்தந்தை சுற்றி வந்து
தரணிதனில் புகழ்பெற்ற பிள்ளையாரே...
தாய் தந்தை வணங்க மறுக்கும் மானிடரை
தஞ்சம் கொள்ள தலைவனே பிள்ளையாரே...
விலங்குத்தலையும் மனித உடம்பும் தேவர் திருப்பாதமும்
வினையறுக்கும் விநாயகனின் முடிவில்லா விந்தை பல
விளையாட்டுடன் கூடிய உன்னறிவு விண்ணைத் தொட்டதன்று
வியந்து போன உன்தம்பி விம்மியழ கண்டீரே பிள்ளையாரே...

பன்றிக்கு பால் கொடுத்த பரமசிவன் மகன் நீ
பார்வதியின் பஞ்சுமெத்தை குழந்தை நீ பிள்ளையாரே...
பாரினில் உள்ளவர்க்கு பக்குவமாய் பாடம் சொல்லிக் கொடுத்து
பார்போற்றும் புகழ்பெற்ற குழந்தை நீ பிள்ளையாரே...

அப்பமும் முக்கனியும் அமுதும் படைத்து உன்னை
அறுகம்புல் மாலை கொண்டு அலங்கரித்த வேளை
அளவில்லா ஆனந்தம் கொண்டு அரவணைப்பாய் நீ
ஆணவம் கொண்டவனை அழித்திடுவாய் பிள்ளையாரே...

அன்னையவள் உமைக்கு ஆறுதல் சொன்ன பிள்ளை - நீ
ஆண்டவன் சந்நிதியில் ஆறுதல் தரும் பிள்ளையாரே...
ஆலயத்தில் முதல் வணக்கம் உனக்கு
ஆனந்தமாய் மூன்று குட்டு சிரசில் - சீர்பெற.
மறப்பது மன்னிப்பது உன்மதி நுட்ப செயலாகும்.
மதி சுழி போட்டு மந்திரம் சொல்லும் வேளை
மாந்தர்கள் மகிழ்வார்கள் உன்துணையால் - உன்னை
துதிபாடும் வேளை தும்பிக்கை நீட்டி துணைவருவாய் பிள்ளையாரே...

கணங்களை கட்டியாளும் கடவுளே
கண்டவர் உன்னை கை கூப்ப மறுப்பாரோ கணபதியே - உன்னை
மன்றாடி உன்மடிமீது வீழ்வோரை
மனம்கொண்டு காத்திடும் கடவுளாம் பிள்ளையாரே...

**ஜெயக்குமார் - கானுஜன்** தரம் - 9R - 2020, மட்/ சிவானந்தா தேசிய பாடசாலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# கோயில் காணிகள் தொடர்பான சட்டங்கள்

- கோயில் காணிகள் இரு வகைப்படும்.

1. தனியார் காணிகள்
2. அரச காணிகள்

- தனியார் காணிகள் : கோவிலுக்குச் சொந்த மான தனியார் காணிகளும் (Trust Ord) நம்பிக்கை பொறுப்புச் சட்டம் இல 9 இன் 1917 ஆண்டின் சட்டத்தின் கீழும் அதன் திருத்தங்களின் கீழும் ஆளப்படும். இச் சட்டத்தின் முக்கிய பிரிவுகளை நாம் பார்க்கும் போது நமக்கு ஏற்படும் பிரச்சனைகளுக்கு தீர்வை எட்ட முடியும்.

**பிரிவு 11 –**

நம்பிக்கை பொறுப்பை உரிமை முறையில் பொறுப்பேற்க வேண்டும்.
நம்பிக்கை பொறுப்பை ஆக்கியோன் (தர்மகர்த்தா) அந்நம்பிக்கை பொறுப்பை ஆக்கும் தருணத்தில் கொண்டிருந்த நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் அவரது பணிப்புரைகளுக்கு அமைவாகவும் கடமைகளை உரிய முறையில் நிறைவேற்ற வேண்டும்.

**பிரிவு 14 –**

பயனாளிகள் தொடர்பில் எவ்வித துரோக செயலிலும் ஈடுபடுதல் ஆகாது.
பயனாளிகள் (நம்பிக்கை சொத்தில் பயன் பெறுவோர்) அக்கறைக்கு நன்மைக்கும் மாறாக தனக்காக அல்லது பிறரொருவரின் நன்மைக்காக நம்பிக்கை சொத்தினை மாற்றுதலோ அல்லது மாற்ற உதவுவதோ அல்லது மாற்ற துணை போவதோ ஆகாது.

**பிரிவு 35 –**

நம்பிக்கை சொத்தின் முகாமைத்துவம் நிர்வாகம் தொடர்பாக எழும் கேள்விகள் தொடர்பில் நீதிமன்றத்தின் அபிப்பிராயம் பெற வேண்டும். எனும் சூழ்நிலை ஏற்படின்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நம்பிக்கைப் பொறுப்பாளர் நீதி மன்றத்திற்கு விண்ணபித்து நீதிமன்றத்தின் அபிப்பிராயம் பெறப்படலாம். இது தொடர்பிலான செலவுகள் எவ்வாறு செலுத்தப்பட வேண்டும் என நீதிமன்றம் தீர்மானிக்கும். இவ்விடயம் தொடர்பில் அக்கறையுடையவர்களுக்கு இவ்விண்ணப்பத்தின் பிரதி வழங்கப்படல் வேண்டும்.

**பிரிவு 37 –**

நம்பிக்கைப் பொறுப்புக்கள் சட்டத்தின் வெளிப்படையாக செயற்படல் அதிகாரங்களுக்கு மேலாக நம்பிக்கை ஆதனங்களின் பாதுகாப்புக்கள் தொடர்பாகவும் பயனாளிகள் (பலன் பெறுவோர்) தொடர்பாகவும் நியாயமானதும் சரியெனத் தோன்றும் செயல்களை மேற்கொள்ளலாம்.

**பிரிவு 38 –**

நம்பிக்கை பொறுப்பாளர் நம்பிக்கை ஆதனத்தை 10 வருடத்துக்கு மேற்படாத காலப்பகுதி ஒன்றிற்கு குத்தகைக்கு விடலாம். குறித்த காலத்திற்கு மேற்பட்ட காலத்திற்கு குத்தகைக்கு வழங்க நீதிமன்ற அனுமதி பெறுதல் வேண்டும்.

**பிரிவு 39 –**

நம்பிக்கைச் சொத்தை விற்பனை செய்வதற்கான அதிகாரம் நம்பிக்கைப் பொறுப்பாளருக்கு கர்த்தாவினால் (நம்பிக்கை பொறுப்பை ஆக்கியோன்) வழங்கப்பட்டுள்ள போது அச்சொத்தை ஏல விற்பனை மூலமோ அல்லது பிரத்தியேக ஒப்பந்தம் ஒன்றின் மூலமோ நம்பிக்கை பொறுப்பாளர் விற்பனை செய்யலாம்.

**பிரிவு 42 –**

நீதிமன்றத்தின் அனுமதியுடன் நம்பிக்கைச் சொத்தின் நன்மை கருதி அச்சொத்தின் முதலீடுகளை மாற்றம் செய்வதற்கான அதிகாரத்தை நம்பிக்கைப் பொறுப்பாளர் கொண்டுள்ளார்.

**பிரிவு 46 –**

ஒரு நம்பிக்கைச் சொத்து தொடர்பில் பல நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் நியமிக்கப் பட்டிருப்பின் அவர்களில் ஒருவர் இறக்க நேரிடின் ஏனையோர் அச்சொத்தினை தொடர்ந்து நிர்வாகம் செய்யலாம்.

**நம்பிக்கை பொறுப்பாளர் இயலாமை**

**பிரிவு 48 –**

நம்பிக்கை பொறுப்பாளர் பதவி ஒன்றால் அப்பதவியை நீதிமன்றத்தின் அனுமதி யின்றி அல்லது பயனாளிகளின் இணக்க மின்றி துறக்க முடியாது.

**பிரிவு 49 –**

நம்பிக்கை பொறுப்பாளர் தனது நியமனத் திற்கான ஆவணத்தின் மூலம் விதிவிலக் குகள் வழங்கப்பட்டிருந்தால் தவிர தனது கடமைகளை வேறு ஒருவருக்கு கையளித்தல் ஆகாது.

**பிரிவு 50 –**

ஒரு நம்பிக்கை பொறுப்பு தொடர்பில் பல நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் உள்ள போது ஒருவர் தானே தனித்து இயங்க முடியாது.

**பிரிவு 51 –**

நம்பிக்கை பொறுப்பாளர் எல்லை மீறி தனது தற்றுணிவு அதிகாரத்தை பிரயோகித்தல் ஆகாது.

**பிரிவு 53 –**

நம்பிக்கை பொறுப்பாளர் தனது நன்மைக்காக அல்லது சம்பந்தமில்லாத தேவைக்காக நம்பிக்கை ஆதனத்தை பயன்படுத்தல் ஆகாது.

**பிரிவு 54 –**

நம்பிக்கை பொறுப்பாளர் நம்பிக்கை சொத்தை நேரடியாக அல்லது மறை முகமாக ஏனையோர் பெயரில் வாங்கல் ஆகாது.

மேற்குறிப்பிட்ட பிரிவுகள் கோவில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணி சம்பந்தமாக பிணக்குகளை தீர்க்க உதவும் என நம்புகின்றேன்.

பாதிக்கப்படுவோர் நம்பிக்கை பொறுப்புச் சட்டத்தின் பிரிவு 102, 103 இன் கீழ் நீதிமன்றத்தை நாடி நிவாரணம் பெறலாம். முதலில் பாதிக்கப்பட்டோர் அரசாங்க அதிபர் / பிரதேச செயலாளர் அவர்களுக்கு எழுத்து மூல முறைப்பாட்டை செய்து அவர்களின் விசாரணை அறிக்கையுடன் நீதிமன்றம் செல்ல வேண்டும்.

» **அரச காணிகள் :** அரச காணியில் கோவில்கள் அமைந்திருந்தால் அந் நிர்வாக சபை பிரதேச செயலாளரை அணுகி இக் கோவில் காணிகள் சம்பந்தமாக நீண்ட காலக் குத்தகை பெறுவதற்கான நடவடிக்கையை மேற் கொள்ள வேண்டும். நீண்ட கால குத்தகை அரச காணிச் சட்டம் (State Land Ord) மூலமே வழங்கப்படு கின்றது. இக்காணிகளை காணி ஆணை யாளர் அனுமதியின்றி குத்தகைக்கு பிறருக்கு கொடுக்கவோ, விற்கவோ முடியாது. அரச காணியில் கட்டபபட்ட கோவில்கள், பாடசாலைகள் சமயம் தொடர்பான வேறு தேவைகளுக்கு நீண்ட கால குத்தகை பெற விரும்பினால் பின்வரும் ஆவணங்களை கோவில் நிர்வாகம் பிரதேச செயலாளருக்கு சமர்பிக்க வேண்டும்

- **சமர்பிக்க வேண்டிய ஆவணங்கள்**

1. ஆலயத்தின் விண்ணப்படிவம் (வ.கி. மா.படிவ இல 01) - 02 பிரதிகள்
2. நகர அபிவிருத்தி அதிகார/ பிரதேச சபையின் கருத்து - 02 பிரதிகள்
3. அக்கோவில் யாப்பு - 02 பிரதிகள்
4. கோவிலுக்குரிய சொத்து சம்பந்தமான பொறுப்பானவர்கள் மூவரின் முழுப் பெயர்கள் அவர்கள் ஒவ்வொருவரின் கோவிலுள்ள நிருவாகப் பதவிகள், ஒவ்வொருவரின் முகவரிகள் அடங்கிய ஆவணங்கள் - 02 பிரதிகள்
5. நில அளவைப்படம் இருப்பின் அந்நில அளவைப்படத்தின் பிரதிகள் - 02 (படம் இல்லாவிட்டால் கையால் கீறப்பட்ட மாதிரிப்படம்)
6. கோவில் கூட்ட தீர்மான அறிக்கை - 02 பிரதிகள்
7. அச்சமயத்துக்குரிய கலாசார அமைச்சு சிபார்சு

இவை யாவும் கோவில் நிர்வாக சபையால் பிரதேச செயலாளருக்கு வழங்கும் ஆவணமாகும்.

ஏனைய பல ஆவணங்களை பிரதேச செயலாளர் காணியை களத்தில் பரிசீலித்து நிர்வாக சபையை விசாரித்து தகவல் நிரப்பி மாகாண காணி ஆணையாளர் ஊடாக காணி ஆணையாளருக்கு அனுப்புவார்.

**அவையாவன:**

1. 05ம் அனுபந்தம் - 02 பிரதிகள்
2. 19வது அனுபந்தம் - 02 பிரதிகள்
3. 6ம் அனுபந்தம் (ஆ) 3 மொழிகளிலும் 3 பிரதிகள்
4. காணியின் நிலைபற்றி அறிக்கை - 02 பிரதிகள்

பௌத்த மத ஆலயங்களுக்கு மட்டும் இலவசமாக பூஜா ஒப்பம் வழங்கப்படும். ஏனைய சமயங்களுக்கு நீண்டகால குத்தகையே வழங்கப்படும். வருடாவருடம் குத்தகையாக காணியின் அபிவிருத்தியடையாத பெறுமதியின் 1/2% மட்டும் பிரதேச செயலாளர் காரியாலத்தில் கட்டணமாக கட்ட வேண்டும். இது பற்றி காணி நடைமுறைக் கோவையில் காணிக்கட்டளை பிரிவு 200ஐ பார்க்கவும்.

என்னால் ஆக்கப்பட்ட சிங்கள மொழி பெயர்ப்பான 'அரச காணி தொடர்பான நடவடிக் கைக் கோவை' புத்தகத்தில் பார்வையிடலாம்

நன்றி !!!

**K.O.V.K. குருநாதன்**
முன்னாள் காணி ஆணையாளரும்,
தவிசாளர், விசேட மத்தியஸ்தர்கள் சபை (காணி)



noolaham.org | aavanaham.org

# கயமுகாசுரனின் கர்வமடக்கிய

# கணபதி



**மு**ன்னொரு காலத்தில் தேவேந்திரனுடன் போர் புரிந்து தோல்வியுற்று மனம் வருந்திய அசுரேந்திரன் தமது குலக்குருவாகிய சுக்கிராச்சாரியாரிடம் சென்று 'நம் குலத்தில் தேவேந்திரனை வெல்லக்கூடிய ஒருவரைத் தோற்றுவிக்க ஏது வழி' என்று வினவ, "மோட்சம் வேண்டித் தவம் செய்து கொண்டிருக்கும் வசிட்ட முனி வம்சத்தில் தோன்றிய மரகத முனிவரை அசுர குலப்பெண் ஒருத்தி வசப்படுத்தி மணந்தாள், அவளுக்கு யானை முகத்துடன் கூடிய கயமுகாசுரன் என்ற மகன் பிறப்பான். அவன் தேவேந்திரனை வென்று அசுரர் குலத்தை தளைக்கச் செய்வான்." என்று சுக்கிராச்சாரியார் கூறினார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் குலத்துப் பெண்ணாகிய விபுதை என்பவளை அழைத்து தம் குலம் தளைக்க மகனொருவனை நீ பெற்றெடுக்க தவம் புரியும் மரகத முனிவரின் தவத்தை கலைத்து அவரை நீ மணம் புரிய வேண்டும் என்று கூற, குலம் தளைக்கக் குழந்தையைப் பெற விருப்பம் கொண்ட விபுதை அப்படியே செய்கின்றேன் எனக் கூறி, மரகதமுனிவர் தவம் செய்த இடத்திற்குச் சென்று, அவர் தவத்தைக் கண்டு, வியந்து நின்று தானும் இவரை மணக்கத் தவமிருத்தலே சாலப் பொருத்தமென நினைத்து, அவரெதிரில் தவமிருந்தாள்.



மரகதமுனிவர் ஒரு நாள் தம் தவத்திலிருந்து கண்விழிக்க, கண்ட காட்சியில் ஓர் ஆண்யானையும், பெண்யானையும் மையல் வசமாகி மகிழ்ச்சியுடன் மருவ தன்வசமிழந்தவரின் முன்னால் தவம் செய்யும் விபுதையைப் பார்த்து நீ யார் எனக் கேட்க, உங்களை மணம்புரிய வேண்டியத் தவமிருக் கின்றேன் என அவள்கூற முனிவர் தம் எண்ணம் கைகூடியதாகக் கருதி சம்மதிக்க, அவர் ஓர் ஆண்யானை வடிவமாக, விபுதை பெண்யானை வடிவமாக இருவரும் அக்காட்டில் இன்புற்று வாழ்ந்த காலை, நீண்ட துதிக்கையும் இரண்டு கொம்புகளை உடைய கயமுகாசுரன் பெண் யானை வடிவிலிருந்த விபுதையின் வயிற்றிலிருந்து பிறந்தான்.

கயமுகாசுரன் உலகங்களையே உண்டு விடக் கூடிய ஆற்றலுடையவனாக, கையில் கத்தியுடன் எங்கும் சுற்றித்திரிந்த வேளை, பெண் யானையான விபுதையின் மயிர்க் கால்களிலிருந்து எண்ணற்ற அசுரர்கள் படைக் கலங்களுடன் பிறந்து, ஆரவாரம் செய்யத் தொடங்கினர். மரகத முனிவர் இவள் அசுர குலம் என அறிந்து, பிரிந்து மறுபடியும் தவம் செய்யத் தொடங்கினார்.

கயமுகாசுரனும் அவனுடன் தோன்றிய அசுரர்களும் உயிரினங்களைக் கொன்று, உண்டு தேவர்கள், மற்றும் முனிவர்கள் முதலானோருக்கு பலவிதமான துன்பங்களை செய்து வந்தபோது, சுக்கிர பகவான் கயமுகனுக்கு பல அறிவுரை கூறி சிவனை நோக்கித் தவம் செய்து வரம் பெற்று, இந்திராதி தேவர்களை வென்று அடக்குமாறு கூற, அதன்படி சிவனை விளித்து தவம் செய்து சிவனிடமிருந்து பல வரங்களையும் பெற்று, தேவ தச்சனை அழைத்து ஓர் அழகிய சிறந்த நகரை உருவாக்கி அதற்கு மதங்கநகரம் எனப்பெயர் சூட்டி, அசுரேந்திரனைத் தமக்கு அமைச்சராக்கி முனிவர்கள், தேவர்களையெல்லாம் தாமேவிய பணிகளைச் செய்ய வைத்து, பல பெண்களை மணந்து இன்பமாக வாழ்ந்து வந்தவன், தேவர்களைப் பார்த்து, "நீங்கள் என்னை வணங்கும் போது, மூன்று முறை தலையில் குட்டிக்கொண்டு, பிறகு கைகளை மாற்றிக் காதுகளைப் பற்றிக் கொண்டு மூன்றுமுறை தோர்பிகரணம் போட்டு வணங்க வேண்டும்'', என்று ஆணையிட்டான். அதன்படி தேவர்களும் செய்து வந்தனர்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கயமுகாசுரன் செய்யும் துன்பங்கள் தாங்காமல், இந்திரன் முதலான தேவர்கள் கைலாய வாசலிலுள்ள விநாயகப் பெருமானிடம் முறையிட்டனர். துன்பத்தைப் போக்கி அருள் புரியுமாறு வேண்டினர். அவர்களுக்கு அருள்புரியச் சித்தம் கொண்டு எம்பெருமானாகிய ஏரம்பன் உடனே, படைகளுடன் போர்புரியப் புறப்பட்டார்.



விநாயகரை எதிர்த்துப் போரிட படைகளுடன் வந்த கயமுகாசுரன் மழை போல அம்புகளைப் பொழிந்தான். விநாயகப் பெருமானோ அத்தனை அம்புகளையும் தன் அம்புகளினால் பொடிப்பொடியாக்கினார். நெடுநேரம் நடந்தபோரில் விநாயகப் பெருமான் கயமுகா சுரனின் ஆற்றலைக் கண்டு வியந்தார். பிறகு விநாயகப் பெருமான் தமது வலப்புறத் தந்தத்தின் முனையை ஒடித்து வீச, அது பேரிரைச்சலுடன் சென்று கயமுகாசுரனின் மார்பைப் பிளந்தது. பின்னர் அத்தந்தம் கடலில் திரும்ப வந்து சேர்ந்தது. அதை ஓர் ஆயுதமாகத் தம் கையில் ஏந்திக் கொண்டார். கயமுகாசுரனின் அழிவைக் கண்டு தேவர்கள் பூமழை பொழிந்தனர். அவரை வாழ்த்தி வணங்கினர்.

மார்பு பிளந்து மண்ணில் சரிந்த கயமுகாசுரன் ஒரு பெரிய மழையைப் போன்ற பெருச்சாளி வடிவங் கொண்டுவரக், கண்ட தேவர்கள் கலங்கி நிற்க அதனைப் பிடித்துத் தனக்கு வாகனமாக்கி அதன் மீது ஏறி அமர, விநாயகப் பெருமானின் திருவுருவம் பெருச்சாளியாக இருந்த கயமுகாசுரனின் உடம்பில் பட்டவுடன், அவனைப் பற்றிக் கொண்டிருந்த ஆணவமலம் அகன்றது. உடனே அவனுக்கு மெய்யுணர்வு உண்டாகியது. பின் பெருச்சாளி வாகனத்தில் அமர்ந்தருளிய விநாயகப் பெருமானை முனிவர்களும் தேவர்களும் பணிந்து வணங்கினார்கள். அவர்கள் விநாயகக் கடவுளைப் பார்த்து, "நாங்கள் முன்பு கசமுகா சுரனிடம் செய்து வந்த குட்டு, தோப்புக்கரணம் ஆகிய செயல்களைத் தங்கள் முன்பு செய்து வழிபட அருள்புரிய வேண்டுகிறோம்", என்று வேண்ட, "அப்படியே செய்க", என்று ஏக தந்தனாகிய விநாயகக்கடவுள் அவர்கள் அனைவருக்கும் அருள்புரிந்து விடை கொடுத்து வடதிசை நோக்கிச் சென்றார். அம்முறை வழிபாட்டினை நாமும் இப்பொழுதும் விநாயகப் பெருமானை வழிபடும் போது மட்டும் தலையில் மும்முறை குட்டி, தோப்புக் கரணம் போட்டு வணங்கி வருகின்றோம்.

**மூ. அருளம்பலம்**
ஆரையூர் அருள், 'துளசி வாசம்'
ஆரையம்பதி - 01


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துக்களின் விசேட தினங்கள்

**01. தை மாதம்**
- தைப்பொங்கல்
- பிரதோஷ விரதம்
- அமாவாசை விரதம்
- சதுர்த்தி விரதம்
- சஷ்டி விரதம் (2)
- தை பூரணை - தைப்பூசம்
- பிரதோஷம்
- சங்கடஹர சதுர்த்தி விரதம்
- கார்த்திகை

**02. மாசி மாதம்**
- பிரதோஷம்
- மகாசிவராத்திரி
- அமாவாசை
- சதுர்த்தி விரதம்
- கார்த்திகை
- சஷ்டி விரதம் (2)
- பூரணை - மாசிமகம்
- பிரதோஷம்
- சங்கடஹர சதுர்த்தி
- நடேசர் அபிஷேகம்

**03. பங்குனி மாதம்**
- அமாவாசை
- சதுர்த்தி
- கார்த்திகை
- சஷ்டி (2)
- ஸ்ரீராம நவமி
- பூரணை - பங்குனி உத்தரம்
- சங்கடஹர சதுர்த்தி
- பிரதோஷம் (2)

**04. சித்திரை மாதம்**
- சித்திரை வருடப் பிறப்பு
- பிரதோஷம்
- நடேசர் அபிஷேகம்
- சித்திரைப்பரணி
- கார்த்திகை விரதம்
- சதுர்த்தி விரதம்
- சித்திரைச் சித்திரை - சித்திர குப்த விரதம்
- சித்ரா பூரணை விரதம்
- பிரதோஷம்
- அமாவாசை
- சங்கடஹர சதுர்த்தி
- சஷ்டி (2)

**05. வைகாசி மாதம்**
- பிரதோஷம் (2)
- கார்த்திகை
- சதுர்த்தி விரதம்
- அமாவாசை
- சங்கடஹர சதுர்த்தி
- வைகாசி விசாகம் - பூரணை
- சஷ்டி

**06. ஆனி மாதம்**
- பிரதோஷம் (2)
- கார்த்திகை
- சதுர்த்தி
- சங்கடஹர சதுர்த்தி
- சஷ்டி (2)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஆனி உத்தரம்- பூரணை (நடேசர் அபிஷேகம்)
- வருடாந்த மஹோற்சவம்
- அமாவாசை

**07. ஆடி மாதம்**

- பிரதோஷம் (2)
- ஆடி அமாவாசை
- நாக சதுர்த்தி
- பூரணை - ஆடிப்பூரம்
- சங்கடஹர சதுர்த்தி
- கார்த்திகை
- சஷ்டி (2)
- ஆடி செவ்வாய் (05) or (04)
- வரலட்சுமி விரதம்

**08. ஆவணி மாதம்**

- ஆவணி ஞாயிறு (04) or (05)
- விநாயகர் சதுர்த்தி
- சனி பிரதோஷம் (2)
- சஷ்டி (2)
- பூரணை
- கார்த்திகை
- அமாவாசை
- நடேசர் அபிஷேகம்
- சங்கடஹர சதுர்த்தி
- கிருஷ்ணஜெயந்தி

**09. புரட்டாதி மாதம்**

- மஹாளயபஷ ஆரம்பம்
- புரட்டாதிச் சனி (04) or (05)
- நவராத்திரி
- சதுர்த்தி
- சங்கடஹர சதுர்த்தி
- சஷ்டி (2)
- மஹாளயபசஷ அமாவாசை முடிவு
- கார்த்திகை
- விஜயதசமி
- பூரணை
- கேதார கௌரி விரதம்
- பிரதோஷம் (2)
- நடேசர் அபிஷேகம்

**10. ஐப்பசி மாதம்**

- பிரதோஷம் (2)
- தீபாவளி அமாவாசை - கேதார கௌரிவிரதம் முடிவு
- சதுர்த்தி
- கந்தசஷ்டி விரதம் ஆரம்பம்
- சங்கடஹர சதுர்த்தி
- கார்த்திகை
- கந்தசஷ்டி விரதம் முடிவு
- சஷ்டி
- பூரணை - பௌர்ணமி
- ஐப்பசி வெள்ளி (05) or (04)


**11. கார்த்திகை மாதம்**

- பிரதோஷம் (2)
- சதுர்த்தி
- கார்த்திகைக்கு கார்த்திகை
- கார்த்திகை விளக்கீடு - பௌர்ணமி சர்வாலய தீபம்
- சங்கடஹர சதுர்த்தி
- அமாவாசை
- விநாயகர் விரதாரம்பம்
- சஷ்டி (2)
- கார்த்திகை சோமவாரம் திங்கள் (04)

**12. மார்கழி மாதம்**

- சதுர்த்தி
- விநாயகர் சஷ்டி விரதம் முடிவு
- திருவெண்பாவை ஆரம்பம்
- மார்கழி திருவாதிரை - நடேசர் அபிஷேகம்
- பூரணை - பௌர்ணமி
- சஷ்டி
- கார்த்திகை திருவெம்பாவை முடிவு
- அமாவாசை
- சங்கடஹர சதுர்த்தி
- வைகுண்ட ஏகாதசி
- பிரதோஷம் (2)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# கல்லடியும்
# கல்லடி உப்போடையும்



கல்லடியும் கல்லடி உப்போடையும், மட்டக்களப்பு வாவியின் கிழக்கே அமைந் துள்ளன. இவை கல்வியும் செல்வமும் மற்றும் வளங்களும் நிறைந்த ஊர்களாகும். இவ்வாவி யில் ஆனைக்கல்லும் அதன் நிலத்தின் கீழ் படரும் பாறையாலும் கல்லடி எனக் காரணப் பெயர் கொண்டது. இதற்குத் தென் அயலி லுள்ள உப்போடையும் கல்லடி உப்போடை எனப் பெயர் பெற்றது. (இன்னும் பெரிய உப்போடை, சின்ன உப்போடை எனப் பெயர் கொண்ட உப்போடைகள் இருந்ததனால்) அரச நிருவாகத்தினரும் (மண்முனையை மையமாகக் கொண்டு பகுதிகளுக்குப் பெயர் இட்டதைப் போல்) கல்லடியை மையமாக வைத்து, கல்லடி வேலூர் கல்லடி முகத்துவாரம், கல்லடி திருச்செந்தூர் எனப் பெயரிட்டனர்.

இவ்விரு ஊர்களிலும் பேர் பெற்ற குடும்பங்கள் வாழ்ந்தன. கல்லடியில் வேலாயுதர் குமாரவேல் (குமார பொலிஸ் விதானை சபாபதிப்பிள்ளை உடையார் தந்தை) கந்தப்பெருமாள் வேலுப்பிள்ளை (நீதிமன்ற சக்கிடுத்தார் (Secretary) தோ.கணபதிப்பிள்ளை, மாசிலாமணி, நோ.சீனித்தம்பி போன்றோர் குடும்பங்களும், கல்லடி உப்போடையில் கந்தப்பெருமாள் கதிர்காமத்தம்பி உடையார், தோ.கு.சின்னத்தம்பி (K.O.வேலுப்பிள்ளையின் மாமா), க.காசிநாதர் மற்றும் குடும்பங்களும் வாழ்ந்துள்ளனர். நமது இரு ஊர்களின் தற்போதய நிலைக்கு அடிகோலியவர்கள் இவர்களே ஆவர். இவர்களின் வழித் தோன்றல்கள், கல்விமான்களாகவும், செல்வந்தர்களாகவும், உயர் பதவிகளை வகித்தவர்களாகவும் இருந்துள்ளனர். பரிஸ்டர் வேலுப்பிள்ளை குத்தர வேலுப்பிள்ளை, சட்டத்தரணி தொ.சீ.இராசையா கணக்காளர் சீவரெட்ணம் வேலுப்பிள்ளை (கொழும்பு Ford Rhodes Thornton கொம்பனி) மற்றும் நொத்தாரிசுகள், உடையார்கள், தோம்பு தோர்கள், ஆசிரியர்கள் பலர் இருந்தனர். கல்லடி உப்போடையிலும் சட்டத்தரணிகள் நொ.குமாரசாமி குத்தர், நொ.ந.சபாரெட்ணம் டாகுத்தர். அப்போதிக்கரி டாகுத்தர், க.கனகராசா கணக்காளர், கருணைலிங்கம் (கொழும்பு Ford Rhodes Thornton கொம்பனி) ஆசிரியர்கள், நொத்தாரிசுகள், உடையார்கள், தோம்பு தோர்கள் எனப் பலர் இருந்துள்ளனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வூரில் அன்று வாழ்ந்தவர்கள் சைவ சமயத்தினராயிருந்தனர். ஆகவே இவர்கள்தான் கல்லடியிலிருந்த கோயிலை அபிவிருத்தி செய்யவும், கல்லடி உப்போடையிலும் இவர்கள் தான் கோயிலமைப்பதற்கும் காரணமாயிருந்தனர். இச்சந்தர்ப்பத்தில் முன்சரிதையை நினைவூட்டுவது பொருத்தமாயிருக்கும். போர்த்துக்கேயர் காலத்துக்குப் முன் (அண்ணளவாக நானூறு ஆண்டுகளுக்கு முன்) கல்லடித் துறையிலிருந்து வந்த வீதி (தற்போது பண்டிதர் பூபாலபிள்ளை வீதி) தென்புறமாக வளைந்து பழைய கல்முனை வீதியாக நீண்டு பாணமை வரை செல்கிறது. பாணமை தொடக்கம் நாவலடி வரை ஒரே தொகுதியாயிருந்ததால், அரச செயற்பாடுகளுக்கும், மற்றும் தேவைகளுக்கும், மக்கள் வரவேண்டிய பட்டணமாக புளியந்தீவு இருந்தது. (பாராளுமன்றம் வருமுன் இத்தொகுதிக்கு நம் ஊரவரான தருமரெத்தினம் சட்ட நிபுண உறுப்பினராக 1948 வரை இருந்தார்) (Member Legis latie council. M.L.C) இத்தொகுதி மக்கள் கல்லடித்துறையூடாக புளியந்தீவுக்குச் செல்ல வேண்டும். கல்லடித் துறைச் சூழல் பரபரப்பான வியாபாரத் தலமாக இருந்தது. துறை வீதியும் பழைய கல்முனை வீதியும் சேரும் வளைவிருந்த வளவில்தான் சிறியதாக கல்லடிப் பிள்ளையார் கோயில் உருவாகியிருக்கும். கல்லடி உப்போடைக் கோயிலும் 196 ஆண்டுகளுக்கு முன் சிறிய மடாலயமாக ஆரம்பமானது.

இவ்விரு ஆலயங்களின் பரிபாலனத்திலும் முன்குறிப்பிட்ட பெரியோர்கள் பலர் இருந்து இன்றைய நிலைக்குக் கொண்டு வந்துள்ளனர். கல்லடிக் கோயில் கொடித்தம்ப மண்டபமும், மணித்துணும் 1910ம் ஆண்டு தொடங்கிய புனருத் தாரணத்தின் போது கட்டப்பட்டன. மூலஸ்தானமும் மற்றும் மண்டபங்களும் எப்போ கட்டப்பட்டன என்பது தெரியவில்லை. சிறு சொடிவுகளுள் இரு பிள்ளையார் விக்கிரகங்கள் பாதுகாப்பாக கோயில் பெட்டகத்துள் உள்ளன. இடமாற்றப்பட்டு கும்பாபிஷேகம் நடத்தியிருக்கலாம். தற்போதுள்ள விக்கிரகம் குமாரவேல் தலைமையில் 1917ம் ஆண்டு கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது. கல்லடி உப்போடைக் கோயிலும் 1824இல் தொடங்கப்பட்டாலும் 1918-1926 வரை தேவையான மண்டபங்கள் மற்றும் நடராஜர், வயிரவர் நவக்கிரக கோயில்களும் கட்டப்பெற்று கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது.

இவ்வாலயங்களின் அன்றைய பரிபாலன சபையை நோக்கும் போது இரு பரிபாலனங்களிலும் இடம்பெற்றவர்கள் உள்ளனர். தோ.கு.சபாபதிப்பிள்ளை உடையார், நொத்தாரிஸ் க.நல்லதம்பி, காசிநாதர் அருளம்பலம், நொத்தாரிஸ் சீ.செல்லத்துரை போன்றோரும் பிற்காலத்தில் அ.க.கணபதிப்பிள்ளை, சோ.சோதிலிங்கம், விசுப்பிரமணியம், வே.கிருபைரெத்தினம், S.ராஜ்மோகன் போன்றோரும் இரு பரிபாலன சபையிலும் இருந்துள்ளனர்.

இந்த இரு ஆலயங்களும் ஒன்றை ஒன்று அனுசரித்து நடக்கின்றன. உற்சவ காலங்களிலும், விசேஷ பூஜைகளிலும் ஒத்துழைப்பதைக் காணலாம். சூரன் ஊர்வலம், பேச்சியம்மன் தெய்வங்களின் ஊர்வலம், பலிச் சடங்குக்கான ஊர்வலம் ஆகிய தருணங்களில் கல்லடி ஆலயங்களுக்கு வந்து செல்கின்றனர். வேலாயுதசுவாமி கோயிலில் இருந்து புறப்பட்டு கிராமப் பிரதட்சணமாக மஞ்சந்தொடுவாய் வரை சென்று திரும்பி வந்து தீர்த்தத்துக்குச் செல்லும். இன்னும் பஞ்சாங்கத்தில் வேலாயுத சுவாமி திருவிழா பற்றிக் குறிப்பிடும் போது இக்கிராமப் பிரதட்சணம் குறிக்கப்படுகின்றது. இப்போது இது நடைபெறுவதில்லை. வேலாயுத சுவாமி கோயிலில் கந்தசஷ்டி விரதம் முடித்து திருக் கல்யாண தினத்தில் வேலாயுதர் மாப்பிள்ளை பாவனையில் தாலி கூறையுடன் உப்போடைக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயிலுக்குச் செல்வார். அக்கோயில் பெண் (தெய்வானை) பகுதியான பாவனையில் திருக்கல்யாண பூசை நடைபெறும். அதன் பின் கொடியை வேலாயுத சுவாமி கோயிலுக்கு கொண்டு வருவார்கள் கடைசியாக (அண்ண ளவாக 90 வருடங்களுக்கு முன்) நடந்த திருக்கல்யாண பூசைக்குப் பின் கொடி வேலாயுத சுவாமி கோயிலுக்குக் கொண்டு வரப்படவில்லை. முன்னாள் முகாமையாளர் அமரர்.க.உ.வே. கதிர்காமத்தம்பி சிவக்கொழுந்து போஸ்ட் மாஸ்ரர். இன்றும் அந்த தங்கக்கொடி பாதுகாப்பாக உப்போடைக் கோயிலில் உள்ள தாகக் கூறினார். இந்த விடயமும் பலர் அறிந்ததுதான். மாசி மகம், மகா மகம் மகோதய தீர்த்தத்துக்கு, மஞ்சந்தொடுவாய், நாவற்குடா, கல்லடி உப்போடை, கல்லடி ஆகிய ஆலய மூர்த்திகள் ஒன்றுகூடி தீர்த்தமாட கல்லடிக் கடற்கரைக்குச் செல்லும் போது கல்லடி பிள்ளையாரை மூத்த பிள்ளையாரென மதித்து முன்னுக்கு செல்ல விடுவார்கள்.

இந்த இரு கோயில் பரிபாலன சபையில் இரு ஊரவரும் பரஸ்பரம் பங்கு பற்றுவது போலத் திருமணப் பந்தத்திலும் இரு ஊரவர்களும் இணைந்துள்ளனர்.

**கல்லடி**

- தோ.கு.சபாபதிப்பிள்ளை உடையார்
- நொத்தாரிஸ் சீனித்தம்பி செல்லத்துரை (காப்புக்கார செல்லையா)
- நொ.க.நல்லதம்பி
- ஆசிரியர் சி.கந்தப்பன்
- டாக்டர் வேலுப்பிள்ளை அழகரெட்ணம்
- கூட்டுப்பிரார்த்தனை புகழ் வீ.கிருஷ்ணப்பிள்ளை
- வேலுப்பிள்ளை அழகம்மா
- நொ.க.நல்லதம்பியின் மருமகளான ந.இராரெட்ணம்
- நொ.க.நல்லதம்பியின் மருமகள் ந.செல்வரெட்ணம்
- நொ.க.நல்லதம்பியின் மருமகள் ந.தங்கரெட்ணம்
- சாமித்தம்பி பாக்கியம்
- செ.இராஜரெட்ணம் ஸ்ரீ ரஞ்சனி
- சோ. லெட்சுமி
- சங்கரப்பிள்ளை திலகவதி
- பண்டிதர் பூ.தெய்வநாயகி
- சங்கரப்பிள்ளை வள்ளியம்மை
- கதிர்காமத்தம்பி வாசுகி

**கல்லடி உப்போடை**

தங்கம்மா
தோ.கு.ச.திருமஞ்சனப்பிள்ளை

க.உ.வேலுப்பிள்ளை சகோதரி
முனியம்மாள் (மாணிக்கபதி வீதி)
க.உ.வே. சீவரத்தினம்
வே.மகேஸ்வரி
தோ.த.ச. குமரையா
க.த.செல்லத்துரை
கந்தப்பன் சி.சோமசுந்தரம்
தோ.சி. செல்லத்துரை
தோ.கு.ச.சீரங்கப்பிள்ளை மகன் சேனாபதிராஜா
வே.பாலஸ்கந்தா
வேலுப்பிள்ளை சங்கரப்பிள்ளை
க.உ.வே.நமசிவாயம் ஹரிதாஸ்
நடராசா அருள்சோதி
க.உ.வே.நமசிவாயம் கணேசாநந்தன்
இராஜசிங்கம் தனபாலன்

**உசாத்துணை நூல்கள்:**

01. கும்பாபிஷேக மலர்கள் - கல்லடி - 1995, 2015
02. சுவாமி விபுலாநந்தர் நூற்றாண்டு விழா மலர்
03. நினைவு மலர்கள்
04. மற்றும் நினைவில் நின்றவை.

**சோ.சிவலிங்கம்** B.Sc
Dip in Ed. T.E.S.L - S.L.E.A.S
முன்னாள் உதவிக்கல்விப்பணிப்பாளர் (விஞ்ஞானம்)
முன்னாள் வருகை தருவிரிவுரையார்
கிழக்குப் பல்கலைக்கழகம்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இந்துக்களின்
# திருமணச் சடங்குத் தத்துவம்

"**தி**ரு" என்பது தெய்வத்தன்மை எனவும், "மணம்" என்பது இணைதல் எனவும் பொருள்பட திருமணம் என்பது "மேன்மையான தெய்வீகம் வாய்ந்த இணைதல்" எனப்படுகிறது. அதாவது இரு மனங்களின் இணைவு எனவும் கூறலாம்.

இந்துக்களின் திருமணச் சடங்குகளின் ஆரம்பமாக இரு வீட்டாரும் ஜாதகப் பொருத்தத்தை ஆராய்வார்கள். தமிழ் நாட்டில் பெண் பார்க்கும் படலம் போன்று இலங்கையிலும் பெண்ணை பொது இடங்களில் பார்ப்பது வழக்கமாக உள்ளது. பின் நிச்சயதார்த்தத்தை உறுதி செய்ய பெண் வீட்டார் தாம்பூலம், பலகாரம், பழங்களோடும் உறவினரோடும் மணமகன் வீட்டிற்கு நல்ல நாள் பார்த்துச் செல்வர். இதன் பின் இரு வீட்டாரும் திருமணநாளை ஜோதிடரிடம் கேட்டு நிச்சயிப்பர் அத்தோடு தாலிக்கான பொன்னுருக்குதலுக்கும் ஒரு நாளை நிச்சயிப்பர்.

தமிழர்களின் இந்து திருமணம் ஆகம மரபு சடங்குகளுடன் சில சிறப்பு அம்சங்களையும் தழுவி நடைபெறுகின்ற இந்நிகழ்வுகளை சமய குருக்கள் சமய முறைப்படி நல்லோர்கள் முன்னிலையில் இறை ஆசியுடன் நடாத்தி வைக்கின்றனர். திருமண நிகழ்வில் முக்கியமான நிகழ்ச்சி சுப வேளையில் தாலி கட்டுதல் ஆகும். இதனை "மாங்கல்ய தாரணம்" எனக் கூறுவர். தாலி கட்டியதும் அப்பெண் "சுமங்கலி" அதாவது "திருமணமானவள்" என்ற தகுதியைப் பெறுகின்றாள்.

**01. பொன்னுருக்கல்**

இதில் மணப்பெண்ணைத் தவிர்த்து பெண்ணின் உறவினர்கள் மற்றும் நண்பர்கள் கலந்து கொள்வர். பெண் வீட்டார் ஒரு இனிப்புப்பண்டம் (மோதிரக் கொழுக்கட்டை) கொண்டு செல்லல் சம்பிரதாயமாகும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 02. கன்னிக்கால் (பந்தற்கால்) ஊன்றுதல்

இதே நாள் பெண்வீட்டிலும் மணமகன் வீட்டிலும் தனித்தனியே அவர்களது வளவில் ஈசான (வட கிழக்கு) மூலையில் முகூர்த்தக்கால் அல்லது கன்னிக்கால் ஊன்ற வேண்டும். அதற்காக கல்யாண முருங்கை மரத்தில் ஒருதடியை வெட்டி அதன்மேல் நுனியில் ஐந்து மாவிலைகளை மஞ்சள் பூசிய கயிற்றால் கட்டிவிட வேண்டும். அதனடியில் நவதானியத் தோடு பவளம் அல்லது நவமணிகள் இட்டு பாலூற்றி மூன்று சுமங்கலிப் பெண்களின் கரங்களினால் அம்மரத்திற்கு குங்குமம் சாத்த வேண்டும். இது நன்கு வளரவேண்டும் என்பதற்காகக் கும்ப நீரை ஊற்றலாம்.

மஞ்சளில் பிள்ளையார் பிடித்து வெற்றிலை பழம் வைத்து தேங்காய் உடைத்து தீபம் காட்டி பந்தற்கால் ஊன்றுவார்கள். பந்தற்காலை தொடர்ந்து பந்தல் அமைக்கும் வேலை தொடங்கும். மணமகன் வீட்டில் பந்தற்கால்ஊன்றியபின் மணமகள் வீட்டிற்கும் செல்ல வேண்டும். முகூர்த்த கால் ஊன்றிய பின் இருவீட்டாரும் திருமண சடங்குகள் முற்றாக முடிவடையும் வரை எந்த விதமான அமங்கல(துக்க) நிகழ்வுகளிலும் பங்கு பற்றல் கூடாது. பந்தற் கால் ஊன்றுபவர்களுக்கு தட்சணை கொடுத்தல் மரபாகும்.

## 03. முளைப்பாலிகை போடல்

பெண்வீட்டில் மூன்று அல்லது ஐந்து மண்சட்டிகளில் மண் நிரப்பி நீர் ஊற்றி பாலில் ஊற வைத்த நவதானியங்களை மூன்று அல்லது ஐந்து சுமங்கலிப் பெண்கள் அச்சட்டிகளில் தூவி நீரும் பாலும் மூன்று முறை தெளிக்க வேண்டும். இவற்றை சாமி அறைக்குள் வைத்து திருமணத்தன்று மணவறைக்கு கொண்டு போதல் வேண்டும். அனேகமாக இந்நிகழ்வை பொன்னுருக்கல் அன்று செய்வார்கள். இதை மூன்று நாட்களுக்கு முன்னதாவது செய்தால் நவதானியங்கள் நன்றாக வளர்ந்து நிற்கும். முளைப்பாலிகை இடுவதன் நோக்கம் திருமணம் செய்யும் மணமக்களும் அவர்களது குடும்பமும் முளை விட்டு பல்கிப் பெருகி வாழ வேண்டும் என்பதே ஆகும். "விரிந்த பாலிகை முளைக்கும் நிரையும்" என்கிறது சிலப்பதிகாரம். இந்த பாலிகையை திருமணத் திற்குப்பின் நதியிலே சேர்த்து விடலாம்.

நவதானியங்கள் ஆவன நெல், கோதுமை, பயறு, துவரை, மொச்சை, எள், கொள்ளு, உழுந்து, கடலை என்பனவாகும்.

## 04. பந்தல் அமைத்தல்

முகடுடைய பந்தல் அமைக்கும் பழக்கம் அக்காலத்தில் நடைமுறையில் இருந்து வந்துள்ளது. பந்தலின் உட்பகுதியில் மேலுக்கு துணிகளைக் கட்டுவார்கள். அழகுக்காகவும் திருமண சடங்குகள் நடக்கும் பொழுது பந்தலின் மேலிருந்து தூசி, அழுக்குப் பொருட்கள் பல்லி போன்றன விழுந்து விடாமல் இருப்பதற்காகவும் இந்த ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. பந்தலை கமுகு, வாழை, தென்னை ஓலைகளால் அலங்கரிப்பர்.

## 05. மணமகன் அழைப்பு

திருமணத்தன்று மணமகனை கிழக்கு முகமாக ஓர் பலகையில் இருத்தி அவரின் கைகளில் வெற்றிலையைச் சுருட்டி அதற்குள் சில்லறைக் காசுகள் வைத்துக் கொடுக்க வேண்டும். அவருக்கு முன்னால் நிறைகுடம், குத்துவிளக்கு, தாம்பூலம் வைக்க வேண்டும். மூன்று, ஐந்து, ஏழு என்ற எண்ணிக்கையில் ஆண்களும், பெண்களும் அறுகும், காசும், பாலும் கொண்ட கலவையை மணமகனின் தலையில் மூன்று முறை வைத்து ஆசீர்வதிக்க வேண்டும். மணமகனின் தலையில் ஓர் வெள்ளைத்துண்டை விரித்து தாய் மாமன் தேங்காய் உடைக்க வேண்டும். பால் வைத்ததும் மணமகன் போய் குளித்து விட்டு வரவேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண் வீட்டாரும் இதில் கலந்து கொள்வார்கள். மணமகன் சாமி அறையில் கற்பூரம் காட்டி சாமி கும்பிட்டு, தாய் தந்தையாரை விழுந்து வணங்க வேண்டும். பெண் வீட்டார் மணமகன் வீட்டிற்கு வரும் போது ஒரு தட்டில் வாழைப் பழம், ஒரு தட்டில் பலகாரம், இன்னொரு தட்டில் பூ எல்லாமாக மூன்று தட்டங்களுடன் வரவேண்டும். எல்லோருக்கும் விருந்தோம்பல் நடைபெறும்.

### 06. கடுக்கண் பூணல்

முந் நாளில் கடுக்கண் பூணல் என்ற சடங்கும் நடைபெற்றது. அது இப்போது அருகி விட்டது. கிழக்குமுகமாக அலங்கரிக்கப் பட்ட இடத்தில் விநாயகர் வழிபாடு செய்து தேங்காய் உடைத்து மணமகனுக்கு கடுக்கண் பூட்டும் வைபவம் செய்யலாம்.

### 07. தலைப்பாகை வைத்தல்

மணமகன் கிழக்கு நோக்கி நிற்க மாப்பிள்ளை தோழனைக் கொண்டு தலைப் பாகை வைக்கவேண்டும். மாப்பிள்ளை உத்தரியம் அணிய வேண்டும். உத்தரியம் இடும் போது இடத்தோளின் மேலாக வந்து வலப்பக்கமாக இடுப்பளவில் கட்ட வேண்டும். (அந்தணர் பூணூல் அணிவது போல). அத்தோடு மாப்பிள்ளைக்கு தலைப்பாகை அணிவிப்பர். தோழனும் இதேபோல் உடையுடுத்தி தலைப்பாகையும் உத்தரியமும் இட்டு மணமகனை அழைத்து வருவார். தோழன் மணமகனின் இடப்பக்கமாக நிற்பார்.

### 08. மணமகன் புறப்படுதல்

வீட்டை விட்டுப் புறப்படும் முன் வாசலில் இரு சுமங்கலிப் பெண்கள் ஆராத்தி எடுப்பார்கள். மாப்பிள்ளையோடு தோழி (மாப்பிள்ளையின் திருமணமான சகோதரியான, திருமணச் சடங்கின் நடைமுறைகளை நன்கு தெரிந்த சுமங்கலிப் பெண்ணையே அமர்த்த வேண்டும்.) தோழன் பெண்ணின் சகோதரன் அல்லது உறவுமுறையில் உள்ள ஆண் அனேகமாக திருமணமாகாதவராக இருக்க வேண்டும். அவருடன் உற்றார், உறவினர்கள் திருமண மண்டபத்திற்குச் செல்வர். செல்லும் போது தோழி கூறைத்தட்டும் வேறு இரு பெண்கள் மூன்று தேங்காய் வைத்த தட்டும், ஐந்து பலகாரங்கள் கொண்ட தட்டும் எல்லாமாக மூன்று அல்லது ஐந்து தட்டுகள் என்ற ஒற்றைப்படை தட்டுக்களைக் கொண்டு செல்ல வேண்டும். பொதுவாக அலங்கரிக்கப் பட்ட வாகனத்தில் செல்வர்.

### 09. பெண் புறப்படுதல்

பெண் வீட்டில் பெண்ணிற்கு அறுகு, காசு, பால் என்பவற்றை தலையில் வைத்து நீராட்டி (ருது சாந்தி செய்யாத பெண்ணானால் அன்று அல்லது முந்தைய நாளில் ருது சாந்தி செய்ய வேண்டும்) மணப்பெண்ணை அலங் கரித்து மண்டபத்திற்கு அழைத்துச் செல்ல வேண்டும். மணப்பெண்ணோடு ஒரு தட்டில் கோயிலில் அர்ச்சனை செய்யத் தேவையான பொருட்களை அடுக்கி எடுத்துச் செல்ல வேண்டும். மண்டபத்தில் பெண் அவருக் கென்று கொடுக்கப்பட்ட அறையில் இருக்க வேண்டும்.

### 10. மாப்பிள்ளை அழைப்பு

மாப்பிள்ளை மண்டபத்திற்கு வந்தவுடன் அவரைப் பெண்வீட்டார் மேளதாளத்தோடு வரவேற்பர். அங்கு தோழன் மாப்பிள்ளையின் காலைக் கழுவி விடுவார். அதற்கு உபகாரமாக மாப்பிள்ளை தோழனுக்கு மோதிரம் அணிவிப்பார். பின் பெண்ணின் தகப்பன், மாப்பிள்ளைக்கு மாலை சூடி வரவேற்பார். இரு சுமங்கலி பெண்கள் ஆரத்தி எடுப்பர். பின் தோழன் மாப்பிள்ளையின் கை கோர்த்து அவரை வலமாக மணவறைக்கு அழைத்து செல்வார் (கும்பத்திற்கு வலப்பக்கம்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 11. அரசாணிக்கல்

முற்காலத்தில் திருமண வைபவங் களுக்கு அரசனுக்கும் அழைப்பிதழ் அனுப்பு வார்கள். அரசனுக்கும் எல்லா திருமணங் களுக்கும் செல்ல முடியாத நிலை இருக்கும். எனவே அவர் தனது ஆணைக்கோலை அனுப்பி வைப்பார். அரசு ஆணைக்கோலை மருவி அரசாணைக்கல் ஆகிவிட்டது. இன்று பதிவுத் திருமணம் போல் அன்று ஆணைக்கோல் வந்துவிட்டால் திருமணம் அரசனால் அங்கீகரிக்கப்பட்டது. என்றாகும். ஆகவே அத்திருமணம் அங்கீகாரம் பெற்று விடுகிறது. இதுவே இன்று திருமண மண்டபத்தில் கலியாண முருங்கை மரக்கிளை ஒன்றை வைத்து அதற்கு பட்டுச்சாத்தி அலங்கரித்து வைப்பர்.

## 12. அங்குரார்ப்பணம்

வித்திடுதல் என்று அர்த்தம். அதாவது முளைக்கும் விதைகளை பாலிகையிடல் என்பது சந்திர கும்பத்தை பூசித்து அதற்கு முன்பாக இருக்கும் மண்சட்டியில் மூன்று அல்லது ஐந்து சுமங்கலிப் பெண்களைக் கொண்டு நவதானியமிட்டு தண்ணீர் தெளித்து, புஸ்பம் சாத்தி பூசைகள் செய்வதானது. நவதானியம் செலுத்தி வளர்வது போல இத்தம்பதிகளின் வாழ்வும் செழிப்புடையதாக அமைய வேண்டும் என்பதற்காக இப்பூசை செய்யப்படுகிறது. அப்பெண்களுக்கு வெற்றி லையில் பூ வைத்து உபசாரம் செய்து அனுப்பு வார்கள். அதன் பின் கற்பூரம் காட்டப்படும். (முன்பே பாலிகை போட்டிருந்தால் தண்ணீர் மட்டும் தெளித்தால் போதுமானது.)

## 13. இரட்சாபந்தனம் (காப்புகட்டல்)

தொடங்கிய கர்மம் நிறைவேறும் வரை எந்த வித தீட்டுக்களோ, இடையூறுகளோ, தாக்கங்களோ மணமக்களை சாராதிருக்க வேண்டி பாதுகாப்புக் கருதி செய்யப் படுவதாகும். (காலமிருத்து, அவமிருத்து போன்ற அபாயங்களில் இருந்து காப்பாற்றவும்) சர்வரோகம் அணுகாமலும், பீடை பிணி அணுகாமலும் இருக்க வேண்டி விவாகச் சடங்குகள் இனிதே நடைபெறவும் கட்டப்படும் நூல் காப்புகட்டுதல் ஆகும்.

இதற்கு ஓர் தாம்பாளத்தில் அரிசி பரப்பி வைத்து பூசித்து மாப்பிள்ளையின் வலது மணிக்கட்டில் காப்புக் கட்டும் போது மாப்பிள்ளை வீட்டார் தேங்காய் உடைப்பார் கள். பின்னர் குருக்கள் சிவன், பார்வதி முதலிய வர்களை மந்திர உச்சாடனத்துடன் பூசை செய்வார். பின்னர் அக்கினி மூட்டப்பட அதற் குரிய பூசை வழிபாடுகள் நடைபெறும். முகூர்த்த தோஷம் போன்ற தோஷங்கள் நீக்கும் பொருட்டும் இத்திருமணத்தின் போது நல்லருள் புரிய வேண்டுமென நவக்கிரக தேவர்களுக்காக அமைக்கப்பட்டுள்ள கும்பங் களிற்கும் பூசை செய்வார்கள். அதன் பின் அரசாணி மரத்திற்கும் அதன் நாலுபக்கங்க ளிலும் உள்ள கும்பங்களிற்கும் பூசை செய்வார்கள்.

## 14. மணமகளை அழைத்தல்

மணமகளைப் பட்டாடை , அணிகலன், பூண்டு முகத்தை மெல்லிய திரையால் மறைத்த வண்ணம் தோழி , மணமகனின் சுற்றத்தவர், உறவினர் புடை சூழ மணமேடைக்கு அழைத்து வருவார். மணமகனிற்கு வலது பக்கத்தில் பெண்ணை அமரச் செய்வர். மணமகனிற்கு செய்யப்பட்ட அத்தனை பூசைகளும் இவருக்கும் செய்யப்படும். பவித்திரம் இடது கை மோதிர விரலில் அணிவித்து இரட்சா பந்தனம் இடக்கை மணிக்கட்டில் கட்டப்படும். பெண் வீட்டார் ஒருவர் தேங்காய் உடைப்பார். பின்னர் இருவரின் பெற்றாரை அழைத்து மணமகளின் பெற்றோர்கள் பெண்ணின் வலப்பக்கத்திலும், மணமகனின் பெற்றோர் மணமகனின் இடப்பக்கத்திலும் கிழக்கு நோக்கி அமர்வர். இவர்களுக்கும் குருக்கள் பவித்திரம் , திருநீரு கொடுத்து சங்கல்பம்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

செய்வித்து இரு வழியிலும் பிதிர்தோஷம் நீங்கவும் இரண்டு தானம் கொடுத்து பிதிர்களின் ஆசி பெற்று செய்வார். பின் கன்னிகாதான கிரியைகளை குருக்கள் ஆரம்பிப்பார்.

**15. கன்னிகாதானம்**

மணமகளை அவரின் பெற்றோர் தாரை வார்த்துக் கொடுப்பதை கன்னிகாதானம் என்பர். மணமக்களின் பெற்றோர் இருபகுதியினரும் சங்கற்பம் செய்து பெண்ணின் பெற்றோர் மணமகனின் பெற்றோருக்கும் , மணமகனின் பெற்றோர் பெண்ணின் பெற்றோருக்கும் திலகம் இட்டு பன்னீர் தெளித்து மரியாதை செய்வர்.

பின் பெண்ணின் வலக்கரத்தில் வெற்றிலை, பாக்கு, பழம், எலுமிச்சம்பழம், தங்கக்காசு அல்லது நடைமுறை நாணயம் ஒன்றை கையில் கொடுத்து பெண்ணின் தந்தை இடது கை கீழாகவும் வலது கை மேலாகவும் சேர்த்து பிடித்து குருக்கள் மண மகளின் மூன்று தலைமுறை பெயர்களையும் மணமக்களின் பெயர்களையும் உரிய மந்திரத்துடன் மூன்று முறைகள் சொல்ல இரு வம்சம் தழைக்கவும் அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய பயன்களையும் பெற வேண்டியும் கன்னிகாதானம் செய்து தருகின்றேன் , எல்லா வித செல்வமும் பெற்று எனது மகளைக் காப்பாற்ற வேண்டும் என்று வேண்டிக் கொள்வார். மணமகனின் சம்மதம் பெற்றவுடன் மணமகளின் தாயார் நீர் விட்டு தாரை வார்க்க தந்தையார் மணமகனின் கரங்களில் ஒப்படைப்பார். அப்போது மங்கல வாத்தியம், முழங்க பெண்வீட்டார் ஒருவர் தேங்காய் உடைக்க மணமகன் கொண்டு வந்த தாலியோடு கூடிய கூறைத் தட்டை விதிப்படி பூசித்து, ஆசிர்வதித்து அக்கினியாற் சுத்தி செய்த பின் அச்சபையில் உள்ள பெரியோர்களிடம் (நல்லோர்களிடம்) காட்டி நல்லாசி பெறப்படும்.

பின் மணமகன் மணமகளிடம் கூறையை கொடுப்பார். மணமகளும் தோழியுடன் சென்று கூறையுடுத்தி மீண்டும் மணவறைக்கு அழைத்து வரப்படுவார். இதற்கிடையில் குருக்கள் மாங்கல்யத்தை எடுத்து சுத்தி செய்து மந்திரம் சொல்லி சந்தனம் , குங்குமம் சாத்தி தீபம் காட்டி சம்பாத ஹோமம் செய்து பூசை செய்வார். (சம்பாத ஹோமம் - சிறுவத்தில் நெய் எடுத்து ஆகுதி செய்து மிகுதி நெய்யை தாலியில் விடுதல்.) மணவறையை சுற்றி நிற்பவர்களுக்கு அட்சதையும் மலர்களும் கொடுக்கப்படும்.

**16. தாலி கட்டுதல்**

கூறையுடுத்தி வந்த மணமகள் மீண்டும் மணமகனின் வலப்புறத்தில் கிழக்கு நோக்கி அமர்வார். குறித்த சுப முகூர்த்தத்தில் மணமகன் எழுந்து மணமகளின் வலப்புறம் சென்று வடக்கு நோக்கி நின்று இறைவனை தியானித்து, குருக்கள் ஆசீர்வதித்து கொடுக்கும் மாங்கல்யத்தை இரு கரங்களால் பற்றி கெட்டி மேளம் முழங்க வேதியர் வேதம் ஓத மாப்பிள்ளை வீட்டார் ஒருவர் தேங்காய் உடைக்க பெரியோர் அட்சதை மலர்கள் தூவ, ஒரு பெண் பின்னால் தீபம் பிடிக்க மணமகன் கிழக்கு திசை நோக்கிய மணப்பெண்ணின் கழுத்தில் திருமாங்கல்யம் பூட்டுவார்.

தாலி கட்டும் போது சொல்லப்படும் மந்திரம் "மாங்கல்யம் தந்துநாநேந மம ஜீவனஹேதுநா கண்டே பத்தாமிஸுபகே ஸஞ்ஜிவசரதசதம்" "ஓம் பாக்கியவதியே யான் சிரஞ்சீவியாக இருப்பதற்கு காரணமாக மாங்கல்யத்தை உன் கழுத்தில் கட்டுகிறேன். நீயும் நூற்றாண்டு வாழ்வாயாக"

என்று குருக்கள் கூறும் மந்திரத்தை மனதில் கொண்டு தாலி முடிச்சில் திருநீறு இட்டபின் தனது இடத்தில் அமர வேண்டும். மாப்பிள்ளை மணமகளின் உச்சந்தலையில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குங்குமத்தில் திலகமிட வேண்டும். தாலியில் சிவலிங்கம் , விநாயகர் , அல்லது இலட்சுமியின் திருவுருவம் அமைத்தல் நல்லது. கொடியும், தாலியும் அதனருகில் கோர்த்திருக்கும் இரு தங்க நாணயங்களும் சேர்த்து ஒற்றையெண் வரக்கூடிய அளவு பவுனில் தாலிக் கொடியைச் செய்ய வேண்டும். தாலி கொடியில் சேர்க்கப் படும் தங்க நாணயம் ஆங்கில நாணயமாக இருக்க வேண்டும் என்ற நியதி இல்லை. அந்த நாணயத்தில் கடவுளின் உருவங்களை விருப்பத்திற்கேற்ப அமைக்கலாம்.

**17. மாலை மாற்றுதல்.**

மணமகள் எழுந்து வடக்கு நோக்கி இறைவனை தியானித்து மணமகன் கழுத்தில் மாலை சூட்டுவாள். மணமகன் மணமகளை தன் இடப்பக்கத்தில் அமர செய்து மாலை சூட்டுவான். மாலை மாற்றுதலின் பொருள் இருமனம் கலந்து ஒரு மனமாகி இல்லறவாழ்க் கையை ஆரம்பித்தல் என்பதாகும். மூன்று முறை மாலை மாற்ற வேண்டும். அதனைத் தொடர்ந்து, கொண்டு வந்த மங்கலப் பொருட் களாகிய மஞ்சள் , குங்குமம் , பூ , வாசனைப் பொருட்கள், சீப்பு, கண்ணாடி முதலியவற்றை மணமகன் மணமகளிடம் கொடுப்பார். கணவன் மனைவியாக ஆன பின் தம் மங்கல கோலத்தை இருவரும் கண்ணாடியில் பார்த்து மகிழ்வார்கள்.

**18. பால், பழம் கொடுத்தல்**

பால், வாழைப்பழம் கலந்து மணமகள் முதலில் மணமகனுக்கு மூன்று முறை கொடுப்பார். பின் மணமகன் மணமகளுக்கு மூன்று முறை கொடுப்பார். நாயகன் நாயகி உணவு கொள்ளல் மறைவில் செய்ய வேண்டும் என்பதால் திரையொன்று முன்னால் பிடிக்கப்படும். முதன்முதலில் தம்பதிகளுக்கு இனிப்பு பதார்த்தமே கொடுக்கப்படும். வாழ்க்கை இனிமையாக இருக்க வேண்டும் என்பதை உணர்த்தவே இச்சடங்கு இடம் பெறுகிறது.

**19. கோ தரிசனம்**

இல்லறவாழ்வு தொடங்கும் தம்பதி யினர் வாழ்விற்கு வேண்டிய அட்ட ஐஸ்வரி யங்களையும் வேண்டி பசுவை இலட்சுமி தேவியாக வணங்குவர். பசுவை கிழக்கு முகமாக நிறுத்தி சந்தனம் , குங்குமம், புஸ்பம் சாத்தி தீபாராதனை செய்து வணங்குவர். பசுவின் உடலெங்கும் உறைகின்ற சகல தேவர்கள், முனிவர்கள், தெய்வங்கள் ஆசீர் வாதமும் இதன் மூலம் கிடைக்கும். அத்தோடு அரிசி, காய்கறி, தட்சிணை வைத்து தானமும் வழங்குவர்.

**20. பாணிக்கிரகணம் (கைப்பிடித்தல்)**

தர்மம் செய்வதற்காகவும் சந்ததி விருத்திக்காகவும் திருமணம் செய்யப்படுகிறது. பாணிக்கிரகணம் என்றால் மணமகளின் கையை மணமகன் பிடிப்பது என்று பொருள் "நீயும் நானும் முதுமையடைந்து விட்டாலும் கூட ஒருவரையொருவர் பிரியாதிருப்போம் என்று இன்று உன் கை பிடிக்கிறேன்" என்று கூறி மணமகளின் கையைப் பிடிக்க வேண்டும். ஆணின் வலக்கை பெண்ணின் வலக்கையை பிடித்தல் வேண்டும். பின்னர் ஏழடி வைத்து அம்மி மிதித்து அக்கினியை வலம் வருவார் கள். இது பஞ்ச பூதங்களின் சாட்சியாகக் கையைப் பிடிப்பதாக காணப்படுகின்றது. மணப்பெண் ஐம்புலன்களால் செய்யும் செயல்கள் கணவனுக்கு மட்டுமே உரியவை.

**21. கணையாழி எடுத்தல்**

மூன்றுமுறை அக்கினியை வலம் வரும் போது கிழக்கு பக்கத்தில் வைத்திருக்கும் மஞ்சள் நீர் நிறைந்த பாத்திரத்தில் இருக்கும் கணையாழியை தேடியெடுக்க வேண்டும். இது மூன்று முறை நடைபெறும். இருவரும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து கணையாழியை எடுத்தல் வேண்டும். இது தம் வாழ்க்கையிலும் விட்டுகொடுத்து வாழ வேண்டும் என்பதை எடுத்துக்காட்டுகிறது.

**22. அருந்ததி பார்த்தல்**

மூன்றாம் சுற்றில் அருந்ததி பார்த்தல் இடம்பெறும். இருவரையும் கூட்டிக்கொண்டு மண்டபத்தின் வடக்கு வாசலுக்கு வந்து வானத்திலிருக்கும் நட்சத்திரங்களுக்கு பூசை செய்து அருந்ததியை காண்பிப்பர். இது நிரந்தர கற்பு நட்சத்திரமாக நான் மின்னுவேன் என்று ஆணையிடுவதாகும். சப்தரிஷிகள் கிருத்திகை என்ற பெயர் கொண்ட தங்கள் மனைவிக்குள்ளே முதலானவளான அருந்ததியை எப்படி நிலைத்திருக்கச் செய்தார்களோ அப்படி மற்றைய ஆறு கிருத்திகைகளும் அருந்ததியை போல் இருக்கச் செய்தனர். இந்த அருந்ததியை தரிசனம் செய்தால் என்னுடைய மனைவி எட்டாவதாக வளர்ச்சி பெறட்டும் என்பது கணவர்களின் நம்பிக்கையாகும். இந்த நட்சத்திரத்தை காட்டுவது நல்வாழ்க்கையையும் வளத்தையும் பெறுவதற்கே ஆகும்.

**23. பொரியிடல்**

அக்கினியை மூன்று முறை வலம் வர வேண்டும். ஒவ்வொரு முறையும் வலம் வந்து மணமக்கள் கிழக்கு நோக்கி நிற்க தோழன் நெற் பொரியை குருக்களிடம் இருந்து பெற்று மணமகனின் கையில் கொடுக்க மணமகன் மணமகளின் கையில் கொடுத்து மணமகளின் கைகளை தன் கையால் தாங்கி ஓம குண்டத்தில் இடுவர். அக்கினி பகவானே சகல செல்வங்களையும் எமக்கு தந்தருள வேண்டும் என வேண்டிக் கொண்டு பொரியிடுதல் வேண்டும். நெல் பொரியாக மலர்வது போல் நம் வாழ்வு மலர வேண்டும் என்பதே தத்துவம்.மூன்றாம் முறை சுற்றி வந்தவுடன் பூர்ணாகுதிக்குரிய பொருட்களை தட்டில் வைத்து குருக்கள் மணமக்களுக்கு கொடுக்க இருவரும் சேர்ந்து குண்டத்தில் சொரிதல் வேண்டும்.

**24. ஆசிர்வாதம்**

மணமக்களை கிழக்கு முகமாக நிற்க வைத்து குருக்கள் பிரார்த்தனை செய்து மந்திரத்துடன் சொல்லி மணமக்களுக்கு சிரசில் அட்சதையிட்டு ஆசீர்வதிப்பார். தொடர்ந்து மணமக்களின் பெற்றோர், சபையோர் ஆசீர்வதிப்பர்.

**25. அட்சதை**

முனை முறியாத பச்சையரிசி, அறுகம்புல் , மஞ்சள்மா கலந்த கலவையே அறுகரிசி என்பார்கள். பெரியோர்கள் இரண்டு கைகளாலும் அறுகரிசியை எடுத்து "ஆல்போல் தழைத்து அறுகு போல் வேரூன்றி மூங்கில் போல் சுற்றம் சூழ பதினாறு பேறு பெற்று பெருவாழ்வு வாழ்க" என வாழ்த்தி உச்சியில் மூன்று முறை இட வேண்டும். நெல்லில் பிரித்தெடுக்கப்பட்ட அரிசியுடன் மஞ்சள் மா, பன்னீர், மலரிதழ்கள் ஆகியவவை கலந்து அட்சதை தூவுவதே முறையாகும்.

**26. நிறைவு**

மணமக்களின் கைகளில் கட்டப்பட்ட காப்புகளை அவிழ்த்து பவித்திரங்களைக் கழற்றி அவற்றுடன் பெற்றோர் பவித்திரங் களையும் வெற்றிலையில் வைத்து சேர்த்து குருக்களிடம் தட்சணையுடன் கொடுக்க வேண்டும்.

**27. ஆரத்தி**

இரு தரப்பிலும் இரு சுமங்கலிப் பெண்கள் ஆரத்தி எடுப்பார்கள். தம்பதிகளுக்கு தீய சக்திகளினால் தீமை ஏற்படாமலும் கண் திருஷ்டி நீங்கும் பொருட்டும் இவை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யப்படுகின்றன. அதனைத் தொடர்ந்து விருந்துபசாரம் நடைபெறும். மணமக்கள் இருவரும் அர்ச்சனைத் தட்டோடு ஆலயம் சென்று வணங்கி அர்ச்சனை செய்து மணமக்களின் வீட்டுக்குச் செல்வர். முதலில் பூஜை அறைக்குள் சென்று வணங்கி பின் பால் அருந்தக் கொடுப்பார்கள்.

**28. பூதாக்கலம்**

மணமக்கள் ஒரே இலையில் உணவு உண்பதைக் குறிக்கும். மணமகள் மணமகனுக்கு முதலில் தன் கையால் உணவூட்டிய பின் மணமகன் மணமகளுக்கு உணவூட்டல் வேண்டும். பின் தன் வீட்டுக்கு மணமகன் மணமக்களை அழைத்து செல்வார். அங்கும் ஆரத்தி எடுத்த பின்னர் மணமகள் வலது காலையெடுத்து வைத்து வீட்டினுள் செல்வார். முதலில் பூஜை அறையில் வழிபாடு செய்த பின்னர் பெற்றோர் கால்களிலும் விழுந்து வணங்குவார்.

கலத்தில் போடுதல் கிழக்கு மாகாண தமிழர்களுக்கே உரிய சிறப்பம்சமாகும். இது கிழக்கு மாகாண தமிழர்களுக்கு மட்டும் பதிவுத்திருமணத்திற்கு இணையாக பாராளு மன்றத்தில் சட்டமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

**29.மேலும் சில தத்துவங்கள்**

தாலி கட்டிய பின் மணமகன் மணமகளின் உச்சந்தலையில் குங்குமத்தால் திலகமிடுவார். இது அவள் தன் கணவனுக்கே உரியவர் என்பதை எடுத்துக் காட்டுவதாகும். அத்தோடு தான் மகாலட்சுமி வாசம் செய்வதும் அவ்விடத்தில் ஆகும்.

மாங்கல்யம் சூட்டும் போது கெட்டி மேளம் கொட்டுவது சபையில் உள்ளோர் தும்முதல், தேவையற்ற வார்த்தைகளை பேசுதல் போன்றவை மணமக்களுக்கு கேட்கக்கூடாது என்பதற்காகவேயாகும். மஞ்சள் கயிற்றில் தாலி கட்டும் போது மூன்று முடிச்சிகள்



போடுவார்கள். முதல் முடிச்சி கணவனுக்கு அல்லது புகுந்த வீட்டிற்குக் கட்டுபட்டவள் என்பதை உணர்த்துவதாகவும், இரண்டாவது முடிச்சி தாய் தந்தையருக்கு அல்லது பிறந்த வீட்டிற்குக் கட்டுபட்டவள் என்பதை உணர்த்து வதாகவும், மூன்றாவது முடிச்சி தெய்வத்திற்குப் பயந்தவள் என்பதை உணர்த்துவதாகவும் அமைகிறது.

தாலி கட்டும்போது தூவப்படும் அட்சதை மணமக்களை தீய சக்திகளிடம் இருந்து காப்பதற்காகவும் வளமான வாழ்க்கை அமைவதற்கும் ஆசீர்வதிப்பதற்குமாகும். தாலி கட்டும் போது கை விளக்கு ஏந்தி நிற்பதானது தாலி கட்டியதற்கு விளக்கு ஏந்தியவர் ஓர் சான்றாகவும் , இன்னொரு விளக்கு சகுனத் தடைகள் ஏற்படாமல் இருப்பதாகவும் அமைகின்றது.

மேற்படி திருமணச் சடங்குகள் அனைத்தும் இந்து முறைப்படி இறைவனைச் சார்ந்து செய்யப்படுவதால் அந்நாளில் விருந்தில் சைவ உணவு வழங்கப்படுவது சாலச் சிறந்ததாகும்.

**"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது"**


உசாத்துணை : இந்து மக்களுக்கு ஓர் கையேடு (02.04.2006), அகில இலங்கை இந்துமாமன்றம்.

**வேலுப்பிள்ளை
செல்லத்தம்பி கிருஷ்ணபிள்ளை**
தொழில் நுட்ப உத்தியோகத்தர்,
கிழக்குப் பல்கலைக்கழகம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஆயிரக்கணக்கான கல்விமான்கள் உருவாக ஆதரவு நல்கிய
## எமது ஆலயமும் கல்லடி - உப்போடை - நோச்சிமுனை மக்களும்
### கல்வி, கலாச்சார சரித்திரத்தில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவர்கள்



ஆன்மீகமும், கல்வியும் ஒரு சமூகத்தின் இரு கண்கள். இதனை உணர்ந்து கல்வி, கலை, பண்பாடு என்பவற்றை மக்கள் மத்தியில் மேலோங்க வைத்து அவர்களை உயர்ந்த ஸ்தானத்திற்கு வளர்த்து விடுவதில் எமது ஆலயமும், எமது பிரதேச மக்களும் வழங்கிய ஆதரவும், தூர நோக்கான நற்சிந்தனையுமே எமது பிரதேசத்தையும் தாண்டி பல கல்விமான்களும், சாதனையாளர்களும் உருவாகியுள்ளார்கள். இதனை நினைத்து எமது பிரதேசம் பெருமையுடன் தலைநிமிர்ந்து நிற்கின்றது.

**விவேகானந்தா மகளிர் கல்லூரி ஸ்தாபிப்பு**

19ம் நூற்றாண்டு ஆங்கிலேயர் ஆட்சிக்காலம் மட்டக்களப்பு நகர் புறங்களிலேயே கல்வி புகட்டப்பட்டது. இப் பகுதி வாழ் வசதி படைத்த சிலர் நகர்புற பாடசாலைகளை நாடி கல்வியை மேற்கொள்ளத் தொடங்கினர். நகர்புறக்கல்வி கூடங்களுக்கு மட்டக்களப்பு வாவியை படகுத்துறை மூலம் கடந்தும், மற்றும் சிலர் நடந்தும் கல்வியைக் கற்கும் நிலை இருந்ததனால் மிக சிலரே கல்வியைப் பெறக்கூடியதாயிருந்தது. நமது பிரதேச மக்கள் அனைவரும் கல்வி அறிவைப் பெற்று பொருளாதார ரீதியில் நிமிர்ந்து நிற்க வேண்டும் என்ற சமூக உணர்வுடனும், கல்வியில் புரட்சி செய்ய வேண்டும் என்ற நோக்குடனும் 1909ம் ஆண்டு தோ. கு. சபாபதிப்பிள்ளை உடையார் அவர்கள், ஆலய தர்மகர்த்தா கதிர்காமத்தம்பி உடையார் அவர்களுடனும் இணைந்து, எமது ஆலயத்துடனும், கல்லடி உப்போடை நொச்சிமுனை மக்களின் ஆதரவுடனும் தற்போது பிரபல்யமாக விளங்கும் விவேகானந்தா மகளீர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லூரியை ஸதாபித்தார்கள். அதைத் தொடர்ந்து 1912ம் ஆண்டு சுவாமி விவேகானந் தரின் நேரடி சிஷ்யை சகோதரி அவபாமியா அம்மையார் அவர்களை அழைத்து வந்து இப்பாடசாலையின் நிரந்தர கட்டடத்திற்கு அடிக்கல் நட வைத்ததின் மூலம் எம் மக்களின் நிரந்தர கல்விக்கு அத்திவாரம் இடப்பட்டது. சகோதரி அவபாமியா அம்மையார் அவர்கள் எமது ஆலயத்திற்கு வருகை தந்து எமது பிரதேசத்தையும், மக்களையும் ஆசீர்வதித்து சென்றது பெரும்பேறாகவே கருதப்படுகின்றது. இராமகிருஸ்ண மிக்ஷன் எமது பிரதேசத்திற்கு வரும் முன்பே எமது பிரதேச மக்கள் கல்வி யின்பால் அக்கறை கொண்டதை இச்சம்பவம் பறைசாற்றி நிற்கின்றது.

**சிவானந்தா தேசிய பாடசாலை ஸ்தாபிப்பு**

எமது பிரதேச மக்கள் ஆங்கில கல்வியின் முக்கியத்துவத்தை எமது ஆலய நிர்வாகத்திற்கு முன்வைத்தனர். இதனைக் கருத்திற் கொண்ட எமது ஆலயம், பிரதேச மக்களுடன் இணைந்து சுவாமி விபுலானந்தரை சந்தித்து தங்களது எண்ணக்கருவை சுவாமி களிடம் தெரிவித்து நமது பிரதேசத்திற்கு வருகை தருமாறு அழைப்புவிடுத்தனர். எமது மக்களின் தூய சிந்தனையை மெச்சிய சுவாமி அவர்கள் அதனை ஏற்று பெரும் உவகையுடன், 1925ம் ஆரம்பப்பகுதியில் வருகை தந்தார். அவரை கல்லடித்துறையிலிருந்து நமது ஆலயம், பிரதேச மக்களுடன் இணைந்து பல்லக்கில் சுமந்து வந்து அவருக்கு பெரும் வரவேற்பை அளித்து, எமது தாயாக நின்று அருள்பாலிக்கும் ஸ்ரீ பேச்சியம்மன் ஆலய பின்முன்றலில் கூட்டமொன்றை நடாத்தினர். அவ்வேளை பிரதேச மக்கள் காட்டிய அன்பை ஏற்று தனக்கு நிதி, நிலம், கட்டட வசதிகளை ஏற்படுத்தி வழங்கி உதவும் பட்சத்தில் ஆண்களுக்கான ஆங்கில பாடசாலை ஒன்றை நிர்வகிக்க தான் தயாராக இருப்பதாக சுவாமி அவர்கள் அறிவித்தார். அவ்வேளையில் ஆலய தர்மகர்த்தா K.O. வேலுப்பிள்ளை அவர்கள், ஏற்கனவே 1912 காலப்பகுதியில் பிரதேச மக்களின் கல்வி வளர்ச்சிக்காக தோ. கு. சபாபதிப்பிள்ளை உடையார் அவர்களாலும், ஆலய தர்மகர்த்தா கதிர்காமத்தம்பி உடையார் அவர்களாலும் வைப்பிலிடப்பட்டிருந்த 5000.00 களையும், தனக்கு சொந்தமான 15 ஏக்கர் நிலத்தையும் வழங்கி, கட்டட வசதிகளையும் ஏற்படுத்தி அதற்கு ஏற்படும் மேலதிக செலவுகளையும் பொறுப்பேற்பதாக பிரதேச மக்கள் சார்பில் தெரிவித்தார். அதைத் தொடர்ந்து 1925.11.26 அன்று எமது மக்கள் புடைசூழ தர்மகர்த்தா K. O. வேலுப்பிள்ளை அவர்கள் ஆலயம், மக்கள் சார்பில் சுவாமி விபுலானந்தரின் திருக் கரத்தால் அடிக்கல் நடவைத்தார். அதனைத் தொடர்ந்து கட்டடப்பணிகள் எமது ஆலய நிர்வாகம், ஊர் மக்கள் ஒத்துழைப்பு வழங்க வளர்ச்சியடைந்து பூர்த்தியாக்கப்பட்டு, சகல வளங்களுடன் கல்லடி உப்போடை, நொச்சி முனை மக்களுடன் இணைந்து 1928.04.25 அன்று சாசனம் மூலம் ராமகிருஸ்ண மிஷ னுக்கு சுவாமி விபுலானந்தர் ஊடாக வழங்கி வைக்கப்பட்டது. இச்சாசனம் மூலம் வழங்கப் பட்ட இடத்திலேயே சிவானந்தா தேசிய பாடசாலை, சிவபுரி, விபுலானந்தர் மணி மண்டபம், விபுலானந்தர் சமாதி, மாணவர் விடுதி, விளையாட்டு மைதானம் என்பன அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. 1929.04.15 அன்று சிவானந்த வித்தியாலயம் சமய பூர்வாங்க கிரியைகளுடனும், சமய அனுட்டா னங்களுடனும் ஆரம்பிக்கப்பட்டது.

**ராம கிருஸ்ணமிக்ஷன் மாணவர் இல்லம்**

1929 இறுதிப்பகுதியில் சுவாமி விபுலானந்தர் அவர்கள் வண்ணார் பண்ணையில் இயங்கிய இராமகிருஸ்ண மிஷ னிலிருந்து மாணவர்களை எமது பிரதேசத்திற்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைத்து வர ஒத்துழைப்பை நமது ஆலய நிர்வாகத்திடம் கோரினார். இதற்கு நமது மக்களும் பூரண மகிழ்வை தெரிவித்தனர். இம்மாணவர்களை தங்கவைப்பதற்கான விடுதி வசதிகளை ஆலய தர்மகர்த்தா K. O. வேலுப் பிள்ளை அவர்கள் தமது சொந்த இல்லத்தை வழங்கி உதவினார். இதன் பயனாகவே கல்லடி உப்போடையில் ராம கிருஸ்ணமிஷன் அமைய காரணமாக அமைந்தது என்பதை நாம் பெருமை கொள்ள வேண்டும்.

**வழித்தோன்றல்கள்**

மூத்த தலைமுறைகளின் அர்பணிப்புள்ள சேவைகளை இன்றைய தலைமுறை அவர்களின் வழித்தோன்றல்களாக முன்னெடுத்து வருவது பெருமைப் படக்கூடியது. குறிப்பாக எமது ஆலய முன்னாள் தலைவர் திரு. சி. தேவசிங்கன் யுத்த காலத்தில் கல்வி அபிவிருத்திச் சங்கத்தை ஸ்தாபித்து பெறுமதி மிக்க மாணவர்களை உருவாக்கி, சமூகத்திற்கு தந்து கொண்டிருக்கின்றார். அதேபோல் தற்போதைய ஆலய தலைவர் திரு. ச. சந்திரகுமார் ஹரி சிறுவர் இல்லத்தை ஸ்தாபித்து கஷ்டப்பிரதேச, வறிய, ஆதரவற்ற சிறார்களை அரவணைத்து அவர்கள் வாழ்வின் உயர்ச்சிக்கு பெரும் பங்காற்றி வருகின்றார். முன்னாள் உபசெயலாளர் திரு. பா. விமலநாதன், முன்னாள் பொருளாளர் திரு.பா.சந்திரசேகரம் ஆகியாரின் குடும்பத்தினர் (லீலாவதி குடும்பம்) கல்வி வளர்ச்சிற்கும், எமது பிரதேச இளைஞர்களை கட்டார் நாட்டிற்கு அழைத்துச் சென்று தொழில் வாய்ப்பைப் பெற்றுக் கொடுத்து (திரு. பா. கங்கேஸ்வரன்) பொருளாதார ரீதியில் நமது பிரதேசம் உயரவும் பெரும் பங்களிப்பை ஆற்றி வருகின்றனர். கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த தமிழ் பேசும் மக்கள் வாழும் ஒவ்வொரு கிராமத்திலும் நல்லாசிரியர்களும், பேராசிரியர்களும், கலாநிதிகளும், வைத்திய திலகங்களும், பொறியியலாளர்களும், சட்டத்தரணிகளும், அரச அதிகாரிகளும் உருவாக அத்திவாரம் இட்டது, நமது ஆலயத்தினதும், நமது பிரதேச மக்களினதும் தூர நோக்கான சிந்தனை என்பது மறுக்க முடியாத உண்மை. ஒரு ஊரினதும், சமூகத்தினதும் வளர்ச்சிக்குச் சான்றாக இருப்பது அந்த ஊரினது வரலாறும், அவ்வூரின் கல்வி, கலாச்சார, சமய விழுமியங்களினதும் வரலாறாகும். ஒரு கிராமம் வளர்சியடைந்து பட்டினமாக, நகரமாக காலவோட்டத்தில் மாறினாலும் அதன் படிப்படியான வளர்ச்சியும், வரலாறும் அதனோடு ஒட்டிய மக்களின் நிலைப்பாடும் கர்ண பரம்பரைக்கதையாக மாத்திரம் இருந்து விடாது எழுதப்பட்ட ஓர் ஆவணமாக இருக்க வேண்டியது அவசியமாகும். கல்லடி உப்போடை நொச்சிமுனை மக்களின் அர்ப்பணிப்புள்ள சேவைகள் கல்வி, கலாச்சார, சமய விழுமியங்களின் நிலைப்பாடுகள் எழுத்தில் இருப்பது பிற்கால சமூகத்திற்கு மிகவும் பிரியோசனமாக அமையும் என்பது சற்றேனும் ஐயமில்லை. மொத்தத்தில் எமது ஆலயமும், கல்லடி உப்போடை நொச்சிமுனை மக்களும் கல்வி, கலாச்சார சரித்திரத்தில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவர்கள்.


உசாத்துணை நூல்கள்

1. ராமகிருஸ்ண மிஷன் வெள்ளி விழா மலர்.
2. ராமகிருஸ்ண மிஷன் பவள விழா மலர்.
3. சிவானந்தா தேசிய பாடசாலை பொன் விழா மலர்.
4. சிவானந்தா தேசிய பாடசாலை பவள விழா மலர்.
5. விவேகானந்தா மகளீர் கல்லூரி 90ம் ஆண்டு மலர்.
6. விவேகானந்தா மகளீர் கல்லூரி நூற்றாண்டு மலர்.
7. மட்டக்களப்பின் பண்பாட்டியல் – திரு. காசுபதி நடராஜா, 2000.12.28, (தினக்கதிர்)
8. 1928.04.25 அன்று ராமகிருஸ்ண மிஷனுக்கு சுவாமி விபுலானந்தர் ஊடாக வழங்கப்பட்ட சாசனம். – (இலக்கம் – 2809)




**கந்தசாமி நடராஜா,**
நிருவாக சபை உறுப்பினர்.





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# ஆலயத்தில் செய்யக் கூடாதவை

1. கோவிலில் தூங்கக்கூடாது ..
2. தலையில் துணி, தொப்பி அணியக்கூடாது ...
3. கொடிமரம், நந்தி, பலிபீடம், இவைகளின் நிழல்களை மிதிக்க கூடாது ..
4. விளக்கு இல்லாமல் (எரியாத பொழுது) வணங்கக் கூடாது ...
5. அபிஷேகம் நடக்கும் பொழுது சுற்றி வரக் கூடாது ..
6. குளிக்காமல் கோவில் போகக் கூடாது ...
7. கோவிலில் நந்தி மற்றும் எந்த முர்த்திகளையும் தொடக்கூடாது ..
8. கையில் விளக்கு ஏந்தி ஆராதனை காட்டக் கூடாது..
9. மனிதர்கள் காலில் விழுந்து வணங்கக் கூடாது ...
10. கோவிலுக்கு சென்று திரும்பிய உடன் கால்களைக் கழுவக் கூடாது..
11. படிகளில் உட்காரக் கூடாது .
12. சிவபெருமான் கோவில்களில் அமர்ந்து வரவேண்டும், பெருமாள் கோவில்களில் அமரக் கூடாது .
13. வாசனை இல்லாத மலர்களை பூஜைக்கு அல்லது தெய்வங்களுக்குத் தரக் கூடாது .
14. மண் விளக்கு ஏற்றும் முன் அவைகளை கழுவி சுத்தம் செய்யாமல் ஏற்றக் கூடாது .
15. கிரணம் இருக்கும் பொழுது கோவிலை வணங்கக் கூடாது .
16. கோவிலுக்குச் சென்று விட்டு வெளியே வந்து தர்மம் செய்யக் கூடாது .
17. புண்ணிய தீர்த்தங்களில் வந்தவுடன் காலை வைக்கக்கூடாது. முதலில் நீரை தலையில் தெளித்துக் கொண்டு கால் அலம்ப வேண்டும். குளத்தில் கல்லைப் போடக்கூடாது.
18. கோயிலை வேகமாக வலம் வருதல் கூடாது.
19. தாம்பூலம் தரித்துக் கொண்டு கோயிலுக்குள் செல்லக்கூடாது.
20. சுவாமிக்கு நிவேதனம் ஆகும் போது பார்த்தல் கூடாது.
21. தேவதைகள் பலிபீடத்திற்கு நடுவிலும், லிங்கத்திற்கும் நந்திக்கும் நடுவிலும் செல்லக்கூடாது.
22. எவருடனும் வீண் வார்த்தைகள் கோயிலில் வைத்துப் பேசக்கூடாது.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய புனரமைப்புப் பணியில் தனிப்பொறுப்புகளை ஏற்றுக் கொண்டவர்கள் விபரம்

| தொ. இல | பெயர் விலாசம் | செய்யப்பட்ட வேலைகள் |
|---|---|---|
| 01 | Dr. K. பாலசுப்பிரமணியம்<br>லண்டன். | மணித்தூண் I -<br>நிர்மாணம் |
| 02 | சைவப்புலவர் திரு. M. சேமகரன்<br>அவுஸ்திரேலியா | மணித்தூண் II-<br>நிர்மாணம் |
| 03 | திரு. K.O.V. கதிர்காமத்தம்பி ஞாபகார்த்த நம்பிக்கை நிதியம் கல்லடி உப்போடை, நொச்சிமுனை | இராஜ கோபுர வர்ணம், ஸ்தூபி வர்ணம் |
| 04 | திரு. P. குமணதாஸ், லண்டன்.<br>திரு. S. பாலமுரளி, லண்டன்<br>திரு. T. ஜெகன், லண்டன் | கொடித்தம்ப மண்டப வேலைகள் |
| 05 | Dr. A. இளங்குமரன்,<br>கல்லடி உப்போடை | 10 பிள்ளையார் அவதார சிலைகள், கூரை ஓட்டு வர்ணம் எண்ணெய் மற்றும் வேலைகள் |
| 06 | திரு. K. சங்கரலிங்கம்,<br>கல்லடி, உப்போடை | வசந்த மண்டபம் மற்றும் மேல் கோபுரம் |
| 07 | திருமதி. சாந்தினி செல்வராஜா<br>திருமதி. சந்திரா சிவநாதன்<br>கல்லடி உப்போடை (லண்டன்) | சிவன்<br>ஆலய நிர்மாணம் |
| 08 | திருமதி. வாசுகி அருள்ராஜா<br>Dr. M. அகிலன்<br>கல்லடி உப்போடை, நொச்சிமுனை | லக்ஷ்மி<br>ஆலய புனரமைப்பு (வர்ணப்பூச்சு) |
| 09 | திரு.வை.க. கணேசானந்தம் குடும்பம், நொச்சிமுனை | நந்த கோபால் ஆலய புனரமைப்பு (வர்ணப்பூச்சு) |
| 10 | அமரர் தே. கு. சபாபதிப்பிள்ளை உடையார் குடும்பம்<br>(திரு. சி. விஜயகுமார், திரு. ந. இரகுகரன், திரு. இ. பிரபாகரன்), கல்லடி உப்போடை | நவக்கிரக<br>ஆலய நிர்மாணம் |
| 11 | திருமதி. வரகுணம் குடும்பம்,<br>கண்டி. | முருகன்<br>ஆலய புனரமைப்பு (வர்ணப்பூச்சு) |
| 12 | திருமதி. லீலாவதி குடும்பம்.<br>கல்லடி உப்போடை | முன் மண்டப தூண் (1) அலங்காரம் |
| 13 | 1ம் குறிச்சி பொதுமக்கள் | முன் மண்டப தூண் (2) அலங்காரம் |
| 14 | திரு. மு. வசந்தகுமார்<br>திரு.V. இந்திரராஜா குடும்பம்<br>கல்லடி உப்போடை | வசந்த மண்டபம் மற்றும்<br>யாழி உட்பட வசந்தமண்டப முன்பகுதி<br>நிர்மாணம் |
| 15 | திரு. S. சந்திரகுமார் குடும்பம்<br>தலைவர் - நொச்சிமுனை. | சிவலிங்கம் மற்றும் சிவன் கோயில் வேலைகள் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 16 | Eng. A. சுரேஸ்குமார் குடும்பம்<br>கல்லடி உப்போடை | பெரிய குடை<br>அன்பளிப்பு |
| 17 | திரு. S. ரவீந்திரன்<br>நொச்சிமுனை. | சண்டேஸ்வரர் ஆலய புனரமைப்பு |
| 18 | திரு. T. தேவதாஸ்,<br>திரு. T. மோகனதாஸ், நொச்சிமுனை. | ஆலய மதில் வர்ணம் |
| 19 | திருமதி. சிவனேசன் கனகாம்பிகை<br>கல்லடி உப்போடை | பிள்ளையார் அவதார சிலை |
| 20 | Dr. C. கனகராஜா<br>நொச்சிமுனை. | பிள்ளையார் அவதார சிலை |
| 21 | திரு. S. சுதர்ஷன்<br>கல்லடி உப்போடை | பிள்ளையார் அவதார சிலை |
| 22 | திரு. K. பத்மநாதன்<br>கல்லடி உப்போடை. | பிள்ளையார் அவதார சிலை |
| 23 | திருமதி. யோகேஸ்வரி சிறிபாலன்<br>ஜேர்மனி | ஸ்ரீ நாகதம்பிரான்<br>ஆலய மணித்தூண் |
| 24 | திரு. M. அரசரெட்ணம் குடும்பம்<br>நொச்சிமுனை. | பார்வதி அம்மன் ஆலய அமைப்பு |

## பொருள் உதவி செய்தோர்
## மற்றும் அரசுடனான நிதி வரவுக்கு உதவி நல்கியோர்.

01. திரு. K.O.V.K. விமலநாதன்
கல்லடி - கொடித்தம்ப மரம்

02. திரு. A. புவிதரன்
நொச்சிமுனை - மகா மண்டப நிலை

03. எந்திரி. S. மங்களேஸ்வரன்
கல்லடி - Water Proof வேஸ்

04. திரு. T. ஸ்ரீஸ்கந்தராஜா
நொச்சிமுனை - பஞ்சமுக வினாயகர் சிலை

05. திரு. உதயகுமார் குடும்பம்
மட்டக்களப்பு - பழனியாண்டவர் (தண்டாயுதபாணி)

06. கௌரவ. ஞா. சிறிநேசன் பா.உ
கம்பெரலிய திட்டம் ஊாக - 500,000/=

07. திருமதி. சிவப்பிரியா வில்வரெட்ணம்
பணிப்பாளர், கலாச்சார திணைக்களம்
கிழக்கு மாகாணம். - 600,000/=

08. உழவு இயந்திரம் பாவனைக்காக
வழங்கியவர்கள் - திரு. ந. சந்திரதாசன்
எந்திரி. S. மங்களேஸ்வரன்
திரு.பொ. குணசீலன்

09. தொழில்நுட்ப ஆலோசகர்கள் - எந்திரி. அ. சுரேஸ்
திரு.கோ. வரதராஜ்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மண்டலாபிஷேக பூசை உபயகாரர் விபரம்

| தொ.இல | பெயர்/விலாசாம் | தினம் |
|---|---|---|
| 1. | DR.K.பாலசுப்பிரமணியம் - இலண்டன் | 31.01.20 |
| 2. | திரு.S.சொக்கலிங்கம் - கல்லடி, உப்போடை | 01.02.20 |
| 3. | DR.A.இளங்குமரன் - கல்லடி,உப்போடை | 02.02.20 |
| 4. | திரு.N.ஹரிதாஸ், P.குணசீலன் - 1ம் குறிச்சி | 03.02.20 |
| 5. | திரு.S.பாலசுப்பிரமணியம் - நொச்சிமுனை | 04.02.20 |
| 6. | திருமதி.சாந்தினி செல்வராஜா - கல்லடி,உப்போடை | 05.02.20 |
| 7. | திருமதி.வசந்தா இராமநாதன் - கல்லடி,உப்போடை | 06.02.20 |
| 8. | திரு.அ.மோகன்ராஜ் - கல்லடி, உப்போடை | 07.02.20 |
| 9. | திரு.A.துஷ்யந்தன் - நியு டச்பார் வீதி, கல்லடி | 08.02.20 |
| 10. | திருமதி.ரவீந்திரன் கேலமதி - கல்லடி,உப்போடை | 09.02.20 |
| 11. | திருமதி.லீலாவதி குடும்பம் - கல்லடி,உப்போடை | 10.02.20 |
| 12. | திரு.சா.தம்பிராசா, விக்னகுமார் - நொச்சிமுனை | 11.02.20 |
| 13. | திருமதி.மனோன்மணி நடராஜா - நொச்சிமுனை | 12.02.20 |
| 14. | திரு.K.வெற்றிவேல் குடும்பம் - கல்லடி,உப்போடை | 13.02.20 |
| 15. | அமரர்.த.கணபதிப்பிள்ளை குடும்பம் - கல்லடி | 14.02.20 |
| 16. | திரு.துரைராஜசிங்கம் குடும்பம் - நொச்சிமுனை | 15.02.20 |
| 17. | திரு.மயில்வாகனம் குடும்பம் - நொச்சிமுனை | 16.02.20 |
| 18. | திரு.N.சுரேஸ் குடும்பம் - கல்லடி | 17.02.20 |
| 19. | திருமதி.விமலேஸ்வரி உதயகுமார் - கல்லடி உப்போடை | 18.02.20 |
| 20. | திரு.இராசேந்திரம், நீதிராஜா குடும்பம் - கல்லடி, உப்போடை | 19.02.20 |
| 21. | திரு.K.மகேஸ்வரக்குருக்கள், பிரதம குருக்கள் | 20.02.20 |
| 22. | திரு.ச.சந்திரகுமார் தலைவர் - நொச்சிமுனை | 21.02.20 |
| 23. | திரு.காசுபதி நடராஜா - கல்லடி | 22.02.20 |
| 24. | திரு.S.சங்கீவ்குமார் (ரமணன்) - கல்லடி,உப்போடை | 23.02.20 |
| 25. | திரு.பாலசுப்பிரமணியம்.குடும்பம் - நொச்சிமுனை | 24.02.20 |
| 26. | திருமதி.பா.சுமித்திரா குடும்பம் - கல்லடி,உப்போடை | 25.02.20 |
| 27. | திரு.Eng.மங்களேஸ்வரன் குடும்பம் - கல்லடி | 26.02.20 |
| 28. | திரு.ந.சந்திரதாஸன் குடும்பம் - கல்லடி,உப்போடை | 27.02.20 |
| 29. | திரு.பெரியதம்பி குமணதாஸ் குடும்பம் - நொச்சிமுனை | 28.02.20 |
| 30. | திரு.K.விமலநாதன். குடும்பம் - கல்லடி | 29.02.20 |
| 31. | திரு.புலவர்.M.சேமகரன்.அவுஸ்ரேலியா | 01.03.20 |
| 32. | திரு.இளையதம்பி. கிருஷ்ணமூர்த்தி குடும்பம், கல்லடி - உப்போடை | 02.03.20 |
| 33. | திரு.வே.ரவிநாதன் - நொச்சிமுனை | 03.03.20 |
| 34. | திரு.அசோக் குடும்பம் - கல்லடி சு. அசோக் | 04.03.20 |
| 35. | திரு.க.சந்திரகுமார், பா.சுபாகரன் - நொச்சிமுனை | 03.03.20 |
| 36. | திரு.திருமதி.பிறேமகுமார். - நொச்சிமுனை - நாவற்குடா | 06.03.20 |
| 37. | திரு.க.கணேந்திரன் குடும்பம் - நொச்சிமுனை | 07.03.20 |
| 38. | திரு.ஏ.இந்திரராஜா குடும்பம் (பானு) - கல்லடி - உப்போடை | 08.03.20 |
| 39. | திரு.நாகேந்திரன் குடும்பம் - கல்லடி,உப்போடை | 09.03.20 |
| 40. | திரு.டிரோஷன் குடும்பம் - கல்லடி - உப்போடை | 10.03.20 |
| 41. | திரு.சிவானந்தன் பாலமுரளி - இலண்டன் | 11.03.20 |
| 42. | செல்வி. த. பவித்திரா, த. தட்சாயினி - நொச்சிமுனை | 12.03.20 |
| 43. | திரு.மயில்வாகனம் கோவிந்தராஜா - நொச்சிமுனை | 13.03.20 |
| 44. | திரு.S.தேவசிங்கன் கல்லடி - கல்லடி, உப்போடை | 14.03.20 |
| 45. | திரு.க.சாந்தலிங்கம் - நொச்சிமுனை | 15.03.20 |
| 46. | திரு.மூ.அருளம்பலம் - ஆரையம்பதி | 16.03.20 |
| 47. | சங்காபிஷேகம் (பொது) | 17.03.20 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நன்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லடி உப்போடை நொச்சிமுனை ஸ்ரீ சித்தி விநாயகர் பேச்சியம்மன் நாகதம்பிரான் ஆலயபரிபாலன சபை - 2020



முதலாவதிசை இடமிருந்து வலம்

பா. சுபாகரன், க. நடராசா, பொ.குணசீலன் [உபதலைவர்], கி.சுகந்தன் [பொருளாளர்], ந. ஹரிதாஸ் [முகாமையாளர்], ச.சந்திரகுமார் [தலைவர்], சி. விஜயகுமார் [செயலாளர்],
க.முரளிதரன், இரா. இராஜரெட்ணம், வி. இந்திரராசா,

இரண்டாம் வரிசை இடமிருந்து வலம்

கி. அர்ஜீன், [illegible] யதுர்ஷன், தி. கஜிகரன், ம. பிரேமகுமார், [illegible].சுரேஸ்ஆனந்தம், ந. பாலசுப்பிரமணிம், பா. காந்தரூபன், செ. சுதர்மசீலன், ம. சிறிஸ்கந்தராஜா, அ. நிமால், ந.கோபிநாத், ஆ. பஞ்சலிங்கம்

மூன்றாம் வரிசை இடமிருந்து வலம்

தி. சிறிஸ்கந்தராஜா, அ. மோகன்ராஜ், ந. சந்திரதாசன், இரா. விக்னேஸ், மு. வசந்தகுமார் [உபதலைவர்], ப. சிவகுமார், இ. சத்தியராஜ் [உபசெயலாளர்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**கலாபூஷணம் திரு. க. கணேசானந்தம்**
ஆலோசகர்



**திரு. இரா. முருகதாஸ்**
ஆலோசகர்



**எந்திரி. மங்களேஸ்வரன்**
கணக்காய்வாளர்



**திரு. எஸ் ராஜ்மோகன்**
கணக்காய்வாளர்

## ஆலய பிரதம குரு : சிவஸ்ரீ அ.கு. லிகிதராஜக் குருக்கள் (தற்போது)

## ஆலய பணியாளர்கள்

**பணியாற்றியோர்**

திரு. S. கந்தலிங்கம்

திரு. சி. நமசிவாயம்

திரு. S. செல்வராஜா

திரு. S. திருநாவுக்கரசு

திரு. கு. பூபாலப்பிள்ளை

**பணியாற்றுபவர்கள்**

திரு. த. தவராஜா
திரு. த. லிங்கேஸ்வரன்
திரு. அ. சூசைப்பிள்ளை
திரு. க. யோகராசா
செல்வி. ச. மிதுஷனா
செல்வி. அ. காயத்திரி
திருமதி. க. ருக்குமணி
செல்வி. க. இலங்கேஸ்வரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Wanasinghe Printers,
496A, Trinco Road, Batticaloa. 065 2227170

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org